வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு வாரமலர்
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 26.11.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 350 | பக்கங்கள் : 18




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria — றியா பணப்பரிமாற்றம்
Western Union — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை




**07** பா.ஜ.க வெற்றிக்கு தலைவலியாகும் தமிழக ஆளுநர்



**08** தமிழ்கட்சிகளை மீண்டும் ஐக்கியப்படுத்த சிவில் சமூகம் முயற்சி



**09** நினைவிடத்தில் ஒருநாள் ஒன்றுகூடி அழுவதற்கும் உரிமை இல்லையா?



**11** ராஜபக்‌ஷக்களுக்கு எதிரான தீர்ப்பின் உண்மைத் தன்மையும் பின்விளைவுகளும்

### அரச ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு:
# இரு கட்டங்களாக ஜனவரி முதல் அமுல்!

கொழும்பு, ஜனவரி 26

அரச ஊழியர்களுக்கு முன்மொழியப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வில் 5 ஆயிரம் ரூபாயை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்க அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. மிகுதி 5 ஆயிரம் ரூபாய் ஏப்ரல் மாதம் முதல் வழங்கவும் ஆராயப் படுகின்றது.

15

## ரணில் சொல்லுவார் ஆனால் செய்யமாட்டார்!
### மனோ கணேசன் எம். பி.

கொழும்பு, நவ. 26

ஜனாதிபதி பெருந்தோட்ட அபிவிருத்திக்காக ஒதுக்கியுள்ள 400 கோடி ரூபாயை பெற்றுக்கொள்ள அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க சொல்வார் ஆனால், செய்யமாட்டார் - வரும் என்பார் ஆனால் வராது என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நீர்வழங்கல் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதம் நேற்று சனிக்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு அண்மையில், வந்து தெரிவிக்கும்போது 1948இல்

15

### மாவீரர் நினைவேந்தலுக்கு தடை:
## பொலிஸ் நிலையங்களின் மனுக்கள் கிளிநொச்சி நீதிமன்றால் நிராகரிப்பு

கிளிநொச்சி, நவ. 26

மாவீரர் நாள் நினைவேந்தலை தடைசெய்யுமாறு கோரி கிளிநொச்சி நீதிமன்றின் நியாயாதிக்க எல்லைக்குள் இயங்கும் 7 பொலிஸ் நிலையங்கள் தாக்கல் செய்த வழக்குகளை மாவட்ட நீதிமன்றம் நிராகரித்தது.

குற்றவியல் சட்டத்தின் 106ஆவது பிரிவின் கீழ் மாவீரர் நிகழ்வுகளை தடை செய்யுமாறு கோரி கிளிநொச்சி நீதிமன்றின் நியாயாதிக்க எல்லைக்குள் உள்ள 7 பொலிஸ் நிலையங்கள் தனித் தனியாக வழக்கு தாக்கல் செய்தன.

இந்த வழக்கு நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. இதன்போதுள்ள ஏழு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் முன்னிலையாகினர்.

இந்த வழக்குக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி

15

## கொக்குத்தொடுவாய் புதைகுழி நேற்றும் 5 எலும்புக்கூடுகள் மீட்பு

முல்லைத்தீவு, நவ. 26

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்றும் 5 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டப் பணிகள் கடந்த 20ஆம் திகதி ஆரம்பமானது. ஆறாவது நாளான நேற்றும் அகழ்வு பணி தொடர்ந்தது.

15



## மாவீரர்களை நினைவேந்த மன்னார் நீதிமன்று அனுமதி

மன்னார், நவ. 26

ஆட்காட்டிவெளி துயிலும் இல்லத்தில் அமைதியான முறையில் மாவீரர் நாள் நினைவேந்தலை முன்னெடுக்க மன்னார் நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது என்று சட்டத்தரணி எஸ். டினேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் 27ஆம் திகதி நடைபெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வுக்கு எதிராக அடம்பன் பொலிஸார்

15

### மாவீரர் நாள் நிகழ்வுகள்:
## தடை கோரி யாழிலும் வழக்குகள் தாக்கல்!

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுகளில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகளை தடை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று மனுக்களை பொலிஸார் தாக்கல்

15

## காவலில் இளைஞன் பலி: நான்கு பொலிஸார் கைது!
### திங்களன்று அடையாள அணிவகுப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 25 வயதுடைய இளைஞர் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நால்வரையும் எதிர்வரும் டிசெம்பர் 4ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில்

15

## வெவ்வேறு விபத்துகளில் காயமடைந்தோர் மரணம்!

யாழ்ப்பாணம், நவ. 26

கட்டடத்தில் இருந்து தவறிவீழ்ந்து கோமா நிலையில் இருந்த தொழிலாளி ஒருவரும், முச்சக்கர வண்டி மோதியதில் படுகாயமடைந்த யுவதி ஒருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

மத்திய கிழக்கு நாடான டுபாயில் கட்டட வேலைக்குச் சென்ற தெல்லிப்பழையை சேர்ந்த

15

## மலையக மக்களுக்கான தீர்மானங்களுக்கு ஆதரவு
### சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 26

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசின் திட்டமிட்ட இனப்படுகொலையிலும் ஈழ விடுதலை போராட்டத்திலும் பெரியளவில் தங்களை தியாகம் செய்த மலையக மக்கள்தான் இலங்கையின் பொருளாதாரத்தை இன்றும் காப்பாற்றிக் கொண்டிருப்பவர்கள். எனவே, அவர்களுக்கான காணி உரிமை, சம்பள அதிகரிப்புக்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டும். மலையக மக்களுக்காக எடுக்கப்படும் சகல தீர்மானங்களுக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். - இவ்வாறு இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற 2024 ஆம்

15

## இப்படியும் நடக்கிறது

ஓர் அரசனிடம் சுயமாக சிந்திக்கத் தெரியாத முட்டாள் ஒருவன் வேலை பார்த்து வந்தான். ஒரு நாள் அரசன் அவனுடன் வெளியூர் சென்றான். வழியில் இரவாகி விட்டது. எனவே அங்கிருந்த ஒரு சத்திரத்தில் தங்க முடிவு செய்து,

குதிரையை வெளியில் ஒரு மரத்தில் கட்டிவிட்டு, வேலைக்காரனிடம், இரவு முழுவதும் தூங்காமல் குதிரையைப் பார்த்துக் கொள்ளச் சொன்னார்.

இரவு முழுவதும் எப்படி தூங்காமல் இருப்பது என்று அவன் சந்தேகம் கேட்க, அரசனும் "ஏதேனும் தீர்க்க முடியாத பிரச்சினை பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தால் தூக்கம் வராது" என்றார்.

அவனும் சரி என்றான். சிறிது நேரம் கழித்து அரசர், அவன் என்ன செய்கிறான் என்பதை அறிய வெளியே வந்தார். அவனும், "அரசே, நான் தூங்கவில்லை. வானில் இருக்கும் நட்சத்திரங்கள் தானாக வந்ததா அல்லது யாரேனும் கொண்டு வந்து போட்டார்களா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

நல்லது என்று கூறிச்சென்ற அரசன் சிறிது நேரம் கழித்து மீண்டும் வந்தார். அவன் சொன்னான், "அரசே, கடலில் உப்பு தானாக வந்ததா அல்லது யாரேனும் கொண்டு வந்து கொட்டினார்களா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

அரசன் நிம்மதியுடன் படுத்து தூங்கிப் போனான்.

காலையில் எழுந்து வந்து பார்த்த போது வேலையாள் சீரிய சிந்தனை வசப்பட்டு இருப்பதைப் பார்த்த அரசன், "இப்போது என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

அவன் சொன்னான், "அரசே, உங்கள் குதிரை தானாக ஓடி விட்டதா அல்லது யாரேனும் திருடிச் சென்று விட்டார்களா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்".

இந்தக் கதைக்கும் இனிச் சொல்லப்போகின்ற விடயத்திற்கும் நிச்சயமாக எந்த சம்பந்தமும் இல்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்னை பற்றி பேசுகின்றபோதில் எல்லாம் அதனை வடக்கு பிரச்னை என்று மாத்திரமே குறிப்பிடுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றார். அவரைப் பொறுத்தவரை கிழக்கு மாகாணம் என்பது அண்ணளவாக மூன்று இனமக்களும் ஒரே அளவினராக வாழும் மாகாணம்.

ஒரு தடவை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்தபோது வடக்கு பற்றி மட்டுமே கதைத்துக்கொண்டிருந்தாராம். அப்போது அவர்களுடன் சென்றிருந்த மட்டு மாவட்ட எம்.பி. ஜனா, கிழக்கு பற்றி பிரஸ்தாபித்தபோது, அங்கு உங்களுக்கு ஒரு சில எம்.பி.க்கள் தானே இருக்கின்றனர். ஆனால் மற்றவர்களுக்கு பலர் இருக்கிறார்களே என்று சொன்னதாக கூட்டமைப்பின் தலைவர் ஒருவர் தெரிவித்திருந்தமை ஞாபகம்.

அதனால்தானோ என்னவோ ஜனாதிபதி ரணில் எப்போதும் இனப்பிரச்னை என்றால் அது வடக்கின் பிரச்னை என்பதுபோல கூறிவருகின்றார்.

அண்மையிலும் ஜனாதிபதி பாராளுமன்றில் பேசிய போது வடக்கின் பிரச்னைக்கு தீர்வுகண்டு அதனை அபிவிருத்தி செய்யப்போவதாக அறிவித்திருந்தார்.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை இது வடக்கு பிரச்னை என்ற இனப்பிரச்னையானாலும் அதற்கு தீர்வு என்று அவர் குறிப்பிடுவது மாகாணசபைகளுக்கு அதிகாரத்தை வழங்குவதுதான் என்பது நாம் அறியாததல்ல. அதுவும் பொலிஸ் அதிகாரம் இல்லாமல். ஆனால் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டால் அது வடக்கு மாகாணத்திற்கு மாத்திரம் வழங்கப்படப் போவதில்லை. நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும்தான் அதிகாரங்கள் வழங்கப்படும் என்பதும் நமக்கு தெரிந்ததுதான்.

அதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது, ஜனாதிபதி வடக்கு பிரச்னைக்கு தீர்வு என்று கூறிய விடயம் பத்திரிகையில் செய்தியாக வெளிவந்திருந்தது.

அந்த செய்தியை பகிர்ந்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர், "மன்னிக்கவும் ஜனாதிபதி அவர்களே, கிழக்கை விட்டுவிட்டு எத்தகைய அரசியல் தீர்வுகளையும் ஏற்பதற்கு நாங்கள் ஒருபோதும் தயாரில்லை" என்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அதாவது தீர்வு என்னவாக இருந்தாலும் அது வடக்குக்கும் கிழக்கிற்கும் கிடைக்கவேண்டும் என்கிறார். ஜனாதிபதி என்ன தீர்வைப்பற்றி கதைக்கிறார் என்பதும் அவருக்குத் தெரியாததல்ல.

பதின்மூன்றை ஆதரிப்பவர்களை எல்லாம் இந்தியாவின் கைக்கூலிகள் என்று சொன்னவை எல்லாம் வெறும் வாய்ச்சவடல்தானோ?.

**- ஊர்க்குருவி.**

# மறைத்து வைத்த அரிசியை கையகப்படுத்த நடவடிக்கை!

## உணவு பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 26

அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் மறைத்து வைத்திருக்கும் சம்பா, கீரி சம்பா அரிசி வகைகளை கையகப்படுத்தி சந்தைக்கு வழங்குவதற்கான சட்டமூலம் விரைவில் தயாரிக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் சம்பா, கீரி சம்பா அரிசி வகைகளின் தட்டுப்பாட்டுக்கு தீர்வாக இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் உள்ள சம்பா மற்றும் கீரி சம்பா கையிருப்புகளை பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் மறைத்து வைத்திருக்கின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இதன்காரணமாக இன்னும் இரண்டு மாதங்களுக்குள் இந்த சட்டமூலம் தயாரித்து முடிக்கப்பட்டு அதனடிப்படையில் அரிசி இருப்புக்கள் கையகப்படுத்தப்படும். இந்த சட்டமூலத்தை விரைவாக தயாரிப்பது தொடர்பில், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது சம்பா மற்றும் கீரி சம்பா அரிசிக்கான தட்டுப்பாடு செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# பணியின்போது உயிரிழந்த சாவகச்சேரி பொலிஸ் உத்தியோகத்தருக்கு பதவியுயர்வு

கொழும்பு, நவ. 26

சந்தேக நபரை துரத்தி சென்ற போது உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் சார்ஜன்ட் ஆகப் பதவி உயர்வு வழங்கப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஜா-எல பகுதியில் கைவிலங்குடன் நீரோடையில் குதித்து தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபரை துரத்தி சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரான கிருஷ்ணமூர்த்தி பிரதாபன் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி, பின்னர் ஜா-எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இஸ்ரேல் வேலை வாய்ப்பு விடயத்தில் இனவாத கருத்தை முன்வைக்காதீர்கள்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

கொழும்பு, நவ. 26

இஸ்ரேலுக்கு வேலை வாய்ப்புக்கு இலங்கையர்களை அனுப்பும் விடயத்தில் இனவாத கருத்துகளை முன்வைக்க வேண்டாம். இன, மத ரீதியில் கட்சிகளின் பெயர்களை வைத்துக்கொண்டு இவ்வாறு செயல்பட வேண்டாம் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது இலங்கையிலிருந்து 10 ஆயிரம் தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு வேலை வாய்ப்புகளுக்கு அனுப்பப்படவுள்ளமை தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்த சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கையின் வெளிநாட்டு கொள்கையின்படி நாம் ஓர் அணிசேரா நாடு. இஸ்ரேல் - காஸா யுத்தத்தை நாம் எதிர்க்கின்றோம். இதற்காக ஐ. நாவில் கூட நாம் குரல்கொடுத்துள்ளோம்.

இலங்கையிலிருந்து அரேபிய நாடுகளுக்கு பலர் வேலை வாய்ப்புகளுக்கு செல்கின்றனர். அதேவேளை ஏதாவது ஒரு நாடு எம்மிடம் தமது நாட்டுக்கான தொழிலாளர்களை கேட்கும் போது நாம் இன, மத ரீதியாக செயல்பட முடியாது.

இஸ்ரேல் - காஸா யுத்தம் ஆரம்பித்தபோது தொழிலாளர்களின் பாதுகாப்பு கருதி தொழிலாளர்களை அங்கு அனுப்புவதை தற்காலிகமாக இடை நிறுத்தியிருந்தோம். தற்போது இஸ்ரேலுக்கு அனுப்பப்படவுள்ள தொழிலாளர்களுக்கு இராணுவ பயிற்சி அளிக்கப்படுவதாக கூறப்படுவதில் எந்த உண்மையும் கிடையாது. இஸ்ரேலால் காஸாவில் பிடிக்கப்பட்ட இடங்களுக்கு இவர்கள் தொழிலுக்கு அனுப்பப்பட மாட்டார்கள்.

எனவே, இஸ்ரேலுக்கு இலங்கையிலிருந்து தொழிலாளர்களை அனுப்பக்கூடாது இனவாத கருத்துகளை முன்வைக்க வேண்டாம் இன, மத ரீதியில் கட்சிகளின் பெயர்களை வைத்துக் கொண்டு இவ்வாறு செயல்பட வேண்டாம் - என்றார். (ஐ)

# வெளிநாடு செல்ல முயன்ற வடக்கு இளைஞர்கள் கைது!

கொழும்பு, நவ. 26

மோசடியான வீசாக்களை பயன்படுத்தி ஒஸ்திரியா செல்ல முயன்ற கிளிநொச்சி, முள்ளிவாய்க்கால் இளைஞர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் 25, 27 வயது இளைஞர்கள் என்று தெரிய வருகின்றது. இவர்கள் துருக்கிய எயார்லைன்ஸ் விமானம் 11/731 இல் துருக்கியின் இஸ்தான்புல் நகருக்குச் செல்வதற்காக நேற்று காலை 07.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

துருக்கி எயார்லைன்ஸ் அதிகாரிகளிடம் தமது விமான அனுமதியை மேற்கொள்வதற்காக சமர்ப்பித்த ஆவணங்களில் ஒஸ்திரிய வீசாக்கள் தொடர்பில் சந்தேகம் கொண்ட அதிகாரிகள் அவற்றை கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு மற்றும் எல்லை ஆய்வு பிரிவின் அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில், இந்த வீசாக்கள் போலியானவை என தெரியவந்தது. பின்னர், இளைஞர்களிடம் விசாரணை நடத்திய போது, பொரளை பகுதியில் உள்ள தரகர் ஒருவரால் ஏற்பாடு செய்யப்பட்டதாக அதிகாரிகளுக்கு தெரியவந்தது.

இதன்படி, குடிவரவு - குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் இருவரையும் கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக கட்டு நாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர். (ஐ)



அகில இலங்கை தேசிய மட்ட வாத்திய பிருந்தா போட்டி அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் முதலாம் இடத்தை பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் தமது பொறுப்பாசிரியருடன் நிற்பதை படத்தில் காணலாம்.

# புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோன்?



கொழும்பு, நவ. 26

**தற்போதைய பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்புக் காலம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக் கோனை நியமிப்பதற்கு அரச உயர்மட்டத்தில் ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

தற்போதைய பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்ரமரத்னவுக்கு ஆரம்பத்தில் தலா மூன்று மாதங்கள் வீதம் இரண்டு தடவையும் பின்னர் தலா மூன்று வாரங்கள் வீதம் இரண்டு தடவையுமாக நான்கு தடவைகள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இறுதியாக இரண்டு தடவைகள் சேவை நீடிப்புக்கான அனுமதியை அரசமைப்பு பேரவையிடத்தில் கோரப்பட்டபோது, பேரவை யானது, ஏகமனதாக புதிய பொலிஸ் அதிபரை நியமிக்கு மாறு வலியுறுத்தி சேவை நீடிப்புக்கான அனுமதியை வழங்கியிருக்கவில்லை. எனினும், தலா மூன்று வாரங்கள் வீதம் சி. டி. விக்கிரமரட்னவுக்கு பதவிக் காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில்தான் தேச பந்து தென்னக்கோனை புதிய பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தகவல்கள் குறிப்பிடுகின்றன.

புதிய பொலிஸ் மா அதிபர் பதவிக்கான நியமனத்துக்கு தகுதி உடையவர்களாக லலித் பதிநாயக்க, நிலந்த ஜயவர்தன ஆகியோரும் உள்ளமையால் இப்போது யாரை நியமிப்பது என்பதில் சற்று குழப்பமான நிலைமைகள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## நீர்கொழும்பில் இருந்து யாழ். வரை சைக்கிள் பயணம் தொடங்கிய முதியவர்!

கொழும்பு, நவ. 26

'சமாதானத்துக்கான மிதி வண்டி பயணம்' என்ற தொனிப் பொருளில் 67 வயதுடைய நபர் ஒருவர் நேற்று சைக்கிளில் நீர் கொழும்பு கொச்சிக்கடை பம் புக்குளிய தேவாலயம் முன்னா லிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய 24 மணிநேர சாதனை பயணத்தில் ஈடுபட்டு பலரின் கவனத்தையும் ஈர்த்து வருகிறார்.

இச்சாதனையில் ஈடுபட்டுள்ள ரிச்சர்ட் பெர்னாண்டோ நுவன் புள்ளே என்ற இந்த நபர், 361 கிலோமீற்றர் தூரத்தை மிதிவண்டியில் 24 மணித்தியாலங்களுக்குள் கடந்து யாழ்ப்பாணத்தை வந்தடைவார் என்று கூறப்படுகின்றது.

இப்பயணத்தை ஆரம்பிப்பதற்காக பம்புக்குளிய பிரதேசத்தில் உள்ள முதியவரின் இல்லத்தில் இருந்து அவர் மேளதாள வாத்தியத்துடன் பிரதேசவாசிகளால் பம்புக்குளிய தேவாலயம் வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

அதனை தொடர்ந்து பம்புக் குளிய தேவாலயத்தில் இடம்பெற்ற சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்ட பின்னர், பிற்பகல் 12.45 மணியளவில் அவர் தனது பயணத்தை ஆரம்பித்தார்.

இந்த முதியவர் கடந்த வருடம் நவம்பர் 25ஆம் திகதி நீர்கொழும்பு, கொச்சிக்கடை பிரதேசத்தில் இருந்து மடு தேவாலயம் வரை 13 மணித்தியாலங்களுக்குள் மிதிவண்டியில் சென்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீனி உற்பத்தியை உயர்த்த நடவடிக்கை

கொழும்பு, நவ. 26

பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை அதிகரிப்பது தொடர்பான துறைசார் மேற்பார்வை குழு அடுத்த ஆண்டு சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயல்திட்டத்தை மூன்று மாதங்களுக்குள் தயாரித்து ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையில் சீனியின் தேவை சுமார் 6 இலட்சம் மெற்றிக் தொன்களாகும். நாட்டில் உள்ளூர் விநியோகத்திற்காக 10 வீதம் அல்லது அறுபதாயிரம் மெற்றிக் தொன் சீனி மாத்திரமே உற்பத்தி செய்யப்படுவதாக பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை அதிகரிப்பது தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கையில் தெரிய வந்துள்ளது. (ஐ)

## திருகோணமலை பஸ் நிலையத்தில் வெடிபொருட்களுடன் ஒருவர் கைது!

திருகோணமலை, நவ. 26

திருகோணமலை பஸ் நிலையம் அருகே வெடி பொருட்களுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை, பொலிஸார் நடத்திய சோதனை நடவடிக்கையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 10 ஜெலைற்றைன் குச்சிகள், 15 டெட்டனேட்டர்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைக்காகவே இந்த வெடி பொருட்களை சந்தேகநபர் கொண்டு சென்றிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## வவுனியா இரட்டைக் கொலை; தேடப்பட்ட சந்தேகநபர் கைது!

வவுனியா, நவ. 26

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் ஒருவர் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர்.

இந்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இதன்போது, மேலும் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையால் அவர்களை கைது செய்ய குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

குறித்த மூவரும் தலைமறைவாக இருந்ததால் அவர்களது கடவுச்சீட்டுகள் நீதிமன்றத்தால் முடக்கப்பட்டன. அவர்களை கைது செய்வதற்கான பகிரங்க பிடியாணை உத்தரவு கடந்த செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணை பிரிவினர் சந்தேக நபர்களில் ஒருவர், ஹொறவப்பொத்தானை பகுதியில் மறைந்திருந்த நிலையில் அவரை கைது செய்துள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை, வவுனியா, 4ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டார். (ஐ)

## யாழ். பல்கலை சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாக பதவி உயர்வு!





யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாண பல்கலைக்கழக தாவரவியல் துறை தலைவர் உட்பட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

விஞ்ஞான பீடத்தின் தாவரவியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஈ. சி. ஜெயசீலன், கணிதவியலும் புள்ளிவிபரவியலும் துறையை சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. கண்ணன், கலைப்பீடத்தின் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜே. இராசநாயகம் ஆகியோரை பேராசிரியர்களாக பதவி உயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை நேற்று சனிக்கிழமை ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழக பேரவையின் மாதாந்த கூட்டம் நேற்றுக் காலை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய, திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன்படியே, கலாநிதி ஈ. சி. ஜெயசீலன் தாவரவியல் பேராசிரியராகவும், கலாநிதி கே. கண்ணன் கணிதவியல் பேராசிரியராகவும், கலாநிதி திருமதி ஜே. இராசநாயகம் கல்வியியல் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டனர். (ஐ)

## போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய தாய், மகன் கைது!

கொழும்பு, நவ. 26

போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புபட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகத்துக்கு உதவியமை மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலம் பெறப்பட்ட 5 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான பணத்துடன் சந்தேக நபர்களான தாயும் மகனும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பணக் கொடுக்கல் வாங்கல்கள் உட்பட வெவ்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர்கள் கொழும்பு - பண்டாரகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைய அவரது வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 5 கோடியே 11 இலட்சத்து 12 ஆயிரத்து 900 ரூபாய் பணமும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், பண்டாரகம பிரதேசத்தில் உள்ள தனியார் வங்கி கணக்கு இலக்கத்துக்கு கோடிக் கணக்கில் பணம் வைப்பு செய்யப்படுவதாகவும் அந்த பணம் உடனடியாக ஏ.ரி.எம். இயந்திரத்தை பயன்படுத்தி மீள பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை குறித்த வங்கி கணக்கு இலக்கம் போலியான தகவல்களை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# மன்னார், பூநகரி மின் திட்டங்கள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும்

## மின்சக்தி அமைச்சர் சபையில் அறிவிப்பு

**கொழும்பு, நவ. 26**

**மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி திட்டம், பூநகரி மின்னுற்பத்தி திட்டம், சம்பூர் அனல் மின் நிலையத் திட்டம், மட்டக்களப்பு ஓட்டமாவடி மின் திட்டம் உள்ளிட்ட மின்னுற்பத்தியுடன் தொடர்புடைய 6 திட்டங்கள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் - என்று மின்சாரத் துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜய சேகர தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆகியவற்றுக்கான உத்தேச செலவினம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு,

எரிபொருள் மற்றும் மின்சார கட்டமைப்பில் கடந்த ஆண்டு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டோம். எரிபொருள் பற்றாக்குறை, மின் விநியோக துண்டிப்பை முன்னிலைப்படுத்தி தோற்றம் பெற்ற போராட்டம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. பெரும் சவால்களுக்கு மத்தியில் அமைச்சராக பொறுப்பேற்றேன். நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி, பிரதமர் உட்பட சகல தரப்பினருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக சந்தையின் விலைக்கேற்ப எரிபொருள் விலை மற்றும் மின்சார கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்கமைய 2022 ஒகஸ்டில் 9 ஆண்டுகளுக்கு பின்னர் மின்சார கட்டணம் திருத்தம் செய்யப்பட்டது. மின்சார கட்டணத்தை அதிகரிக்காமல் மின்னுற்பத்தி செலவுகளை முகாமைத்துவம் செய்ய 2014 முதல் 2022 ஆம் ஆண்டு முதல் காலாண்டு வரை திறைசேரி சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாயை செலுத்தியுள்ளது.

நாட்டின் மின்னுற்பத்திக்கான கேள்விக்கு அமைய மின்னுற்பத்தி நிலையங்கள் ஸ்தாபிக்கப்படவில்லை. சம்பூர் அனல் மின்நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு எடுத்த தீர்மானத்துக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் உயர்நீதிமன்றம் சென்றார்கள். இதனால் சம்பூர் அனல் மின்நிலைய திட்டம் கைவிடப்பட்டது.

இதனால் மின்சார சபை வருடாந்தம் 9 ஆயிரத்து 500 கோடி ரூபாயை வருடாந்தம் மேலதிகமாக செலவிட்டது. இதனை போல் உமா ஓயா திட்டத்துக்கு எதிராக பண்டாரவளை மற்றும் ஊவா வெல்லச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதனால் 900 கோடி ரூபாய் தாமத கட்டணத்தை செலுத்த நேரிட்டது. மின்வலுத்துறை தொடர்பில் எடுத்த தீர்மானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் அனைவரும் இன்றைய நிலைக்கு பொறுப்புக் கூறவேண்டும்.

நிறைவடைந்த 10 மாத காலப்பகுதியில் இலங்கை மின்சார சபை 6 ஆயிரம் கோடி ரூபாய் இலாபமடைந்துள்ளதாக எதிர்க்கட்சியின் உறுப்பினர் நளின் பண்டார குறிப்பிட்டுள்ளமை அடிப்படையற்றது. மின்சார சபை கடந்த 9 மாத காலப்பகுதியில் மாத்திரம் ஆயிரத்து 200 கோடி ரூபாய் நட்டத்தை எதிர்கொண்டுள்ளது. மின்சார சபை இலாபமடையுமாக இருந்தால் அதன் பயனை நாட்டு மக்களுக்கு நிச்சயம் வழங்குவோம் - என்றார். (ஐ)

# மண்ணெண்ணெய், டீசலுக்கு வரி விலக்கு அளிக்கப்படும்!

## மின்சக்தி அமைச்சர்

கொழும்பு, நவ. 26

வற் வரி அதிகரிப்பால் மண்ணெண்ணெய், டீசல் விலையில் தாக்கம் செலுத்ததாது வரி விலக்கு அளிக்கப்படும். அடுத்த ஆண்டு முதல் காலாண்டு பகுதியில் மத வழிபாட்டு தலங்களுக்கான மின்கட்டண திருத்தத்தில் சலுகை வழங்க எதிர்பார்த்துள்ளோம் என்று மின்சாரத் துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆகியவற்றுக்கான உத்தேச செலவினம் தொடர்பான விவாதத்தில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வற் வரி அதிகரிப்புடன் எரிபொருள் விலை சடுதியாக அதிகரிக்க கூடும் என எதிர்தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். வற் வரி தொடர்பில் ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இறுதி முடிவு அடுத்த மாதம் 10 ஆம் திகதி அறிவிக்கப்படும். அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வற் வரியில் மண்ணெண்ணெய் மற்றும் டீசலுக்கு வரி விலக்களிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அம்பாந்தோட்டையில் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிர்மாணிப்பு பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும். இந்த திட்டத்துக்கு அமைச்சரவை உப குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அடுத்த வாரம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கும் என எதிர்பார்க்கிறேன்.

இரண்டாவது சுத்திகரிப்பு நிலையத்தை ஸ்தாபித்தவுடன் பெற்றோலுடனான இதர பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும். அத்துடன் 27 ஆயிரம் மத வழிபாட்டுத் தலங்கள், பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள், பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு ஒரு வருட காலத்துக்குள் புதுப்பிக்கத்தக்க சக்தி வள பயன்பாட்டுடன் மின்சாரம் விநியோகிக்கப்படும் - என்றார். (ஐ)

# உடன் அமுலுக்கு வரும் வகையில் 'டோர் ரூ டோர் டெலிவரி' நிறுத்தம்!

கொழும்பு, நவ. 26

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பொருட்களை அனுப்பும் 'டோர் ரூ டோர் டெலிவரி' (DOOR TO DOOR) முறையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்த இலங்கை சுங்க திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாட்டினர் இம்முறையின் மூலம் இலங்கைக்கு பல்வேறு பொருட்களை அனுப்புவதுடன், குறித்த பொருட்கள் தனியார் போக்குவரத்து முகவர் நிலையங்கள் மூலம் நேரடியாக குறித்த நபர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. எவ்வாறாயினும், பொதுமக்களின் தொடர்ச்சியான முறைப்பாடுகள் மற்றும் அதன் ஊடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கருத்திற் கொண்டு, இந்த விநியோக முறையை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி முதல் அனுப்பப்படும் பொருட்களை இலங்கை சுங்கத்தின் சாதாரண முறையின் மூலம் இலங்கைக்கு அனுப்ப முடியும்.

மேலும், கடந்த மூன்று நாட்களில் "டோர் ரூ டோர் டெலிவரி" மூலம் பொருட்கள் மற்றும் சேவை விநியோக முறை மூலம் சுமார் 20 கிலோ போதைப்பொருள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சுங்க அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

வெளிநாட்டு போதைப் பொருள் கடத்தல்காரர்களால் தற்போது போதைப்பொருள் விநியோகம் இந்த முறை மூலம் இடம்பெறுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் முறையான சீர்திருத்த வேலைத்திட்டத்திற்கு உட்பட்டு அடுத்த வருடம் மீண்டும் குறித்த முறைமையை நடைமுறைப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# மகிந்தவை கொலை செய்ய போவதாகக் கூறியவர் கைது

கொழும்பு, நவ. 26

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இல்லம் முன்பாக சந்தேகம் ஏற்படுத்தும் முறையில் செயல்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர் கொழும்பில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்துக்கு முன்பாக சென்று, மகிந்தவை கொலை செய்வதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கிரிவெல பகுதியை சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர் என்றும் பொலிஸார் கூறினர். (ஐ)

# பேரவைக்கு உறுப்பினர் நியமன தாமதம் யாரும் யாரையும் குற்றஞ்சாட்ட முடியாது

## சபாநாயகர் மகிந்த யாப்பா

கொழும்பு, நவ. 26

அரசமைப்பு பேரவைக்கு இறுதி நியமனம் இதுவரை இடம்பெறாதமை தொடர்பாக யாரும் யாரையும் குற்றம் சுமத்த முடியாது. அரசமைப்பின் பிரகாரமே எங்களால் செயல்பட முடியும். இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அறிவிப்பேன் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அரசமைப்பு பேரவைக்கு சித்தார்த்தன் எம். பி. இதுவரை நியமிக்கப்படாதமை தொடர்பாக ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு நேற்று முன்தினம் சபாநாயகர் பாராளுமன்றில் விளக்கம் அளித்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அரசமைப்பு பேரவைக்கான இறுதி நியமனம் தொடர்பாக ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தி எழுத்துமூலம் அறிவிப்பேன். அரசமைப்பின் 21ஆம் திருத்தத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் காரணமாகவே இந்த நியமனத்தில் பிரச்னை ஏற்பட்டுள்ளது. இந்த நியமனங்கள் தொடர்பில் அரசமைப்பின் பிரகாரமே செயற்பட வேண்டும் என்றே சட்டமா அதிபரின் ஆலோசனையும் இருந்தது. இதனை மீறி செயல்பட எங்களுக்கு சட்ட அதிகாரம் எதுவும் இல்லை.

அதனால் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அறிவுறுத்த நடவடிக்கை எடுப்பேன். அவ்வாறு இல்லாவிட்டால், இந்த பிரச்னையை தீர்ப்பதாக இருந்தால் அரசமைப்பில் இருக்கும் அந்த உறுப்புரையை மாற்ற வேண்டும். அதனால் அரசமைப்பு பேரவைக்கு இறுதியாக பரிந்துரை செய்யப்பட்டவரை இது வரை நியமிக்கவில்லை என யாரையும் குற்றம் சுமத்த எவருக்கும் முடியாது. அரசமைப்பில் இடம்பெற்ற குறைபாடு காரணமாகவே இந்த விடயம் இடம்பெறாமல் இருப்பதற்கு காரணமாகும் - என்றார். (ஐ)

# மாவீரர் நினைவேந்தலுக்கு தடைவிதிக்க கோரி வழக்கு

## நாளை விசாரணைக்கு ஏற்பு

கிளிநொச்சி, நவ. 26

நான்கு மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தலுக்கு தடை கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நீதிவானால் நாளை திங்கட்கிழமைக்கு தவணையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

ஒலிபெருக்கி பயன்பாடு மற்றும் துயிலுமில்ல கட்டுமானம் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி தடை உத்தரவை பெறும் வகையில் பொலிஸார் நீதிமன்றில் வழக்குகளை தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கை திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்க நீதிவான் உத்தரவிட்டார். கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றின் நியாயாதிக்க எல்லைக்குள் உள்ள கனகபுரம், முழங்காவில், தேராவில் வடமராட்சி கிழக்கு உடுத்துறை துயிலுமில்லங்களில் மாவீரர் நினைவேந்தலை தடுக்கும் நோக்கில் இந்தத் தடை உத்தரவு கோரப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
26.11.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# முதியவர்களின் தமிழ்த் தேசியம்

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பொழுதுபோக்கு நிகழ்வுகள் தொடர பில் தமிழ்த் தேசியர்கள் மத்தியில் கவலைகள் வெளிப்படுகின்றன. அத்துடன், இவ்வாறான இசை நிகழ்வுகள் திட்டமிட்டு தமிழ்த் தேசியத்தை பல வீனப்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் சிலர் கூற முற்படுவதையும் காண முடிகின்றது. யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்களாகிவிட்டன. இந்த பதினான்கு வருடங்களில் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் மக்களுக்கு – குறிப்பாக, இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்டக்கூடிய அரசியல் அடைவுகள் எதனையும் காண்பிக்கவில்லை. தொடர்ந்தும் ஒரே மாதிரியான கதைகளையே கூறிவருகின்றனர். குறிப்பாக இளைஞர்களை தமிழ்த் தேசிய அரசியலின் பக்கமாக ஈர்ப்பதற்கான எந்தவொரு வேலைத் திட்டமும் தமிழ்த் தேசிய கட்சிகளிடம் இல்லை. இந்த நிலையில் மக்கள் களியாட்டங்களுக்கு பின்னால் செல்கின்றனர் என்று கவலைப்படுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

களியாட்டங்கள் மீதான ஈடுபாடு என்பது மக்களது அன்றாட வாழ்வின் ஓர் அங்கமாகும். மக்கள் எப்போதும் பழைய சம்பவங்களில் மூழ்கியிருப்பவர்கள் அல்லர். ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் சில கட்டுப்பாடுகள் – சில தடைகள் இருந்தன. அதன் காரணமாக சில விடயங்களை பார்ப்பதற்கும் அதனை அனுபவிப்பதற்கும் மட்டுப்பாடுகள் இருந்தன. ஆனால், இப்போது அப்படியில்லை. போருக்கு பின்னரான அரசியல் சூழலை முதலில் தமிழ்த் தேசியர்கள் என்போர் நன்கு வாசிக்க வேண்டும். நிலைமைகளிலிருந்து கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அவ்வாறில்லாது போனால் இவ்வாறு ஆதங்கப்படுவதிலேயே நேரத்தை விரயம் செய்ய நேரிடும்.

இன்று வடக்கு, கிழக்கில் இடம்பெறும் எதிர்ப்பு அரசியல் போராட்டங்களில் (அந்தப் பெயரில் இடம்பெறுபவை) சொற்ப எண்ணிக்கையானவர்களே பங்குபற்றுகின்றனர். ஆனால், களியாட்டங்களில் பல்லாயிரம் அளவில் திரளுகின்றனர். இது ஒரு பொதுவான நிலைமை. இதனை மக்களின் குறைபாடாக நோக்கினால் அது தவறானது. போருக்கு பின்னர் இடம்பெற்ற சில எதிர்ப்பு அரசியல் நடவடிக்கைகளில் மக்கள் திரண்டனர் – இளைஞர்கள் அணிதிரண்டனர். எழுக தமிழ் பேரணியில் மக்கள் ஆயிரக்கணக்கில் பங்குகொண்டனர். குறிப்பாக 'பொத்துவில் தொடங்கி பொலிகண்டி' எதிர்ப்பு பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டனர். நீண்ட காலத்துக்குப் பின்னர் பல்லாயிரக்கணக்கில் இளைஞர்கள் அணிதிரண்டனர். ஆனால், அதனை அரசியல் கட்சிகளின் தலைமைகள் எவ்வாறு கையாண்டன? அரசியல் கட்சிகளின் வாக்கு வேட்டை வெறியாலும் விடயங்களை ஒழுங்கமைப்பவர்கள் மத்தியில் காணப்படும் மோதல்களாலும் மக்கள் விலகிச் சென்றனர்.

தமிழ்த் தேசியர்கள் என்போர் முதலில் ஒரு விடயத்தைத் தெளிவாகக் குறித்துக் கொள்ள வேண்டும். அதாவது, யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் ஒரு தனித்தீவில் வாழும் மக்கள் அல்ல. அவர்கள் சந்தோசத்தை அனுபவிக்கக்கூடாது – அதற்கு பதிலாக, எப்போதும் போரின் வடுக்களையும் அதன் அவலங்களையும் எண்ணி மனம் வெந்துகொண்டிருக்க வேண்டுமென்று எண்ணக்கூடாது. இதேபோன்று, புலம்பெயர் அமைப்புகளும் தாயகத்தில் இடம்பெறும் பொழுதுபோக்கு நிகழ்வுகளின் பின்னால் ஏதோ சதியிருப்பது போன்று கதைகளைப் பரப்புவதை நிறுத்த வேண்டும். இன்று புலம்பெயர் சூழலிலுள்ள தமிழர்கள் பலர் தென்னிந்திய திரை நட்சத்திரங்களை அழைத்து நிகழ்வுகளை நடத்துகின்றனர். கனடாவில் அவ்வாறான நிகழ்வுகள் வருடத்தில் பல தடவைகள் இடம்பெறுகின்றன. அவ்வாறான சூழலில் தமிழ்த் தேசியம் நலிவுறுவதாக எவரும் விவாதிப்பதில்லையே – ஏன்?

இவ்வாறான நிகழ்வுகளால் ஒருபோதும் தமிழ்த் தேசியம் நலிவுறாது. மக்களுக்கு நம்பிக்கையளிக்கக்கூடிய தலைமைகள் இல்லாத போது மட்டும்தான் தமிழ்த் தேசியத்தின் மீதான நம்பிக்கையிலிருந்து மக்கள் வெளியேறுவர். இப்போது, மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய தலைமைகள் இல்லைமையே அடிப்படையான பிரச்னையாகும். தமிழ்த் தேசிய அரசியலை முதலில் முதியவர்களின் கூடாரத்திலிருந்து விடுவிக்க வேண்டும். அதிலிருந்துதான் ஒரு புதிய – முற்றிலும் பண்பு மாற்றம் பெற்ற அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த முடியும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப் பாரியளவில் வளர்ச்சியடையும்."*

**கிரேக்கப் பழமொழி**





## வாகரை துயிலும் இல்லத்தில் நினைவு கற்கள் உடைப்பு!

*மட்டக்களப்பு, நவ. 26*

*மட்டக்களப்பு - வாகரை - கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் நினைவுக் கல்வெட்டுள், கம்பி வேலி அமைக்கப்பட்ட கொங்கிறீட் தூண்களை இனந்தெரியாதோர் அடித்து உடைத்ததுடன், கொடிகளையும் அறுத்து எறிந்துள்ளனர்.*

*இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வேளை இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.*

*நாளை திங்கட்கிழமை மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதற்கு தயாராகும் விதமாக ஏற்பாடுகள் நடைபெற்று வந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

## இரு மாதங்களில் மட்டும் மண்சரிவில் 10 பேர் பலி!

*கொழும்பு, நவ. 26*

*கடந்த இரண்டு மாதங்களில் மண்சரிவில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். இதில், 5 மரணங்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*ஏனைய மரணங்கள் பதுளை, காலி மற்றும் கண்டி மாவட்டங்களில் பதிவாகியுள்ளன.*

*தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஆயிரத்து 559 அதிக ஆபத்துள்ள பகுதிகளை ஆய்வு செய்துள்ளது.*

*இதேவேளை, 14 மாவட்டங்களில் 14 ஆயிரத்து 200 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மண்சரிவு அபாயம் உள்ள வலயங்களில் வசிக்கின்றனர் என்று புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.*

*இவர்களில் சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர் என்று சிரேஷ்ட புவியியலாளர் லக்சிறி இந்திர திலக தெரிவித்துள்ளார். (ஐ)*

## மாவீரர்களின் பெற்றோர் உடுத்துறையில் கௌரவிப்பு



*வடமராட்சி, நவ. 26*

*வடமராட்சி கிழக்கு - உடுத்துறையில் மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை உடுத்துறையில் நடைபெற்றது.*

*நேற்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை நான்கு மாவீரர்களின் தாயார் ஏற்றி வைத்தார். மாவீரர்களின் நினைவு படத்துக்கான மலர் மாலையை மாவீரரின் சகோதரி ஒருவர் அணி வித்ததைத் தொடர்ந்து கௌரவிப்பு நடை பெற்றது.*

*இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் வட மாகாண சபை முன் னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தன் ஆகியோரும் பங்கேற்றனர். (ஐ-02)*

## மாவீரர்களின் பெற்றோர் கரவெட்டியில் மதிப்பளிப்பு



*வடமராட்சி, நவ. 26*

*மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கரவெட்டியில் நடைபெற்றது.*

*ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் இந்த நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவீரர்கள் பெற்றோர்கள் மங்கல வாத்தியம் முழங்க மாவீரர் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.*

*தொடர்ந்து, ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் தலைமையில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-02)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -105

# ஆளோலை என்னும் அடிமை முறை

ஆளோலை என்பது பண்டைய தமிழகத்தில் இருந்த ஓர் ஆள் அடிமை முறையாகும். அடிமையாவோர் அடிமையாளருக்கு எழுதிக் கொடுக்கும் ஓலைக்கு ஆளோலை என்று பெயர். நானும், என் வழித் தோன்றல்களும் உங்களுக்கும் உங்கள் சந்ததியாருக்கும் அடிமை என்று ஒருவர் ஓலையில் எழுதித் தருதலே ஆளோலை என்று சொல்லப்பட்டது. ஆளோலையில் எழுதிக் கொடுத்தவரின் கையெழுத்துடன் சாட்சிக் கையெழுத்தும் இருக்கும். தன்னை மட்டுமின்றி, தன் பரம்பரையினரையும் அடிமையாக எழுதிக் கொடுக்கும் பழக்கமும். வழக்கத்தில் இருந்தது. அடிமை தன் பணியில் தவறினால் அது குறித்து அடிமையாளன் ஊர் வழக்கு மன்றத்தில் முறையிடலாம். தக்க ஆளோலை இருப்பின் அடிமையாளனுக்கு அடிமையின் மேலுள்ள உரிமையை ஊரவை உறுதிப்படுத்தும். அடிமை விற்பனை, ஓலையில் பத்திரம் போல் பதிவு செய்யப்பட்டது. இது ஆளோலை, ஆள்விலைப் பிரமாண இசைவுத் தீட்டு, அடிமை விற்பனைப் பத்திரம் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன.

ஒருசில தமிழ் ஆய்வாளரின் கருத்துப்படி, தமிழ்நாட்டில் சோழர் காலத்தில் அடிமை முறை இருந்ததாகக் கூறப்படுகிறது. மன்னர்களும், வளம் படைத்தவர்களும் ஆண்களையும், பெண்களையும் விலைக்கு வாங்கிக் கோவில்களுக்கும், மடங்களுக்கும் தானமாக வழங்கியுள்ளனர். ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த அடிமை தீண்டா அடிமை என்றழைக்கப்பட்டார். இவ்வாறு அடிமைகளானவர் மீது மாடுகளுக்கு இடுவது போல் இலச்சினை பொறிக்கப்பட்டது. அரண்மனை அடிமைகளுக்குப் புலிச்சின்னமும், சிவன் கோவில் அடிமைகளுக்குத் திரிசூலச் சின்னமும், வைணவ கோவில் அடிமைகளுக்குச் சங்குச் சின்னமும், இலட்சினையாக இடப்பட்டன. நெல்குற்றுதல், வேளாண்மைப் பணிகள், கோவிற் பணிகள் ஆகியன அடிமைகளின் முக்கிய பணிகளாக காணப்பட்டுள்ளன.

அந்தணர் அடிமையாகும் வழக்கமில்லை. சோழர் காலத்தில் கோயில்கள், மடங்கள் ஆகியவற்றில் அடிமைகள் இருந்தனர். இவற்றிற்கு அடிமைகளைத் தானமாகக் கொடுத்தனர். அடிமைகள் வேளாண்மையிலும், அது சார்ந்த தொழில்களிலும் இடம் பெற்றிருந்தனர். “உவச்சர் பறை கொட்டும் பணியினைச் செய்தனர். அடிமைகளுக்கு முத்திரையிடப்பட்டது. (சைவத்தில் உள்ள தீக்கையும், வைணவத்தில் உள்ள சமாச் சரணமும் இந்த வகையைச் சார்ந்தவை) அடிமைகளுக்குக் கடும் தண்டனைகளும் விதிக்கப்பட்டன”.

ஆளோலை என்பதைப்போலவே கூழாள் என்ற சொல்லும்.“கூழாள்” என்ற சொல் பெரியாழ்வார் பாடலில் இடம் பெறுகிறது. இது பற்றிப் பெரிய வாச்சான் பிள்ளை தமது திருப்பல்லாண்டு வியாக்கியானத்தில் ‘கூழாள்’ என்ற சொல்லிற்கு “சோற்றுக்காக யாரேனும் தன்னை எழுதிக் கொடுக்கை” என்று விளக்கம் எழுதியுள்ளார்

சமூகத்தின் அடிமட்டத்தில் வலுவற்று இருந்தவர்களை ஆளோலை முறைப்படி அடிமைப்படுத்தும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததைச் சுந்தரரின் வரலாறு புலப்படுத்துகிறது. சுந்தரருக்குத் திருமணம் நிகழ இருக்கின்ற தருணத்தில் அங்கே வரும் வயது முதியவர் ஒருவர், சுந்தரரின் பாட்டனார் தம்மையும், தம்வழி வருவோரையும் அவருக்கு அடிமைப்படுத்தி ஆளோலை எழுதிக் கொடுத்ததைக் காட்டித் திருமணத்தைத் தடுத்து விடுகின்றார்

அதுபோல கூழாள் என்று ஒரு முறையும் வழக்கத்தில் உண்டான அடிமை முறை என்று சொல்லப்படுகிறது. இலக்கியத்தின் வளர் நுனியில் கவிதைகளிலும் அவ்வாறான அடிமைமக்களின் பாடுகள் காலந்தோறும் பேசு பொருளாகப் பேசப்படுவதை திரு.சிவராஜ் தனது முகநூல் பக்கத்தில் பின்வருமாறு பதிவிட்டிருக்கிறார்.

‘கூழாள்’ என்றொரு பழங்காலச் சொல் தமிழில் உண்டு. அச்சொல்லிற்கு ‘சோற்றுக்காக யாரேனும் தன்னை எழுதிக் கொடுக்கை’ என்று அர்த்தம். உண்ணும் உணவுக்காகத் தன்னையே எழுதிக்கொடுக்கும் மனிதர்களும் நம் சூழலில் வாழ்ந்திருக்கிறார்கள். எல்லாகாலத்திலும் எல்லோருக்கும் வாழ்வென்பது சமநிலையாக இருந்ததேயில்லை. ஏகப்பட்ட சமரசங்களுடன்தான் ஒவ்வொரு உயிரும் இங்கு பிழைத்துக் கிடக்கிறது. பாதி ரசமிழந்த கண்ணாடியின் பழுப்பேறிய வானத்தில் சில பறவைகள் பறந்து மறைவதைப்போல, இலக்கியமும் அவ்வப்போது சாமானியர்களைப் பிரதிபலிக்கும். எவ்வளவு புறந்தள்ளப்பட்டாலும் எளிய மக்களின் கதை எவ்வகையிலேனும் இலக்கியத்தில் மீளமீள முளைத்தெழும். இலக்கியத்தின் வளர்நுனியான கவிதையிலும் அம்மக்களின் பாடுகள் காலந்தோறும் பாடுபொருளாகப் பேசப்படுகின்றன.

ஆவணம் பறிக்கச் சென்ற வளவினி லந்தணாளன்
காவணத் திடையே யோடக் கடிதுபின் றொடர்ந்து நம்பி
பூவணத் தவரை யுற்றா ரவரலாற் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னாரை யார்தொடர்ந் தெட்டவல்லார்?

(இ-ள்.) ஆவணம்......அளவினில் - இவ்வாறு ஓலையை வலிந்து பறிக்கும்படி நம்பி ஆரூரர் சென்றபோது அந்தணாளன்.....ஓட - அந்தணாளன் மணப்பந்தரினுள்ளே ஓடவும் கடிது.....உற்றார் - அந்தப் பூவணத்தவரை விரைவாய்ப் பின் தொடர்ந்து சேர்ந்து பிடித்தனர் அவரலால்......வல்லார்? - திரிபுரமெரித்த மலை வில்லவராகிய அவரை நம்பிகளல்லாது வேறு யாவர் தாம் தொடர்ந்து எட்ட வல்லார்? (ஒருவருமில்லை என்றபடி.). (வி-ரை.) ஆவணம் - ஓலை. இங்கே அவர் ‘ஆளோலை யீதால்’ என்று குறித்த அடிமை ஓலை.

பண்டைய இலக்கியக் குறிப்பொன்றில் மேற்சொன்ன விடயத்தை மேலும் வலுப்படுத்துவதாகக் குறிப்பொன்று..... தமிழ்நாட்டில் சோழர் காலத்தில் அடிமைமுறை நிலை பெற்றிருந்தது. மன்னர்களும், வளம் படைத்தவர்களும் ஆண்களையும், பெண்களையும் விலைக்கு வாங்கிக் கோவில்களுக்கும், மடங்களுக்கும் தானமாக வழங்கினர். அடிமை விற்பனை, ஓலையில் பத்திரம் போல் பதிவு செய்யப்பட்டது. இது ஆளோலை, ஆள்விலைப் பிரமாண இசைவுத் தீட்டு, அடிமை விற்பனைப் பத்திரம் எனப் பெயர் பெற்றது. வறுமையின் காரணமாகத் தம் குடும்ப உறுப்பினர்களை விற்பதும் தம்மைத்தாமே விற்றுக் கொள்வதும் நிகழ்ந்துள்ளன. ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த அடிமை தீண்டா அடிமை என்றழைக்கப்பட்டார். இவ்வாறு அடிமைகளானவர் மீது மாடுகளுக்கு இடுவது போல் இலச்சினை பொறிக்கப்பட்டது. அரண்மனை அடிமைகளுக்குப் புலிச் சின்னமும், சிவன் கோவில் அடிமைகளுக்குத் திரிசூலச் சின்னமும், வைணவ கோவில் அடிமைகளுக்குச் சங்குச் சின்னமும், இலட்சினையாக இடப்பட்டன என அறியக்கிடக்கிறது.

# இந்தவார ராசிபலன் 26.11.2023 - 02.12.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - கார்த்திகை 10
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தசி

## மேஷம்
[அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம்]

கடந்த வார நெருக்கடி விலகும். ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் செயல்கள் யாவும் வெற்றியாகும். முயற்சி பலிக்கும். ஆரோக்கியம் சீராகும். எதிர்பார்த்த லாபத்தை அடைவீர். வெளிநாட்டு தொடர்பால் நன்மை உண்டாகும். அரசு வழி முயற்சியில் சில சங்கடம் உண்டாகும். வியாபாரத்தில் அதிக முயற்சி தேவை. திட்டமிட்டிருந்த பணி தள்ளிப்போகும். செலவிற்கேற்ற வருமானம் ஏற்படும். முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை .

## ரிஷபம்
[கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2]

வாரத்தின் முதல் நாளில் செயல்களில் நெருக்கடி உண்டாகும். அதன்பின் தடைப்பட்ட பணி நடந்தேறும். முயற்சி வெற்றியாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். வெளிநாட்டிற்கு செல்வ தற்காக மேற்கொண்ட முயற்சி பலன் தரும். தொழிலில் வேலைபளுவும் நட்பினால் ஆதாயமும் அதிகரிக்கும். பணியிடத்தில் இருந்த நெருக்கடி விலகும். எதிர்பார்த்தவற்றில் நன்மையா ன பலன் உண்டாகும். வெள்ளி அன்று புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும்.

## மிதுனம்
[மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3]

வாரத்தின் முதல் நாளில் உங்கள் விருப்பம் நிறைவேறும். சனிக்கிழமை எதிர்பாராத நெருக்கடி தோன்றும். திங்கள் முதல் எதிர்பார்த்த உதவி வரும். அரசு வழி முயற்சி வெற்றியாகும். வியாபாரத்தில் போட்டிட்யாளர்கர்ள் விலகிச் செல்வர். எதிர்ப்ர்ப்புகள் விலகும். வராமல் இருந்த பணம் வசூலாகும். உங்கள் முயற்சிக்கேற்ப லாபம் உண்டாகும். புதிய முயற்சியில் சாதகமான நிலை ஏற்படும். சனி, ஞாயிறில் செயல்களில் சங்கடம் தோன்றும்.அந்நியர்கர்ள் வழியே ஆதாயம் அதிகரிக்கும்.

## கடகம்
[புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம்]

நெருக்கடி விலகி உங்கள் முயற்சி நிறைவேறும். வியாபாரத்தை விரிவு செய்வீர். தொழிலில் இருந்த தடை விலகும். நிதிநிலை உயரும். ஒரு சிலர் புதிய சொத்து வாங்குவீர்கள் செயல்களில் கவனம் அவசியம். தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் எச்சரிக்கையாக செயல்பட வேண்டும். உங்கள் சமயோசித செயல்பாடுகளால் புதிய முயற்சி பலிதமாகும். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். வழக்கில் சாதக நிலை உண்டாகும். சங்கடம் நீங்கும்.

## சிம்மம்
[மகம், பூரம், உத்திரம் 1]

விநாயகருக்கு அருகம்புல் மாலை சார்த்தி வழிபட வாழ்க்கை வளமாகும். உங்கள் எண்ணம் நிறைவேறும். நிதிநிலை உயரும். உங்கள் செயல் வெ ற்றியாகும். புதன் அன்று புதிய முயற்சிகளைத் தள்ளி வைப்பது நல்லது. வாரத்தின் முற்பகுதியில் ஒருசிலர் புதிய வாகனம் வாங்குவீர். ஒரு சில செயல்களை யோசிக்காமல் செய்து அதில் லாபம் அடைவீர். உங்கள் செல்வாக்கு உயரும். வியாழன் அன்று செயல்களில் சில சங்கடம் தோன்றும்.

## கன்னி
[உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2]

கடந்த வாரங்களில் உண்டான சங்கடம் விலகும். மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும் சூரியன் உங்கள் முயற்சிகளை வெற்றியாக்குவார். ஜென்மசுக்கிரனால் பொருள் சேர்க்கை அதிகரிக்கும். விருப்பம் நிறைவேறும். மனதில் குழப்பம், டென்ஷன் ஏற்பட்டாலும், மூன்றாம் அதிபதி ஆட்சி பெறுவதால் துணிச்சலுடன் செயல்படுவீர். நினைத்ததை சாதித்துக் கொள்வீர். ஒரு சிலருக்கு புதிய சொத்துத் சேர்க்கை உண்டாகும்.அந்நியர்களால் லாபம் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சி வெற்றியாகும்.

## துலாம்
[சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3]

உங்கள் வார்த்தைகளில் தெளிவு இருக்கும். ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் ஆற்றல் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சி முன்னேற்றம் அடையும். வழக்கு சாதகமாகும். பணவரவில் இருந்த தடை விலகும் செயல் வெற்றியாகும். சாதுரியமாக செயல் பட்டு நன்மை அடைவீர். புதிய நண்பர்கள் அறிமுகம் ஆவர் அவர்களிடம் எச்சரிக்கை அவசியம். செலவு அதிகரிக்கும் என்றாலும் எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள்.

## விருச்சிகம்
[விசாகம் 4, அனுஷம், கேட்டை]

எதிர்பார்ப்பு எளிதாக நிறைவேறும். நினைத்தவற்றை சாதித்து முடிப்பீர். மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானால் முயற்சிகளில் இருந்த தடை விலகும். சுறுசுறுப்பாக செயல்படுவீர். உறவினர் ஆதரவு அதிகரிக்கும். தொழிலை விருத்தி செய்யும் முயற்சி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். உங்கள் வாழ்க்கையில் உண்டான சங்கடம் விலகும். எதிரி உங்களை விட்டுட் விலகிச் செல்லுவார். முயற்சிகளில் லாப நிலை உண்டாகும்.

## தனுசு
[மூலம், பூராடம், உத்திராடம் 1]

நவக்கிரக வழிபாடு நன்மை தரும். செயல்களில் இழுபறி உண்டாகும். எதிர்பாராத நெருக்கடி தோன்றும் என்றாலும் அதையெல்லாம் சமாளிக்கும் சக்தியும் உண்டாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். கடந்த வாரத்தில் ஏற்பட்ட சங்கடம் விலகும். உங்கள் முயற்சியில் லாபம் உண்டாகும். துணிச்சலுடன் செயல்பட்டு விரும்பியதை அடைவீர். ஒரு சிலர் புதிய முயற்சியில் ஈடுபடுவர். பணியாளர்கள் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

## மகரம்
[உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2]

பெரும்பாலான கிரகம் உங்களுக்கு சாதகமாக சஞ்சரிப்பதால் செயல் வெற்றியாகும். உத்தியோகத்தில் ஏற்பட்டட் பிரச்னைச் விலகும். தடைப்பட்டிருந்த பணம் வரும். அரசு வழி முயற்சி ஆதாயமாகும். கடந்த வார சங்கடத்தில் இருந்து விடுபடுவீர். மேற்கொள்ளும் முயற்சி ஒவ்வொன்றாய் நிறைவேறும். தொழிலில் உண்டான தடை விலகும். ஒரு சிலருக்கு சொத்துத் சேர்க்கைஉண்டாகும். துறையினரின் செல்வாக்கை உயர்த்துவர். ஊழியர்களுக்கு விரும்பிய இடமாற்றமும் பொறுப்பும் ஏற்படும்.


## கும்பம்
[அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3]

முயற்சி வெற்றியாகும். நெருக்கடி விலகி நன்மைகளைக் காண்பீர். பிரச்னைகளை சமாளிக்கும் அளவிற்கு உங்கள் நிலை மாறும். அரசு விவகாரங்களில் ஏற்பட்ட தடை விலகும். கடந்த வாரம் வரை இருந்த சங்கடம் விலகும். அலுவலகத்தில் ஏற்பட்ட பிரச்னை முடிவிற்கு வரும். புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவீர். உங்கள் செயல்களில் லாபம் உ ண்டாகும். முயற்சி முன்னேற்றம் அடையும். முன்பிருந்த சங்கடம் நீகும். இழுபறியாக இருந்த வழக்கு சாதகமாகும். சொத்தில் ஏற்பட்ட பிரச்னை தீரும்.

## மீனம்
[பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி]

குடும்பத்தில் நெருக்கடி, உடல்நிலையில் சங்கடம் தோன்றும். அலுவலக பணியாளர்களுக்கு வேலை அதிகரிக்கும் என்றாலும் லாபாதிபதி ஆட்சிபெற்று சஞ்சரிப்பதால் தொழில், வியாபாரம் விருத்தியாகும். லாபம் அதிகரிக்கும். நெருக்கடி நீங்கும். உங்கள் வைராக்கியம் நிறைவேறும். ஏழாமிடத்தில் சுக்கிரனும் கேதுவும் இணைந்திருப்பதால் எதிர்பாலினரால் ஒரு சில பிரச்னை உருவாகும் என்பதால் எச்சரிக்கை தேவை . நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் கவனம் அவசியம். எதிர்பார்ப்பு இழுபறியாகும். பணிபுரியும் இடத்தில் சில நெருக்கடி தோன்றி மறையும்.

# பா.ஜ.க வெற்றிக்கு தலைவலியாகும் தமிழக ஆளுநர்



சென்னை மடல்
-பகவான் சிங்-

அண்மைக் காலங்களில் இரண்டு - மூன்று முறை, 'ஈழநாடு' கட்டுரைகளில் நான் தமிழக ஆளுநர் ஆர். என். ரவி பற்றி எழுதியிருந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். மீண்டும் சென்ற சில நாட்களாக, சென்னையில் அவர், சர்ச்சைக்குரிய காரணங்களால் தலைப்புச் செய்திகளாகியுள்ள நிலையில், அவரைப் பற்றி மீண்டும் எழுதுவது அவசியமாகிறது.

இந்திய காவல் துறை சேவையில் (ஐ பி எஸ்), பல உயர் பதவிகளை வகித்து ஓய்வு பெற்றவர் ரவி. அதன் பிறகு, நரேந்திர மோடியின் பாஜக அரசு, அவரை, இந்தியாவின் சிக்கல் நிறைந்த வடகிழக்கு மாநிலங்களான மேகாலயா மற்றும் நாகாலாந்துக்கு ஆளுநராக நியமித்தது. பிறகு, 2021 செப்ரெம்பரில், அவரைத் தமிழக ஆளுநராக மாற்றியது. மத்தியில் ஆளும் காவி அரசு, திமுக அரசின் சுமுகமான செயல்பாட்டில் தடையை ஏற்படுத்தவே இவரை அனுப்பியிருக்கிறது என்பதை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் விரைவில் புரிந்துகொண்டார். தமிழக சட்ட மன்றத்தில் நிறை வேற்றப்பட்ட பல முக்கிய மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வைத்திருப்பது ரவியின் செயல்பாடுகளில் மிக முக்கியமாகக் கவலை யளிக்கும் விதத்தில் அமைந்தது. இதை எதிர்த்து தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் மனு செய்துள்ளது. இவற்றில் ஒரு

மசோதா, 2020 ஜனவரியிலிருந்து இவரது மேசையில் தூசி படிந்து கிடக்கிறது. இதனையடுத்து, நவம்பர் 10 அன்று, இத்தனை கால தாமதத்துக்கு விளக்கம் கோரி நீதிமன்றம் இவருக்கு நோட்டிஸ் அனுப்பியது.

அதையடுத்து, நவம்பர் 13 அன்று, இரண்டு மசோதாக்களைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பிய அளுநர் ரவி, மீதமுள்ள 10 மசோதாக்களை 'ஒப்புதலை நிறுத்தி வைக்கிறேன்' என்ற ஒற்றை வரியுடன் மாநில அரசுக்குத் திருப்பி அனுப்பியிருக்கிறார். இதனால் மேலும் எரிச்சலடைந்த உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி டி ஒய் சந்திரசூட் தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, "எங்கள் உத்தரவுக்குப் பிறகு நடவடிக்கை எடுத்த ஆளுநர், மூன்று ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருந்தார்?" என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. அபிஷேக் மனு சிங்க்வி, முகுல் ரோஹ்தகி மற்றும் பி வில்சன் (இவர் திமுகவைச் சேர்ந்த மூத்த மாநிலங்களவை உறுப்பினரும் கூட) ஆகிய மூத்த வழக்கறிஞர்கள், தமிழக அரசின் சார்பில் ஆளுநர் மீது அடுக்கிய குற்றச்சாட்டுகளால் சூடு பிடித்திருந்த நீதிமன்றம், இந்தியாவின் அட்டர்னி ஜெனரல் ஆர் வெங்கட்ரமணியின் (ஆளுநர் சார்பாக வாதாடியவர்) விளக்கங்களால் சற்று சாந்தமடைந்தது.

2020 ஜனவரி 13 முதல் ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட 181 மசோதாக்களின் பட்டியலையும் முன்வைத்த அவர், அவற்றில் 151 ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டவை என்பதையும் குறிப்பிட்டார். ஐந்து மசோதாக்களை மாநில அரசு திரும்பப் பெற்றுக் கொண்டதாகவும் ஒன்பது மசோதாக்கள் குடியரசுத் தலைவர் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் நீதிமன்றத்தின் முன் கூறினார். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 200ஆவது ஷரத்தின்படி, ஒப்புதலை நிறுத்திவைக்கும் ஆளுநர் அதற்கான காரணங்களை வெளியிடவேண்டும் என்றும் ஆனால், ஆளுநர் 'ஒப்புதலை நிறுத்திவைக்கிறேன்' என்று ஒற்றை வரியில் முடித்துக்கொண்டார் என்றும் சிங்க்வியும் ரோஹ்தகியும் தங்கள் வாதங்களை முன்வைத்தனர்.

ஆளுநர் கிடப்பில் போட்டு வைத்திருப்பதாக உச்ச நீதி மன்றத்திடம் திமுக அரசு முறையிடும் வாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 12 மசோதாக்களும், தமிழக அரசால் உருவாக்கப்பட்ட பல்வேறு பல்கலைக்கழகங்களுக்குத் துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் பெற்ற வேந்தராக, ஆளுநருக்குப் பதிலாக முதலமைச்சரே இருக்கவேண்டும் என்ற திருத்த மசோதாக்கள்தாம். தற்சமயம், தமிழக பல்கலைக்கழகத் துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் ஆளுநரிடமே உள்ளது. ஆளுநரால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக்கொண்ட ஒரு 'தேடுதல் குழு'வின்

## மாநிலங்களை கட்டுப்படுத்தும் மத்திய அரசுகள்

பரிந்துரையின்படி, தனக்கு முன் வைக்கப்படும் பெயர்களில் ஒருவரைத் துணைவேந்தராக நியமிக்கிறார் ஆளுநர். கடந்த அதிமுக ஆட்சியின் போது, இத்தகைய துணை வேந்தர் நியமனங்களில் மாநில அரசு முடிவெடுத்ததாக ஊழல் குற்றச்சாட்டுகள் தீவிரமாக எழுந்தன. வேந்தர் பதவி ஆளுநரிடமிருந்து பறிக்கப்பட்டு முதலமைச்சருக்கு வழங்கப்பட்டால், மீண்டும் துணை வேந்தர் நியமனத்தில் முறைகேடுகள் ஏற்படலாம் என்பதனால், அதைத் தடுக்கவே இவர் இந்த

மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க மறுக்கிறார் என்று ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உச்ச நீதிமன்றம் இந்த வழக்கின் விசாரணையை டிசம்பர் முதல் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. அந்தத் திகதியில், ஆளுநரின் பரிசீலனைக்குக் காத்திருக்கும் மசோதாக்களின் நிலையைச் சமர்ப்பிக்குமாறு அட்டர்னி ஜெனரல் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். நவம்பர் 18 அன்று தமிழக சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தின்போது, ஆளுநர் ரவி ஒப்புதலை நிறுத்தி வைத்திருக்கும் பத்து மசோதாக்களை மீண்டும் பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கக் கோரி முதலமைச்சர் ஸ்டாலின் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை நீதிமன்றம் கருத்தில் கொண்டிருக்கக்கூடும். இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, ஸ்டாலின், ஆளுநரின்மீது ஒரு நியாயமான, கடுமையான விமர்சனத்தை முன்வைத்தார் - மாநில அரசு, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பிய மசோதாக்களைக் கிடப்பில்போட அவர் முடிவெடுத்தது, சட்டத்துக்கும் மக்களுக்கும் அவரது மனசாட்சிக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக, சட்டப்பேரவையின் இறையாண்மைக்கும் விரோதமானது என்றார். எதிர்க்கட்சிகளான அதிமுகவும் பாஜகவும் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, அதில் கலந்துகொள்ளவில்லை. இப்போது இந்தப் பத்து மசோதாக்களும் மீண்டும் ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாநில அரசு மீண்டும் அனுப்பும் மசோதாக்களுக்கு அரசமைப்புச் சட்டத்தின்படி, ஆளுநர் ஒப்புதல் அளிப்பதுதான் மரபு.

ஆளுநர் ரவி இப்போது இக்கட்டான சூழலில் சிக்கியுள் ளார்.

மிகச் சிறந்த கல்வியறிவும் நீண்ட காவல் துறை அநுபவமும்கொண்ட புகழ் மிக்க அதிகாரியாக இருந்த ஆளுநர் ரவி, 'சனாதன தர்மம்' என்ற, காவியை எதிர்க் கும் திராவிட இயக்கத்துக்கு விரோதமான அரசியல் நகர்வுகளிலிருந்து விலகி, எச்சரிக்கையுடனும் விவேகத் துடனும் செயல்பட்டிருந்தால், இந்த மலிவான சர்ச்சை யில் சிக்கியிருக்கமாட்டார். அதுபோன்ற சூழல்களில், அரசியலுக்கு அப்பாற்பட்டு, அரசியலமைப்பு வழங்கி யுள்ள அதிகார வரம்பிற்குட்பட்டு செயல்படுவதை விடுத்து, சனாதனப் பிரச்சாரத்தில் ரவி ஈடுபட்டார். அரசியல் ரீதியாகப் பார்த்தால், அடுத்த ஆண்டு மே மாதம் நாடாளுமன்றத் தேர்தல் வரவிருக்கும் சூழலில், ஆளுநர் ரவி, மோடியின் பாஜகவுக்கும், திராவிடக் கட்சிகளைத் தேர்தலில் வெல்லப்போவதாகச் சூளுரைக் கும் பாஜகவின் மாநிலத் தலைவருமான அண்ணா மலைக்கும்கூட தானே ஒரு தலைவலியாக உருவெடுத்து வருகிறார்.

திமுகவின் தாக்குதலுக்கு ரவி ஆளாகும்போதெல்லாம் தமிழக பாஜக நிர்வாகிகள் அவருக்கு ஓடி வந்து ஆதரவு தெரிவித்து வந்தனர் - சாதி அடிப்படையில் சமூகப் பிரிவினையை ஏற்படுத்தி, தலித்துகளை அடித்தட்டு மக்களாக்கி, இழிவாகக் கருதப்படும் வேலைகளை அவர்களுக்கென்று ஒதுக்கும் சனாதன தர்மத்தை ஒழிப்பதே திராவிடத்தின் நோக்கம் என்று ஸ்டாலினின் மகனும் அமைச்சருமான உதயநிதி பேசியபோது அதற்கு, சனாதன தர்மத்தை ஆதரித்துப் பேசி, எதிர்வினையாற்றியவர் ஆளுநர். ஆனால், இப்போது, உச்ச நீதி மன்றமே அவரது நடத்தை குறித்துத் தீவிரமாகக் கேள்வி எழுப்பியுள்ள நிலையில், தனது பாஜக நண்பர்களிடமிருந்து வெளிப்படையான ஆதரவைப் பெற ரவியால் முடியவில்லை. ரவிக்கு நெருக்கமாக இருந்தால் அது எதிர்வரும் தேர்தலில் தங்கள் வெற்றியைப் பாதிக்கக்கூடும் என்று அவர்கள் அச்சம் கொண்டிருக்கலாம்.

அதற்காக, மோடியும் அவரது நம்பிக்கைக்குரிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் ரவிக்கு பதிலாக, காவிச் சாயம் பூசப்படாத வேறு ஒருவரை ஆளுநராக நியமிப்பார்கள் என்று பொருளில்லை இப்போதைக்கு, அதாவது மேதேர்தலுக்கு முன்பு இது சாத்தியப்படாது. ரவியைத் திரும்பப் பெற்றால், பாஜக தங்களுக்கு அடி பணிந்து விட்டது என்று திராவிடம் அவர்களைத் தேர்தல் களத்தில் எள்ளி நகையாடும். இருப்பினும், வரும் தேர்தலில் திமுகவின் அனல் பறக்கும் பிரச்சாரத்தின் தீவிரத்தைக் குறைக்கும் வகையில், உள்துறை அமைச்சகத்தின் ஆடம்பரமான உயர்பதவி ஒன்றில் ரவியை அமர்த்தி, அவரை இங்கிருந்து அகற்ற மத்திய அரசு முடிவு செய்யலாம் எனச் சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆளுநர் பதவியில் இருந்துகொண்டு, அரசியலில் ஈடுபட்டு, மாநில அரசுக்குக் குடைச்சல் கொடுப்பதில் தன் அறிவுத் திறமையை வீணடிக்கும் செயலை ரவி மட்டும் செய்யவில்லை. மத்திய பாஜக அரசால் நியமிக்கப்பட்ட பல ஆளுநர்கள், தத்தம் மாநில அரசுகளுடன் மோதல் போக்கைக் கடைபிடித்து வருகிறார்கள். பல்வேறு மாநிலங்களில் அண்மைக் காலங்களில் இந்த ஆளுநர்களின் போக்கு குறித்து உச்ச நீதி மன்றமும் கேள்விகளை எழுப்பியுள்ளது. மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் கேரள மாநில அரசும் ஆளுநருக்கு எதிராக, நீதி மன்றத்தை நாடியுள்ளது. ஆளுநர் பதவியைத் துஷ்பிரயோகம் செய்வது வெறும் பாஜக அரசு மட்டுமல்ல. முந்தைய ஆட்சிகளும்

குறிப்பாக, இந்திரா காந்தி அரசு இதற்குப் பெயர் போனது. காங்கிரஸ் ஆளாத மாநில அரசுகளைக் கட்டுப்பாட்டில் வைக்க அவர் ஆளுநர் பதவியைப் பெருமளவு பயன்படுத்தினார். கலைஞர் ஆட்சியும் இதுபோல் பலியானது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட ஆளுநர் பதவியை இன்னும் நாம் பின்பற்றவேண்டியது அவசியமா என்ற விவாதமும் நாட்டின் அறிவுஜீவிகள் மத்தியில் மீண்டும் தற்போது எழுந்துள்ளது. சூரியாஸ்தமனமில்லாத தங்களது பரந்து விரிந்த சாம்ராஜ்யத்தின் பல்வேறு மாகாணங்களில் மண்ணின் மைந்தர்களையும் தலையாரிகளையும் தங்கள்

கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு, ஆங்கிலேயர்கள், வெள்ளை ஆளுநர்களை நியமித்தார்கள்.

(14ஆம் பக்கம் பார்க்க)



## ஆங்கிலேயருக்கு தேவையாயிருந்த ஆளுநர் பதவி இப்போதும் அவசியமா?

**சில மாதங்களுக்கு முன்னர், அமலாக்கத்துறையால் அமைச்சர் செந்தில் பாலாஜி ஓர் ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டார். உடனடியாக ஆளுநர் ரவி, அவர் பதவியில் நீடித்தால் விசாரணையின் போக்கைப் பாதிக்கும் வகையில் செயல்படக்கூடும் என்ற அடிப்படையில், அவரைப் பதவி நீக்கம் செய்யும் உத்தரவு ஒன்றை அவசர கதியில் வெளியிட்டார். அரசியலமைப்புச் சட்டத்தின்படி, அமைச்சரவை மாற்றம் என்பது முதல்வரால்தான் செய்யப்பட வேண்டும் என்றும், ஆளுநர் அரசமைப்புக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததாகவும் கடும் கண்டனங்கள் எழுந்ததையடுத்து, அந்த உத்தரவை அவர் திரும்பப் பெற்றார். அமைச்சரவையிலிருந்து செந்தில்பாலாஜியை விலக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்த ஸ்டாலின், அவரை இலாகா இல்லாத அமைச்சராகத் தொடரச் செய்தார். தர்மசங்கடத்தில் வீழ்ந்த ரவி, மத்திய உள்துறை அமைச்சரின் அறிவுறுத்தலுக்கு இணங்கவே, தனது உத்தரவைத் திரும்பப் பெற்றதாகக் கூறினார்.**

**விவேகமில்லாத, ஆழ்ந்த சிந்தனையில்லாத, சட்ட வல்லுநர்களின் ஆலோசனையின்றி ரவியால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை, அவரையும், அவரது காவி முதலாளிகளையும் அவமானமானத்தில் தள்ளியது என்பதைக் கூறவும் வேண்டுமா?**

# தமிழ் கட்சிகளை மீண்டும் ஐக்கியப்படுத்துவதற்கு
# சிவில் சமூகம் முன்னெடுக்கும் முயற்சி



## வீரகத்தி தனபாலசிங்கம்

மக்கள் முறைப்பாட்டுக்கான குழு என்ற பெயரில் இயங்கும் வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்பு யாழ்நகரில் தந்தை செல்வா கலையரங்கில் நவம்பர் 18 சனிக்கிழமை மாலை அரசியல் கருத்தாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

அதன் நோக்கம் தமிழ் அரசியல் கட்சிகள் மீண்டும் ஐக்கியப்பட்டு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கையாளுவதற்கு ஒருங்கிணைந்த அணுகுமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்துவதேயாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற அந்த நிகழ்வில் அரசியல் ஆய்வாளர்களான யதீந்திரா, நிலாந்தன் ஆகியோருடன் பத்திரிகையாளர் என்ற வகையில் இந்த கட்டுரையாளரும் கருத்துக்களை முன்வைத்தார்.

சபையோரில் அதிகப் பெரும்பாலானவர்கள் அரசியல்வாதிகளாகவும் அரசியல் மற்றும் சமூக ஆர்வலர்களாகவுமே இருந்தனர். குறிப்பாக எந்த தமிழ்க் கட்சிகள் மீண்டும் ஐக்கியப்படவேண்டும் என்று சிவில் சமூக அமைப்பு எதிர்பார்க்கிறதோ அந்த கட்சிகளில் முக்கியமானவற்றின் தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

அரசியல்வாதிகள் பலரினதும் வருகை கருத்தாடலை ஏற்பாடு செய்த சிவில் சமூக அமைப்புக்கு திருப்தியளித்திருக்கக்கூடும். மீண்டும் ஐக்கியப்பட்டுச் செயற்பட வேண்டியவர்கள் என்று எதிர்பார்க்கப்படுபவர்களுக்கு நேரடியாகவே செய்தியைக் கூறுவதற்கு கருத்தாடல் வாய்ப்பைக் கொடுத்தது.

இந்த நிகழ்வின் பின்புலம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப் படுகின்றன. சில தூதரகங்கள் இந்த சிவில் சமூக அமைப்பை ஊக்கப்படுத்தி கருத்தாடலை ஏற்பாடு செய்வித்ததாகவும் கூட சில ஊடகங்களில் கருத்துக்கள் வெளியாகின. இலங்கை அரசியல் பரப்பில் எத்தகைய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டாலும், இன்றைய புவிசார் அரசியல் நிலைவரங்களின் அடிப்படையில் இத்தகைய விமர்சனங்கள் முன்வைக்கப்படுவது வழமையாகிவிட்டது.

அரசியல்வாதிகளை அழைத்துவந்து பத்திரிகைகளுக்கு கட்டுரைகளை வரைபவர்கள் மூவரைக்கொண்டு அவர்களுக்கு 'வகுப்பு' எடுத்தது போன்று அந்த நிகழ்வு இருந்ததாகவும் சில ஊடகவியலாளர் மறுநாள் எழுதியதையும் காணக்கூடியதாக இருந்தது. இது உண்மையில் நிகழ்வில் உரையாற்றியவர்களுக்கு தமிழ் அரசியல் சமுதாயத்தின் ஐக்கியத்தில் இருக்கும் தனிப்பட்ட நலன்களுக்கு அப்பாற்பட்ட அக்கறையை கொச்சைப்படுத்துவதற்கு ஒப்பானதாகும்.

எது எவ்வாறிருந்தாலும், தமிழ்க் கட்சிகள் மத்தியில் மீண்டும் ஐக்கியம் ஏற்படவேண்டும் என்ற சிவில் சமூகத்தின் அக்கறையில் தவறு காண்பதற்கு என்ன இருக்கிறது? இன்றைய சூழ்நிலையில் தமிழ்க் கட்சிகளிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவது எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமானது என்ற கேள்வி இருக்கின்றபோதிலும், தமிழர்கள் மத்தியில் எந்தளவுக்கு இன்று ஐக்கியம் அத்தியாவசியமானதாக இருக்கிறதோ அதேயளவுக்கு மறுதலையாக தமிழ் அரசியல் சமுதாயம் பிளவுண்டு சிதறிக் கிடக்கிறது என்பதே யதார்த்தம்.

நிகழ்வுக்கு வந்திருந்த அரசியல் தலைவர்கள் கருத்தாடலின் முடிவுக்கு பிறகு வெளிக்காட்டிய பிரதிபலிப்புக்கள் அவர்கள் மீண்டும் ஐக்கியப்பட்டு செயற்படுவதில் அவ்வளவாக அக்கறை காட்டக்கூடிய சாத்தியம் குறித்து வலுவான சந்தேகத்தைக் கிளப்புகிறது.

அரசியல் ஆய்வாளர்களும் பத்திரிகையாளர்களும் ஏன் அரசியல்வாதிகளும் கூட வழமையாகப் எழுதுகின்ற, பேசுகின்ற ஒரு விடயம் இருக்கிறது.

அதாவது கடந்த கால அனுபவங்களில் இருந்து முறையான பாடங்களைப்பெற்றுக்கொண்டு உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைவரங்கள் வேண்டிநிற்பதற்கு இசை வாக போரின் முடிவுக்கு பின்னரான காலகட்டத்தில் அடிப்படைக் கோட்பாடுகளைக் கைவிடாமல் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதுவதற்கான பாதையை




வகுக்கவேண்டும் என்று கூறுவார்கள்.

ஆனால், எமது அரசியல் நிலைவரங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது எவருமே கடந்த கால அனுபவங்களில் இருந்து பாடங்களைப் படித்திருப்பதாகக் கூறமுடியாது. உண்மையில் சொல்லப் போனால் ஜேர்மன் தத்துவஞானி ஹெகலின் பிரபல்யமான கூற்று ஒன்றையே இங்கு நினைவுபடுத்தவேண்டியிருக்கிறது.

வரலாற்றில் இருந்து நாம் படித்திருக்கக்கூடிய பாடம் வரலாற்றில் இருந்து எவரும் பாடம் படிப்பதில்லை என்பது மாத்திரமே என்று அவர் கூறினார்.

தங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஐக்கியப்பட்டு செயற்படவேண்டும் என்பது தமிழ் மக்களின் அக்கறையாக இருக்கின்றபோதிலும், அது ஒரு வெகுஜனக் கோரிக்கையாக தற்போது பொதுவெளியில் வெளிக்கிளம்ப முடியாமல் இருப்பதற்கு காரணம் எமது அரசியல்வாதிகள் மீது அவர்கள் பெருமளவுக்கு நம்பிக்கை இல்லாமற் போய்விட்டதேயாகும். அதற்கான காரணங்களை அடுக்க இங்கு இடவசதி போதாது.

**சகல தமிழ்க்கட்சிகளுமே சமஷ்டி தீர்வையே கோரிநிற்கின்றன. இடைக்காலத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று அவற்றில் அனேகமாக சகல கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கிறது. சர்வதேச சமூகத்தின் உதவியை சகல கட்சிகளும் கோருகின்றன. கட்சி அரசியல் நலன்களைத் தவிர ஐக்கியப்படுவதற்கு வேறு என்ன காரணி இருக்கிறது?**

தமிழ்க் கட்சிகளின் ஐக்கியத்தைப் பற்றி மீண்டும் பேசப்படுகின்ற நிலையில் கடந்த காலத்தை நாம் ஒரு தடவை திரும்பிப்பார்க்க வேண்டும்.

பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட முதலாவது குடியரசு அரசியலமைப்பு தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிராகரித்ததைத் தொடர்ந்து அன்றைய பிரதான தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியை உருவாக்கினார்கள்.

அவர்கள் முன்னெடுத்த செயற்பாடுகள் இறுதியில் 1976 வட்டுக்கோட்டை தீர்மானமாக வந்து பிறகு ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்து உள்நாட்டுப் போராகி அதுவும் முடிவுக்குவந்து இப்போது பதினைந்து வருடங்களைக் கடந்து நிற்கிறோம்.

1970 களில் தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஏற்பட்டதைப் போன்று போன்று ஒரு அரசியல் உணர்ச்சிபூர்வமான ஐக்கியத்தை இலங்கைத் தமிழர் வரலாற்றில் முன்னொருபோதும் நாம் கண்டதில்லை.

அதற்குப் பிறகு மூன்று தசாப்த காலப் போரில் பெரும் அழிவுகளையும் உயிரிழப்புகளையும் அனுபவித்து வழமையான வாழ்வுக்கு திரும்புவதற்கு தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் இன்னமும் போராடிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அரை நூற்றாண்டுக்கு பிறகு தமிழ்க் கட்சிகளின் ஐக்கியம் பற்றி பேசுகிறோம்.

போரின் முடிவுக்கு பிறகு உடனடியாக தமிழர்கள் மத்தியில் கட்டுறுதியான அரசியல் சமுதாயம் ( Polity) ஒன்று இருக்கவில்லை. ஆயுதப் போராட்ட காலத்தில் மிதவாத தமிழ் அரசியல் சக்திகளின் செயற்பாடுகள் அமுங்கிப்போனதே அதற்கு காரணம்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் சகல அம்சங்களிலும் ஆயுதப்போராட்ட இயக்கங்கள் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்கக்கூடிய அரசியல் துணிவாற்றலும் விவேகமும் கொண்ட மிதவாத தமிழ் அரசியல் தலைவர்கள் எம்மத்தியில் இருக்கவில்லை.

தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கறுப்பின மக்களின் விடுதலை போராட்டத்துக்கு தலைமை தாங்கிய ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் ஆயுதப்போராட்ட இயக்கங்களும் இருந்தன. ஆனால் அந்த இயக்கங்களினால் முழுமையாக விடுதலைப் போராட்டத்தை அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடிந்ததில்லை. தமிழர்களின்



போராட்டத்தில் அத்தகைய நிலை இருக்கவில்லை. அது துரதிர்ஷ்டவசமானது.

தமிழர்கள் மத்தியில் பெருவாரியான ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தோன்றியதும் அவற்றில் பல இயக்கங்கள் அயல்நாட்டின் உளவுப்பிரிவுகளினால் கையாளக் கூடியவையாக இருந்ததும் அவற்றுக்கிடையிலான சகோதரப் படுகொலைகள் தமிழ் மக்களின் நியாயபூர்வமான போராட்டத்தின் தோல்விக்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக அமைந்ததும் தமிழர் அரசியலின் கசப்பான அனுபவங்கள்.

போர்க்காலத்தில் பல தமிழ்க் கட்சிகளை ஐக்கியப் படுத்தி அமைக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடமே போருக்கு பின்னரான தமிழர்களின் தலைமைத்துவம் தானாக வந்து சேர்ந்தது. தமிழர்கள் மத்தியில் கட்டுறுதியான அரசியல் சமுதாயத்துக்கு இருந்த வெற்றிடத்தை நிரப்பவேண்டிய பொறுப்பைக் கூட்டமைப்பே அன்று கொண்டிருந்தது.

தேர்தல்களில் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதைத் தவிர வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு வேறு தெரிவு இருக்கவில்லை. தேர்தல்கள் போன்ற ஜனநாயக செயன்முறைகளில் பங்கேற்பதை தவிர தமிழர்களுக்கு வேறு மார்க்கமும் இருக்கவில்லை.

அந்த நிலைவரம் கணிசமான காலப்பகுதிக்கு நீடித்து இன்று பதினைந்து வருடங்கள் கடந்த நிலையில் என்ன மிஞ்சியிருக்கிறது? சிதறுண்ட ஒரு அரசியல் சமுதாயமே தமிழர்கள் மத்தி யில் இருக்கிறது.

தமிழ் தேசியக் கூட்ட மைப்பு உருவாக்கப்பட்ட நாள் தொடங்கி அதன் தலைவராக இருந்துவந்த இரா.சம்பந்தன் அவர்கள் தமிழ் அரசியல் கட்சிகளின் ஐக்கியத்தை பேணிப்பாதுகாத்து கூட்டமைப்பை வலுவான ஒரு அரசியல் இயக்கமாக கட்டியெழும்பி வைத்திருக்கத் தவறி விட்டார்.

(14ஆம் பக்கம் பார்க்க)





# நினைவிடத்தில் ஒருநாள் ஒன்றுகூடி அழுவதற்கும் உரிமையில்லையா? என்ன நியாயமோ? என்ன சட்டமோ?

பனங்காட்டான்

ஈழத்தமிழரின் ஆகப்பிந்திய உரிமைப் போராட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது, ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட காலம்.

1970களின் பிற்பகுதியில் வெளியுலகத்துக்குத் தெரிய வந்த தமிழினத்தின் ஆயுதப் போராட்டம் - ஆயுதங்களை ஆயுதங்களே சந்திக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தால் உருவானது. இதனை, சில வரலாற்றுப் பதிவாளர்கள் 'அரச பயங்கரவாதம் எதிர் தமிழ்ப் பயங்கரவாதம்' என்று குறிப்பிடுவர்.

பேச்சுவார்த்தைகள் முறிக்கப்பட்டு ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டு, வாழிட உரிமைகள் மறுக்கப்பட்டு, அடிப்படை மனித உரிமைகள் பறிக்கப்பட்டு.... இவ்வாறு எல்லாமே 'பட்டுப்போன' இனம், இறுதியில் தனது இழந்த மண்ணை மீட்கவும், இருப்பதைக் காக்கவும் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இந்த வரலாற்றுப் பாதையில் தம்மை ஆகுதியாக்கியவர்களை வணங்கவும், விளக்கேற்றித் துதிக்கவுமென ஒரு மாதம் வேண்டப்பட்டது. அதுவே கார்த்திகை மாதமானது. ஆயுதமேந்திய சமரில் முதற்பலியான இளைஞனின் நினைவு நாள் - நவம்பர் 27 மாவீரர் நாள்.

கார்த்திகை மாதம் என்பது மண்சுமந்த மேனியருக்கான மாதமாகி பூசிக்கப்பட்டு வருகிறது. இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் தமிழ்மண் சிக்கியிருந்த வேளையில், உக்கிரமான போர் நடந்து கொண்டிருந்த வேளையில், ஆயிரமாயிரம் மக்கள் சொந்த வீடு வாசலை இழந்து இடம்பெயர்ந்திருந்த காலத்தில் - 1989 நவம்பர் 27ஆம் திகதி அடர்ந்த வன்னிக்காட்டில் முதலாவது மாவீரர் நாள் பிரகடனமாக்கப்பட்டு அதற்கான உரை நிகழ்த்தப்பட்டது.

அன்றிலிருந்து 2008ம் ஆண்டுவரை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பெயர் குறிப்பிடப்படாத இடத்திலிருந்து மாவீரர் உரையை ஒரு மரபாக நிகழ்த்தி வந்தார். போராட்ட இயக்கத்தின் கொள்கைப் பிரகடன வடிவிலான இந்த உரையை சிங்கள தேசம் மட்டுமன்றி, சர்வதேச நாடுகளும் மிக உன்னிப்பாக செவிமடுத்து வந்தன என்பது வரலாற்றுப் பதிவு.



போரில் உயிர்க் கொடையாளிகளான மண்மீட்பர்களின் நினைவுக்காக அந்தந்த பிரதேசங்களில் நடுகற்கள் நாட்டப்பட்டு, மாவீரர் துயிலும் இல்லங்கள் உருவாக்கப்பட்டு அப்பிரதேசங்கள் புனித இடங்களாக மக்களால் மதிக்கப்பட்டு வந்தது. உலக மகாயுத்தங்களில் உயிர் துறந்த வீரர்களுக்கு அளிக்கப்படும் மரியாதைக்கு நிகரானதாக இவர்களுக்கான மதிப்பளிப்பு அமைந்தது.

மாவீரர்களை அனுஷ்டிப்பதற்கான கார்த்திகை மாதத்தை 'அழல்சேல் குட்டம்' என்று சிலப்பதிகாரம் வர்ணிக்கிறது. அழல் என்பது எரிதல் என்ற பொருள் கொண்டது. இறைவனை நெருப்பு வடிவில் உருவாகக் கண்டு வணங்குதல் தமிழர் மரபு. பஞ்சபூதங்களில் ஒன்றாக நின்று உலகை இயக்குவது அக்கினி. இதன் இயக்கத்தில் மனிதகுலம் இயங்குவதைக் காட்டுவது கார்த்திகை மாதமென அடையாளப்படுத்தப்படுகிறது.

நடுகல் என்பது நினைவைப் போற்றுவதற்கான முதன்மை வார்த்தை. மண்ணுக்காகக் களமாடி விதையானவர்களை நடுகல்லாக்கினார்கள் என்பது இலக்கிய வழி.

இறைவழி வழிபாட்டின் முழுமை தோன்றுவதற்கு முன்னரே, வீரவழிபாட்டில் நிறைவுற்றிருந்தோர் தமிழர். கடவுளை உணர்ந்து கொள்வதற்கு முன்பாக, கண்முன் வாழ்ந்த பெருவீரரை வழிபட்ட உயர் மரபு தமிழருக்குரியது.

தமிழர் வரலாற்றில் பகையற்ற காலத்தைவிட பகையுற்ற காலமே அதிகம். இதனால் மண்ணையும் மக்களையும் காக்கும் பொறுப்பு காலமெல்லாம் காவலருக்கு இருந்தது. போரற்ற வாழ்வுக்காக நாளெல்லாம் போராட வேண்டியிருந்தது. கருவிலேயே உறுதி ஓதப்



**இலங்கை ஒரு நாடு, இங்கு ஒரு சட்டமே என்று நித்தம் நித்தம் போதனை செய்யும் புத்தரின் வம்சத்தினர் இழப்புகளை நினைத்து வருடத்தில் ஒருநாள் உறவுகளுக்காகக் கண்ணீர் வடிக்கும் உரிமைகளைக்கூட மறுத்து வருகின்றனர். இந்த நாட்டில் என்ன நியாயமோ, என்ன சட்டமோ?**

பட்டது. தாயின் பாலொடு தீரமும் ஊட்டப்பட்டது. சோறும் வீரமும் கலந்ததே உணவாயிற்று.

வீரத்தை விளைவித்து, புண்பட்டு மண்தொட்ட மனிதரை இறைக்கு ஒப்பாக போற்றி வந்தவர்கள் தமிழர்கள். கடுமான் என்ற வீரனொருவன் மண் காக்கும் போரில் தன்னை ஈந்தான். அவனுக்காக தங்கள் இதயத்தை ஈரமாக்கிய மக்கள் ஊரின் புறத்தே அமைந்த திடலில் அவன் வீரத்தின் நினைவாக ஒரு கல் நட்டனர். பனை நாரில் தொடுக்கப்பட்ட வேங்கை மலர்களை அதற்கு மாலையாகச் சூட்டி கடுமானை நடுகல்லாக வழிபட்டனர்.

"ஊர்நனி யிறந்த பார்முதிர் புறந்தலை
ஒங்குநிலை வேங்கை ஒள்ளிணர் நறுவீப்
போந்தையந் தோட்டில் புனைந்தனர் தொடுத்துப்
பல்லான் கோவலர் படலை சூட்டக்
கல்லா யினையே கடுமான் தோன்றல்"

என்று கூறுகிறது புறநானூறு.

இவ்வாறு நடப்பட்ட கற்களில் வீரனின் பெயரும் அவன் பெருமைகளும் எழுதப்பட்டன. அக்கற்கள் மயில் இறகுகளாலும் மலர்களாலும் அழகுபடுத்தப்பட்டன.



"பெயரும் பீடும் எழுதி
அகர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை
நடுகல்"

என்று கூறுகிறது அகநானூறு.

பட்டினப்பாலை, "கிடுகு நிரைத்து எஃகூன்றி அரண் போன்ற...." என்று சொல்கிறது. அற்றைத் தமிழர் மண்ணுக்காகத் தமை ஈந்த பெருவீரரைத் தமது தெய்வங்களாகவே கருதினர். அவர்களுக்கான நடுகற் களை நாள்தோறும் வழிபட்டனர். இசைக்கருவிகள் முழங்க படையலிட்டு அவர்களைப் போற்றினர்.

"..... பெயர் மருங்கறியார்,
கல்லெறிந்து எழுதிய நல்லாரை,
மாராஅத்த கடவுள்" என

மலைபடுகடாம் விபரிக்கிறது. மறக்குடி பிறந்த மக்கள் தம் பெருவீரர் களை வணங்குவதின்றிப் பிற தெய்வங்களை ஒரு போதும் வணங்க மாட்டார்கள்.

"கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளும்
இலவே"

என்று கூறுகிறது புறநானூறு.

மிக உயர்வான நடுகல் வழிபாடானது தமிழருக்குரித் தான வீரமரபின் உயர் சான்று. தமிழரால் போற்றப்படு கின்ற முருகன், ஐயனார், மதுரைவீரன், இருளன், சாம்பான் போன்ற தெய்வங்கள் நடுகல் வழிபாட்டிலிருந்தே உருவானவையென இலக்கியங்கள் கூறுகின்றன.

சிங்கள தேசத்தின் அகோர செயற்பாடுகள் மாண்புற்ற தமிழர் வீரத்தை, அவர்களின் தீரத்தை, அவர்தம் ஈகத்தை மங்கச் செய்து மறைத்துவிட வேண்டுமென்பதை இலக்காகக் கொண்டே மாவீரர் துயிலும் இல்லங்களை அடித்து நொருக்கி அழித்தனர். நடுகற்களை உடைத்து தூள்தூளாக்கி மண்ணுடன் மண்ணாக்கினர். அவர்களின் புனிதத்தை மதிக்காது அந்த நிலத்தில் படைத்துறை முகாம்களை அமைத்து அராஜகம் புரிகின்றனர்.

வருடம் ஒரு தடவை அவ்விடத்தில் ஒன்றுகூடி நினைத்து துதித்து - அழுது கண்ணீர் மல்கும் உரிமையைக்கூட சிங்கள தேசம் மறுத்து வருகிறது. மாவீரர் துயிலும் இல்லங்கள் எவ்வாறு போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும், அங்கே துயில் கொள்பவர்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதை புதுவையின் வரிகள் பின்வருமாறு கூறுகின்றன -

"ஓவென்றிரையும் ஊதற்காற்றே
வேகம் குறைத்து வீசு!
தூக்கம் கலைத்துத் தொலைக்காதே!
கல்லெறியும் பொல்லாக் கனத்த மழையே,
மெல்லப் பூவெறிதல்போல பொழிக!
இங்கே இராஜகுமாரிகள் உறங்குகின்றனர்!
நிலமே, மழைநீரை நிறைய குடிக்காதே,
உள்ளே சில்லிட்டுப் போகும் அவர் மேனி!
அதிர ஊன்றி நடப்பவரே, கவனம் -
பிள்ளைகளின் அனந்தசயனம் கலையக்கூடும்!
பூக்களெனினும் மெதுவாகப் போடுங்கள்,
காலப் பணியில் கண்துஞ்சாதிருந்தவர்கள்
கால்நீட்டிக் கொஞ்சம் களைப்பாறுகின்றனர்!"

இந்த வரிகளின் அர்த்தம் புரியாதவர்கள் வெண்பூத் தட்டுகளுடன் விகாரைகளுக்கு அணிவகுத்து என்ன பயன்?

நவம்பர் 27 என்பது போராட்ட நாளன்று. ஆயுதத்துடன் புறப்படும் நாளுமன்று. தங்கள் பிள்ளைகளையும் குடும்ப உறவுகளையும் நினைத்து நெஞ்சுருகி ஓவென்று ஒரு கணம் கண்ணீர் விட்டு அழுவதற்கான நாள். இதற்குக்கூடவா நாடாளுமன்றம் சம்மதிக்க வேண்டும்? நீதிமன்ற அனுமதி பெறவேண்டும்?

ஒரு நீதிமன்றம் அனுமதி வழங்குகிறது. இன்னொரு நீதிமன்றம் அனுமதி மறுக்கிறது. மற்றொரு நீதிமன்றம் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. மறுபுறத்தில் துயிலுமில்லத் தூபிகள் உடைக்கப்படுகின்றன. நினைவேந்தல் கொடிகள் அறுக்கப்படுகின்றன. நவம்பர் 27 நாளை தடை செய்ய வேண்டுமென முன்னாள் ராணுவத் தளபதி ஒருவர் விடுத்த வேண்டுகோளை நீதிபதி முன்னிலையில் படைத்துறை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டு உறுதி வழங்குகின்றனர்.

இலங்கை ஒரு நாடு, இங்கு ஒரு சட்டமே என்று நித்தம் நித்தம் போதனை செய்யும் புத்தரின் வம்சத்தினர், இழப்புகளை நினைத்து வருடத்தில் ஒருநாள் உறவுகளுக்காகக் கண்ணீர் வடிக்கும் உரிமைகளைக்கூட மறுத்து வருகின்றனர்.

இந்த நாட்டில் என்ன நியாயமோ, என்ன சட்டமோ? ●

ஈழநாடு



# இன்றைய நிலையில் தமிழ் தேசியக் கட்சிகள் செய்யவேண்டியது?



யதீந்திரா

கடந்த 18.11.2023 அன்று, தந்தை செல்வா கேட்போர் கூடத்தில், இடம்பெற்ற, மக்கள் முறைப்பாட்டுக்கான வடக்கு கிழக்கு சிவில் சமூகக் குழுவின் நிகழ்வில் ஆற்றப்பட்ட உரை.

யுத்தம் முடிவுற்று பதின்நான்கு வருடங்களாகின்றன. இந்த பதின்நான்கு வருடங்களின் பின்னரும், தமிழ் தேசிய கட்சிகள் என்ன செய்ய வேண்டும்? - என்னும் கேள்வி எழுகின்றதென்றால், இவ்வாறானதொரு கேள்வியை முன்வைப்பதற்கான அரசியல் சூழல் தொடர்பிலேயே நாம் கவனம் செலுத்த வேண்டும். கடந்த பதின்நான்கு வருடகால அரசியல் முன்னெடுப்புக்கள் வெற்றியளித்திருக்குமானால் - இவ்வாறானதொரு சந்திப்பு தேவைப்பட்டிருக்காது.

யுத்தம் முடிவடைந்த போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. தமிழ் மக்களுக்கான அரசியலை முன்னெடுத்துச் செல்லும் வரலாற்றுப் பொறுப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்றிருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது அனைவருமே நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் இன்று தமிழ் அரசியல் சூழலை உற்று நோக்கினால் பல கட்சிகள் தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலையில்தான், இவ்வாறான கட்சிகள் அனைத்தும் ஒரு பொதுப் புள்ளியில் சந்திக்க வேண்டும் என்னும் கோரிக்கையை நாம் மீண்டும், மீண்டும் முன்வைக்க வேண்டியிருக்கின்றது.

இந்த நிகழ்வில் பங்கு கொண்டிருக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலரும் நீண்ட அனுபவங்களை கொண்டிருப்பவர்கள். ஒரு சிலரது அனுபவம் என்னுடைய வயதை விடவும் அதிகமானது. இவ்வாறானவர்களுக்கு புதிய விடயங்கள் எதனையும் என்னைப் போன்றவர்களால் கூறிவிட முடியாது. ஆனால் இத்தனை காலத்தை செலவழித்த நீங்கள், தமிழ் சமூகத்திற்கு விட்டுச் செல்லப் போவது என்ன என்னும் கேள்வியை உங்களுக்குள் கேட்க வேண்டியிருக்கின்றது. உங்கள் வாழ்வின் வளமான காலத்தை இந்தப் போராட்டத்திற்காக செலவழித்திருக்கின்றீர்கள். இறுதில் உங்கள் அனைவரது பங்களிப்பினதும் அடைவு என்ன? தமிழ் மக்களுக்கு கிடைத்தது என்ன?

இந்தக் கேள்விகளுக்கு எவரிடமும் பதில்லை - எனவே இந்தக் கேள்விக்கான பதிலை காண்பதற்காக, தமிழ் மக்கள் தற்போதுள்ள நிலையில், ஒரு படியாவது முன்னோக்கி பயணிப்பதற்கான வழிவகைகளை கண்டடை வேண்டுமாயின், அனைத்து கட்சிகளும் ஓரணியாக வரவேண்டியது கட்டாயமான ஒன்றாகும். ஒன்றுபட்ட பின்னர், எவ்வாறு விடயங்களை கையாள்வது, இடைக்கால, நீண்டகால என்னும் அடிப்படையில் அரசியல் தீர்வுக்கான பாதையை எவ்வாறு வரையறுப்பது - என்பது தொடர்பில் நாம் சிந்திக்கலாம். முதலில் ஒன்றுபடும் தேவையை உணர்ந்து, அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறான கேள்விகள் அனைத்துக்குமான பதிலை கண்டடையும் ஆரம்பப் புள்ளியாகவே, தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டியிருக்கின்றது. கடந்த



காலத்திலும் இவ்வாறான ஒற்றுமை முயற்சிகளை பலர் மேற்கொண்டிருக்கின்றனர். ஆனால் அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இதன் காரணமாக கட்சிகளுக்கு இடையிலான பிளவுகள் மேலும் அதிகரித்துச் செல்லும் நிலைமையே ஏற்பட்டது. இந்த நிலைமை தொடர்வதற்கு நாம் அனுமதிப்போமானால், அடுத்து வரவுள்ள நாடாளுமன்ற தேர்தலின் போது, தமிழ் தேசியவாத கட்சிகள் மேலும் பின்னடைவுகளை சந்திக்க நேரிடும்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் நிலைமை பாரதூரமாக பலவீனமடையும். ஏற்கனவே, அம்பாறையில் ஆசனத்தை இழந்திருக்கின்றோம். அடுத்த தேர்தலில் திருகோணமலையிலும் ஆசனத்தை இழப்பதற்கான வாய்ப்பே அதிகமுண்டு. எனது பார்வையில் அதற்கான வாய்ப்பு அதிகமுண்டு. இவ்வாறான சவால்களை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்று தமிழ் கட்சிகள் சிந்திக்க வேண்டும். கிழக்கு மகாணத்தில் சில பிரத்தியேக தந்திரோபாயங்களை மேற்கொள்ளலாம். உதாணரமாக அம்பாறை மற்றும் திருகோணமலை போன்ற மாவட்டங்களில் அனைத்து கட்சிகளும் இணைந்து ஒரு சின்னத்தில் போட்டியிடலாம். இதன் மூலம் ஆசனத்தை காப்பாற்றலாம்.

இந்த இடத்தில் நாம் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி - பிளவுற்று எதனைச் சாதிக்க முடிந்தது? கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்று கூறுகின்ற போது, அடுத்து எழும் கேள்வி - எந்த அடிப்படையில் ஒன்றுபடுவது? அவ்வாறாயின் கட்சிகளின் தனித்துவத்திற்கு என்ன நடக்கும்? முன்னர் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் போதும் இவ்வாறான கேள்விகள் எழுந்தன. முதலில் ஒன்றுபடுவது பற்றி எண்ணினால், பின்னர், அதற்கான வழிகளை காண்பது சுலபமானது.

அடிப்படையில் அனைவருக்கும் தேர்தல் நலன்கள் உண்டு. தேர்தல் நலன்கள் என்று வருகின்ற போதுதான், கட்சிகள் மத்தியில் கேள்விகளும் எழுகின்றன. கட்சிகள் ஒன்றுபட வேண்டுமென்று கூறுகின்ற போது, கட்சிகளின் தனித்துவம் தொடர்பில் அச்சம்கொள்ள வேண்டியதில்லை. ஒரு பரந்துபட்ட ஜக்கிய முன்னியாகும் போது, ஒவ்வொரு கட்சிகளும் அதற்குரிய தனித்துவத்துடன் இருக்க முடியும். தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டால், ஒரு பரந்துபட்ட ஜக்கிய முன்னணியாக மாறுவதில் சிரமங்கள் இருக்கப் போவதில்லை.

ஒரு இக்கட்டான சூழலில்தான் ஜக்கிய முன்னணி பற்றி நாம் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. உதாரணமாக விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கு சென்ற போது, வெளியிலுள்ள கட்சிகள் அனைத்தையும் ஓரணியாக பேணிக் கொள்ள வேண்டிய தேவையை உணர்ந்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பை தத்தெடுத்துக் கொண்டனர். விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் பலமாக இருந்த ஒரு சூழலில், தமிழ் கட்சிகளின் தேவை அவர்களுக்கில்லை ஆனாலும் அவர்கள் அந்தத் தேவையை உணர்ந்திருந்தனர். ஏனெனில் ஒரு பேச்சுவார்த்தைக்கு செல்கின்ற போது, தமிழ் மக்களின் பிரதிநிதிகளான எங்களுடன் பேச வேண்டும் என்னும் ஜனநாயக குரல்கள் முன்வைக்கப்படுமாக இருந்தால் இது விடுதலைப் புலிகளின் பேரம் பேசும் பலத்தை பலவீனப்படுத்தும். இந்த அடிப்படையில்தான், விடுதலைப் புலிகள் அமைப்பு, தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் தங்களின் நிகழ்சிநிரலுக்கு ஆதரவான ஒரு அணியாக பயன்படுத்தியது.

இன்றும் அவ்வாறானதொரு நிலைமைதான் இருக்கின்றது. தற்போது அரசியல் தீர்வு தொடர்பில் பேசப்படுகின்றது. இவ்வாறானதொரு சூழலில், தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் பிளவுற்றிருக்கின்றன. இந்த நிலைமை கொழும்பிற்கே சாதகமானது. எனவே, எந்தப் பக்கத்தில் சிந்தித்தாலும் கூட, தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றுபட வேண்டிய தேவையை எவரும் மறுதலிக்க முடியாது. ஒரு சிவில் சமூக குழுவின் அழைப்பில் முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் ஒன்று கூடியிருக்கின்றனர். நீண்ட இடைவெளிகளுக்கு பின்னர் அனைவரையும் ஓரிடத்தில் காண முடிகின்றது. இந்த பின்புலத்தில் நோக்கி னால், இந்தக் கூட்டம் அரைவாசி வெற்றிபெற்றிருக்கின்றது என்றே கூற வேண்டும்.



# ராஜபக்ஷ சகோதரர்களுக்கு எதிரான உயர்மன்றத் தீர்ப்பின்

## உண்மைத் தன்மையும் பின்விளைவுகளும்

கந்தையா அருந்தவபாலன்

ராஜபக்ஷ சகோதரர்கள் தமது ஆட்சிக்காலத்தில் மேற்கொண்ட தவறான தீர்மானங்களாலும் நடைமுறைகளாலும் நாட்டில் மோசமான பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியதன் மூலம் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டதற்கான நிவாரணம் கோரி ரான்ஸ்பரன்ற் இன்டநாஷனல் நிறுவனம் உட்பட வேறு சில தரப்புகளும் இணைந்து உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐந்து நீதியரசர்களைக் கொண்ட மன்று 4:1 என்று வழங்கிய பெரும்பான்மைத் தீர்ப்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, முன்னாள் பிரதமரும் நிதியமைச்சருமான மஹிந்த, முன்னாள் நிதியமைச்சர் பஸில் மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுனர்களான டபிள்யூ. பி. லக்க்ஷமன், அஜித் நிவாட் கப்ரால், முன்னாள் திறைசேரிச் செயலர்களான ஆட்டிகல, ஜெயசுந்தர ஆகியோர் அரசியலமைப்பின் உறுப்புரை 12(1) இன் மூலம் குடிமக்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமையை மீறியுள்ளனர் எனக் குற்றஞ் சுமத்தியதுடன் அதற்காக முறைப்பாட்டாளர்களுக்கு நிவாரணம் எதுவும் பரிந்துரைக்காது வழக்குச் செலவு மட்டும் வழங்க வேண்டுமெனவும் வெளிப்படுத்தியுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகப் பார்க்கப்படுவதுடன் அது தொடர்பான விமர்சனங்களும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. தீர்ப்பில் குறிப்பிடுவது போல இன்றைய நெருக்கடி நிலைமைகளுக்கு ராஜபக்ஷ தரப்பு மட்டும்தான் காரணமா அல்லது வேறு காரணங்களும் உள்ளனவா? இத்தீர்ப்பின் எதிர்கால முக்கியத்துவம் யாது? இத்தீர்ப்பின் எதிர்கால அரசியல் விளைவுகள் எவையாக இருக்கக்கூடும்? போன்ற கேள்விகளுக்கான விடைகள் எமக்குப் பல உண்மைகளை வெளிப்படுத்தும்.

முறைப்பாட்டாளரின் விண்ணப்பத்தின்மூலம் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மற்றும் அவர்கள் மீதான குற்றங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உச்ச நீதிமன்றம் ராஜபக்ஷ தரப்பின்மீது குற்றம் சுமத்தினாலும் உண்மையில் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷ சகோதரர்கள் மட்டும்தான் காரணகர்த்தாக்களெனக் கூறமுடியாது. அவர்களின் தீர்மானங்கள் சில உடனடிக் காரணங்களாக இருந்தாலும் இலங்கையில் நீண்ட காலமாகப் பின்பற்றப்பட்டு வந்த அரசியல், பொருளாதாரக் கொள்கைகளும் அவை சார்ந்த தீர்மானங்களுமே இன்றைய நெருக்கடி நிலைக்கு இலங்கையைத் தள்ளிவிட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. நீண்டநாள் குடியால் நோய் வாய்ப்பட்ட ஒருவன் கடைசி நாள் சற்றுக் கூடுதலாகக் குடித்ததனால் இறப்பது போன்றதுதான் இன்றைய இலங்கை நிலை. ஒருகாலத்தில் சிங்கப்பூர் தலைவர் லீ குவான் போன்றோர்க்கு நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக இருந்த இலங்கை இன்று எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு உலகுக்கே முன்னுதாரணமாக இருப்பதற்கு தனியே ராஜபக்ஷக்கள் மட்டும் எப்படிக் காரணமாக இருக்க முடியும்? உண்மையில் சுதந்திரத்தின் பின் ஆட்சி செய்த அத்தனை தலைவர்களும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களே. சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்று வரை சிங்கள ஆட்சியாளர்களால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் இன ஒதுக்கல் அரசியல் சித்தாந்தத்தின் வேகமான பரிணாம வளர்ச்சியும், தேசிய மற்றும் சர்வதேசிய மாற்றங்களுக்கு ஏற்றவகையில் நீண்டகால நோக்கிலான பொருளாதாரத் திட்டமிடலின்மையும், இவைபற்றிச் சிந்திக்கும் தகைமையற்று குடும்பம், கட்சி, அதிகாரம், ஊழல் போன்ற சிந்தனையில் மூழ்கி ஆட்சி செய்த அத்தனை தலைவர்களும் இன்றைய நிலைக்குக் காரணமானவர்களே. சேனநாயக்ககளின் குடியேற்றத்திட்டங்களும், பண்டாரநாயக்கவின் சிங்களச் சட்டமும், ஜே.ஆரின் போர்ப் பிரகடனமும், சந்திரிகாவின் சமாதானத்துக்கான யுத்தமும், மஹிந்தவின் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தமும் இன ஒதுக்கல் சித்தாந்தத்தின் கருவிகள்தானே. இதற்கேற்றவாறாக 1972 இலும் 1978இலும் அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் சிறிமாவோவும் ஜே.ஆரும் அல்லரா? இவற்றின் விளைவு நாட்டைப் பொருளாதார ரீதியாக நலிவடையச் செய்ததுடன் கடன்படு நிலையையும், சர்வதேசத்தில் தங்கியிருத்தல் தன்மையையும் உயர்த்தியமையுமாகும். நாட்டின் இன்றைய நிலைக்கு இன்னொரு முக்கிய காரணம் ஜனாதிபதி என்ற வகையில் ஒருவர் தனித்துத் தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருப்பது. இந்த நிலைக்கு 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு மூலம் வித்திட்ட ஜே.ஆரும், அதை ஒழிப்பதற்கான வாய்ப்புகள் இருந்தும் அதனைச்செய்யாத பிரேமதாஸ, சந்திரிகா, மைத்திரிபாலா போன்ற முன்னாள் ஜனாதிபதிகளும் பொறுப்பில்லையா?



மரபு ரீதியான பெருந்தோட்ட ஏற்றுமதி வருமானங்களில் சுகித்திருந்த நாட்டின் ஆட்சியாளர்கள் அதற்கு எதிர்காலத்தில் நிகழக்கூடிய பாதிப்பை முன்னுணரத் தவறியதால் 1970 களில் பாணுக்கே வரிசையில் நிற்கவேண்டிய நிலை உருவானது. அதன்காரணமாக தன்னிறைவுப் பொரளாதாரத்தை நோக்கிய பொருளாதார அணுகுமுறைக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தக்காலத்தில்தான் வடக்கில் வன்னியில் மிளகாய்ச் செய்கையும் கூட்டுறவுச் சங்கங்களின் மின்தறிகளும் முதன்மை பெற்றன. ஆனால் 1977 இல் பதவிக்கு வந்த ஜே.ஆர் ஜெயவர்த்தனா தன்னிறைவுப் பொருளாதார அணுகுமுறைக்குப் பதிலாக ஏற்றுமதியை மையப்படுத்திய வெளிமுகம் நோக்கிய திறந்த அணுகுமுறையைத் தெரிவு செய்தார். அந்த முறையின் கீழ் நாட்டின் ஏற்றுமதி உற்பத்திகள் பரவலாக்கப்படாது தைத்த ஆடைகள் போன்ற ஒருசில பொருட்களில் தங்கியிருந்தமையால் எதிர்பார்த்த பயனை நாடு பெறவில்லை. பதிலாகத் தாராள இறக்குமதிகளால் 1977க்கு முன் வளரத்தொடங்கிய உள்நாட்டு விவசாயமும் கைத்தொழில்களும் படுத்துவிட்டன. இதனால் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்ததுடன் வெளிநாட்டுக் கடனும் அதிகரித்தது. அது படிப்படியாக அதிகரித்து இன்றைய கையறு நிலைக்கு நாட்டை கொண்டு வந்துள்ளது. அத்துடன் ராஜபக்ஷக்களின் தீர்மானங்களைவிட மேலும் இரு பிரதான காரணிகள் நாட்டின் பொருளாதார நெருக்கடியை துரிதப்படுத்தியுள்ளன என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஒன்று உலகளவில் பாதிப்பை ஏற்படுத்திய கொவிட் பெருந்தொற்று. அடுத்தது 'அரகலய' போராட்டம். ஒரு வகையில் அரகலயப் போராட்டத்தை ஊக்குவித்த தலைவர்களும் பொறுப்புக் கூற வேண்டியவர்களே.

போனவர்களை விட்டுவிடுவோம். இருப்பவர்கள் இதனை விளங்கிக் கொண்டுள்ளனரா என்றால் அதுவுமில்லையே. இன்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக் காரணம் காட்டி ராஜபக்ஷக்களுக்கு தண்டனை வழங்கவேண்டுமென்று முழங்கியும் அரசியல் உரிமையைப் பறிப்பதற்கு கையெழுத்து வேட்டை நடத்தியும் வரும் எதிரக் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ ரணிலின் ஆட்சியில் 900மில்லியன் ரூபா திறைசேரி உண்டியல் மோசடி இடம்பெற்றபோது முக்கிய அமைச்சராக இருந்தவர் தானே. நாட்டின் இன்றைய நெருக்கடிக்கு அதுவும் ஒரு காரணம் என்று பொருளியல் வல்லுனர்கள் சுட்டிக்காட்டியுள்ளனரே. அதற்கு மேலாக இவர் மீதும் இவரது தங்கை மீதும் ஊழல் குற்றச் சாட்டுகள் உள்ளனவே. அப்படியானால் சஜித் தனது குடியுரிமையைத் துறக்கத்தயாராக உள்ளாரா? இவர் மட்டுமல்ல முன்னர் ராஜபக்ஷ ஆட்சியில் அமைச்சர்களாக இருந்து தற்போது வெளியிலிருந்து அவர்கள்மீது விரல்நீட்டும் ஜீ.எல். பீரிஸ், கம்மன்பொல, சம்பிக்க ரணவக்க போன்றோரும் சுமத்தப்பட்ட குற்றத்தின் பங்காளிகள்தான். எதிர்காலத்திலும் இவர்கள் வெற்றிபெறக்கூடிய அல்லது வெற்றிபெற்ற கட்சியொன்றில் இணைந்து ஆமாம் போடுவார்கள். எனவே ராஜபக்ஷக்கள் மட்டுமல்ல இன்றுவரை ஆட்சியதிகாரத்தில் பங்கெடுத்த அத்தனை தலைவர்களும் நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமைக்குக் காரணமானவர்களே.

உச்ச நீதிமன்றினால் வழங்கப்பட்ட இத்தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்புமுனைத் தீர்ப்பு எனக்கருத முடியும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட, மக்களின் நம்பிக்கையை பேணவேண்டிய ஆட்சியாளர்களின் தீர்மானங்களினால் நாட்டில் ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களைப் பொறுப்பாளிகளாக்குவதற்கான, பிணிக்கும் வல்லமையுள்ள, சட்டரீதியான ஒரு தீர்ப்பாக இது அமைந்துள்ளது. இலங்கையின் பெருஞ் சாபக்கேடுகளில் ஒன்று ஆட்சியாளர்கள், அதிகாரிகள் என்போர் செய்யும் தவறுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய நிலையோ அவற்றுக்கான தண்டனைகளோ இல்லாது கடந்து செல்லும் நிலை காணப்படுவதாகும். அதனால்தான் ஆட்சியாளர்கள் தொடர்ந்து துணிவுடன் தவறுகள் செய்துவருவதுடன் அவற்றை அதிகளவிலும் செய்யவும் தலைப்படுகின்றனர். இந்த நிலையை இத்தீர்ப்பு எவ்வளவுதூரம் கட்டுப்படுத்தக்கூடியது என்பதை எதிர்காலந்தான் தீர்மானிக்கும் என்றாலும் இனிவரும் காலங்களில் ஆட்சியாளர்களை அவர்கள் எடுக்கும் முக்கிய தீர்மானங்கள் தொடர்பாக நிச்சயம் எச்சரிக்கையுடன் சிந்திக்க வைக்கும். மேலும் இது ஐந்து நீதியரசர்கள் கொண்ட உச்ச நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பாக அமைவதால் எதிர்வரும் காலங்களில் இது போன்ற வழக்குகளில் இது முற்றீர்ப்புச் சட்டமாக எடுத்தாளப்படுவதற்கான வாய்ப்புக் காணப்படுவதுடன் மேலும் மெருகுபடுத்துவதற்கான வாய்ப்பும் ஏற்படக்கூடும். எடுத்துக்காட்டாக வழங்கப்பட்ட இத்தீர்ப்பில் எதிர்த்தரப்பு மீது குற்றஞ் சுமத்தப்பட்டதேயொழிய தண்டனைகள் எதுவும் விதிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் இது தண்டனைகள் வழங்கும் வகையில் மாற்றமடையக் கூடும். இது எதிர்காலத்தில் ஓர் அரசியலமைப்பு நெருக்கடிக்கும் வழிவகுக்கக் கூடும். ஏனெனில் ஆழமாகப் பார்த்தால் இத்தீர்ப்பு ஒருவகையில் சட்டவாக்கத் துறை மற்றும் நிறைவேற்றுத்துறை மீதான நீதித்துறையின் ஒரு தலையீடு எனலாம். வழமையாக இந்நாட்டில் மற்ற இரு துறைகள்தான் நீதித்துறைமீது பலவழிகளில் தலையீடுகளை மேற்கொண்டு வருவதுடன் சட்ட ஆட்சியையும் கேள்விக்குள்ளாக்கி வருகின்றன. ஆனால் இத்தீர்ப்பு இவற்றுக்கு எதிர்மாறான ஒன்று. ஏனெனில் ஒருசில விதிவிலக்குகள் இருந்தாலும் ராஜபக்ஷக்களின் ஆட்சியில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அவை தவறானவை என்றாலுங்கூட சட்டரீதியானவையே. அமைச்சரவை ஒப்புதல், தேவையானவிடத்து பாராளுமன்ற ஒப்புதல் என்பவற்றினடிப்படையிலேயே அத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே அவை தொடர்பான நீதிமன்றத்தின் தீர்ப்பு என்பது ஒருவகையில் அரசியலமைப்புத் தொடர்பான கேள்விகளுக்கு வழிவகுக்கலாம். இது தொடர்பாக ஒருப்படாத தீர்ப்பு வழங்கிய நீதியரசர் பிரியந்த ஜெயவர்த்தனா அவர்கள் முன்வைத்த கருத்துகளும் முக்கியம் பெறுகின்றன. இதனால் எதிர்காலத்தில் இதுபோன்ற தீர்ப்புகளைக் கட்டுப்படுத்துவதற்கான இறுக்கமான சட்டங்களை ஆட்சியாளர் கொண்டுவரக்கூடும்.

இத்தீர்ப்பினால் அரசியல்வாதிகளுக்கு அல்லது கட்சிகளுக்கு எத்தகைய விளைவுகள் ஏற்படக்கூடும்? ராஜபக்ஷ தரப்புக்கும் அவர்களின் பொதுஜன பெரமுன கட்சிக்கும் இது மேலும் பின்னடைவை ஏற்படுத்தும். ஏலவே சரிந்துவிட்ட ராஜபக்ஷக்களின் பிரதிமையில் இதன் மூலம் மேலும் சரிவு ஏற்படுவதுடன் அவர்களின் கட்சியில் மேலும் பிளவுகளையும் பிரச்சினைகளையும் உருவாக்கும். வரும் அண்மிய தேர்தல்களில் அவர்கள் தனித்துப் போட்டியிட்டால் பாரிய பின்னடைவு ஏற்படும். அதனை அவர்களும் உணர்வார்கள். எனினும் அதற்கு அடுத்து வரக்கூடிய தேர்தல்களில் அவர்கள் மீண்டெழுவார்கள் என நம்பலாம். ஏனெனில் அவர்களிடம் அதற்கான திறமைகள் உள்ளன என்பதற்கப்பால் வேட்பாளர்களின் ஒழுக்கம், அவர்களின் செயற்பாடுகள், கடந்தகால நிகழ்வுகள் என்பவற்றைக் கொண்டு பெரும்பாலான மக்கள் வாக்களிப்பதில்லை என்பதும் அவர்களுக்கு உதவும். மறுபுறத்தில் எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி போன்றவற்றுக்கு இது ஓர் அரசியல்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கனடா எழுத்தாளர் வ.ந. கிரிதரனின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா

குரு அரவிந்தன்

நவம்பர் மாதம் 19 ஆம் திகதி 2023 ஆம் ஆண்டு கனடா எழுத்தாளர் வ. ந. கிரிதரன் அவர்களின் மூன்று நூல்கள் கனடா, ரெறன்ரோவில் மிகவும் சிறப்பாக வெளியிட்டு வைக்கப்பெற்றன. ரொறன்ரோ கிங்ஸ்டன் வீதியில் உள்ள ஸ்காபரோ விலேஜ் கொம்யூனிட்டி மண்டபத்தில் மாலை 5 மணியளவில் ஆரம்பமாகி, அகவணக்கம், முதற்குடிமக்களுக்கு நன்றி சொல்லல் போன்ற நிகழ்வுகள் முதலில் இடம் பெற்றன. கனடா தேடகம் அமைப்பின் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு திரு. பா. அ. ஜயகரன் அவர்கள் தலைமையேற்று மிகவும் சிறப்பாக நெறிப்படுத்தினார்.

தலைவர் உரையில் எழுத்தாளர் வ. ந. கிரிதரன் அவர்கள் தமிழ் இலக்கியத் துறையில் படைத்த சாதனை






கள் பற்றிக் குறிப்பிட்ட அவர், வ.ந. கிரிதரன் அவர்கள் எழுத்தாளர் மட்டுமல்ல பழகுவதற்குச் சிறந்த நண்பர் என்பதையும் மேலும் குறிப்பிட்டார். தலைவர் உரையைத் தொடர்ந்து நிகழ்வில் 'வ.ந.கிரிதரன் கட்டுரைகள்' பற்றி எழுத்தாளர் திரு. அருண்மொழிவர்மன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். 166 பக்கங்களைக் கொண்ட இந்தக் கட்டுரைத் தொகுப்பு ஜீவநதி வெளியீடாக வெளிவந்திருக்கின்றது.

தொடர்ந்து 23 அத்தியாயங்களைக் கொண்ட 'நவீன விக்கிரமாதித்தன்' என்ற நாவல் பற்றி சமூக, அரசியற் செயற்பாட்டாளரும், எழுத்தாளருமான திரு. சிவா முருகுப்பிள்ளை அவர்கள் உரையாற்றினார்கள். வதிலைபிரபாவால் அட்டைப்படம் வடிவமைக்கப்பட்டு, ஓவியா பதிப்பக வெளியீடாக வந்த இந்தப் புதினம் 152 பக்கங்களைக் கொண்டது.






'ஒரு நகரத்து மனிதனின் புலம்பல்' கவிதைத் தொகுப்பு பற்றி எழுத்தாளர் திரு. என்.கே.மகாலிங்கம் அவர்கள் உரையாற்ற இருந்தாலும் அவரது உடல்நிலை காரணமாக அவரால் நிகழ்விற்குச் சமூகமளிக்க முடியவில்லை. அவர் எழுதி அனுப்பிய உரையை நிகழ்வில் தலைமைதாங்கிய திரு. பா. அ. ஜயகரன் அவர்கள் சபையோருக்காக வாசித்தார். பிரவீன் அவர்களால் 95 பக்கங்களைக் கொண்ட இந்தக் கவிதைத் தொகுப்பின் அட்டைப்படம் வடிவமைக்கப் பட்டிருக்கின்றது.

இதைத் தொடர்ந்து நூல் ஆசிரியரால் சிறப்புப் பிரதிகள் வழங்கப் பெற்றன. இந்த நிகழ்வில் எழுத்தாளர் தேவகாந்தன், எழுத்தாளர் குரு அரவிந்தன், நூல் ஆசிரியரின் நண்பர்களான கணபதிப்பிள்ளை வித்தியானந்தன், கனகசபை பிரேமச்சந்திரா, எல்லாளன் ராஜசிங்கம், கனகசபை குருபரன், பேரா சவுந்தரநாதன், லெஸ்லி ரவிச்சந்திரா ஆகியோர் நூல் ஆசிரியரிடம் இருந்து சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவில் சிறப்புரை ஆற்றியவர்கள், சிறப்புப் பிரதிகள் பெற்று நிகழ்வுக்குச் சிறப்புச் சேர்த்தவர்கள், வருகை தந்தவர்கள் எல்லோருக்கும் தனது ஏற்புரையில் எழுத்தாளர் வ.ந. கிரிதரன் நன்றி தெரிவித்தார். மேலும் இந்த நிகழ்விற்கு மிகவும் உறுதுணையாக விளங்கிய தேடகம் அமைப்புக்கும், தலைவருக்கும் நிகழ்வுக் காணொளியைப் ஒளிப்பதிவு செய்தமைக்கும், புகைப்படங்கள் எடுத்தற்கும் தடயம் நிறுவனத்துக்கும், அதன் ஸ்தாபகர் கிருபா கந்தையாவுக்கும், நிகழ்வைப் புகைப்படங்களில் ஆவணப்பதிவாக்கிய நண்பர் அலெக்ஸ்ஊக்கும் நன்றியைத் தெரிவித்தார். மாலை 7 மணியளவில் வெளியீட்டு விழா இனிதே முடிவடைந்தது.

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**எஸ். சிவராமகிருஸ்ணன், வெள்ளவத்தை, கொழும்பு 6.**

**கேள்வி:** ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் அடுத்தவருடம் நிச்சயம் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறாரே. அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தானே நடத்தப்படவேண்டியிருக்கின்றது. இருபத்தி ஐந்தாம் ஆண்டு தானே பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடையும். அப்படியெனில் பாராளுமன்றத்திற்கு முன்கூட்டியே தேர்தல் நடாத்தப்படவிருக்கின்றதா?

**வியுக்தியார்:** நீங்கள் சொல்வது சரியானதுதான். பாராளுமன்றத்தின் பதவிக்காலம் இருபத்திஐந்தாம் ஆண்டில்தான் முடிவடையவிருக்கின்றது. இருபதாம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தேர்தல் நடைபெற்றது. அப்படி முன்கூட்டியே தேர்தல் நடைபெற்றால், இந்த பாராளுமன்றத்திற்கு முதல்தடவையாக தெரிவான பல எம்.பி.க்கள் ஐந்தாண்டுகள் பாராளுமன்றத்தில் பதவியில் இருந்திருக்க மாட்டார்கள். அப்படியானவர்கள் அடுத்த தேர்தலில் வெற்றி பெறவில்லை என்றால் அவர்களுக்கு ஓய்வூதியமும் கிடைக்காதல்லவா. அவர்களிடமிருந்து ஜனாதிபதி எதையோ எதிர்பார்க்கிறார் என்று நினைக்கிறேன். அதுதான் தேர்தல் என்று அவர்களை அச்சுறுத்திப் பார்க்கிறார் போலும்.

**தி. துஷியந்தன், இருபாலை, கோப்பாய்.**

**கேள்வி:** யாழ். சிறைச்சாலையில் பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். பொலிசாரின் சித்திரவதையே இளைஞரின் மரணத்திற்கு காரணம் என்று மருத்துவ பரிசோதனையில் தெரியவந்த பின்னராவது சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்.? அந்த சம்பவத்துடன் தொடர்புடைய பொலிசார் உடனடியாகவே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்திருந்தாரே. இதைவிட வேறு எந்த நடவடிக்கையை இந்த நாட்டில் எதிர்பார்க்கிறீர்கள்?

**கந்தசாமி நிதர்சன் தவசிகுளம், கொடிகாமம்.**

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலொன்று வைக்காவிடின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு அனுப்ப தயாராக உள்ளோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** அதுதான் எனக்கும் புரியவில்லை. தேர்தல் வைத்தால்தானே அவரை அவரால் வீட்டுக்கு அனுப்பமுடியும். தேர்தல் நடந்தால் தானே வெற்றி பெறுவேன் என்று தொடர்ந்து கூறிவந்தவர் அவர். இப்போது தேர்தல் நடத்தாவிடில் அவரை வீட்டுக்கு அனுப்புவோம் என்கிறார். அதுதான் புரியவில்லை.

**நடராஜா விஸ்வா, கோயில்குளம், வவுனியா.**

**கேள்வி:** பொருளாதார பாதிப்புக்கு யார் பொறுப்புக் கூறவேண்டும் என்பதை உயர்நீதிமன்றம் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தியுள்ளது என்றும், நீதிமன்றத்துக்கு தமது கௌரவத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கிறாரே?

**வியுக்தியார்:** நீதிமன்றத்திற்கு நாட்டு மக்கள் நன்றி சொல்லத்தான் வேண்டும். ஆனால் முன்னாள் ஜனாதிபதி சொல்வதுதான் கொஞ்சம் நெருடலாக இருக்கின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு அவர் தான் பொறுப்புக்கூறவேண்டும் என்று அதே உயர்நீதி மன்றம் தீர்ப்பு சொன்னபோது அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னவர் இவர். இப்போது அதே நீதிமன்றத்தீர்ப்பை வரவேற்றிருக்கிறார். முதலில் அந்த தீர்ப்பை மதித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்றம் கொடுக்கச்சொன்ன பத்துக்கோடி ரூபாவையும் அவர் முதலில் கொடுக்க அல்லவா வேண்டும்.

**கே. ரமணன், மாமாங்கம், மட்டக்களப்பு.**

**கேள்வி:** தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா உயிருடன் இல்லை என்றும் தலை வருடன் தோளோடு தோள் நின்று போராடி - இன்று புலம்பெயர்ந்து பல நாடுகளில் வசிக்கும் போராளிகளுக்கு இந்த உண்மை தெரியும் என்பதால் தேசியத் தலைவரின் தியாகத்தை கொச்சைப்படுத்த விடாமல் இந்த உண்மையை அவர்கள் வெளியில் கூறவேண்டும் என்றும் ஜனநாயக போராளிகள் கட்சியின் துளசி தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** தலைவரின் மகள் உயிருடன் இருப்பதாகவும் நாளை மாவீரர் தினத்தன்று அவர் வெளித்தெரிவார் என்றும் புலம்பெயர் மண்ணில் சிலர் தொடர்ந்து புரளி கிளப்பி வருகிறார்கள். அண்மைக்காலமாக பலரும் இவ்வாறு சொல்லிவருவது எதற்காக என்பதும் நாம் புரிந்து கொள்ளக்கூடியதுதானே. தலைவர் தனது மகளை மாத்திரம் பத்திரமாக வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டார் என்று பிரச்சாரம்செய்வது தலைவரை கொச்சைப்படுத்துகின்றது என்பதைத் தெரிந்து கொண்டே இவர்கள் செய்கிறார்கள் என்றால், அவர்கள் யார் என்பது நாம் சொல்லி இங்கே தெரியவேண்டியதில்லையே. அதுசரி, துவாரகா உயிருடன் இல்லை என்றால் அதனை துளசியே சொன்னால் போதாதா? அவர் ஏன் இந்த உண்மை தெரிந்த போராளிகள் சொல்லவேண்டும் என்கிறார் என்பதும் புரியவில்லை.

**டேவிட் நிரஞ்சன், 2ம்குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** வடக்கு தமிழ் அரசியல் கட்சிகளை தடை செய்ய வேண்டும் என்று குறிப்பிடும் ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினரின் மூளையை பரிசோதனை செய்ய வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அப்படியெல்லாம் பேசினால்தான் தங்களுக்கு சிங்கள மக்கள் வாக்குப்போடுவார்கள் என்று நம்புகின்ற சில அரசியல்வாதிகள் அப்படிப்பேசுவது இருக்கட்டும், விடுதலைப் புலிகள் யுத்தம் புரிந்துகொண்டிருந்தபோதும், இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்தபோதும் அவரது கட்சி பேசாத பேச்சுக்களா? இப்போது அவர்களின் மூளை சரிவந்துவிட்டதோ என்னவோ?

ஈழநாடு



## கட்டார் இராஜதந்திரம் முழுமையாக போரை நிறுத்துமா?

# காசா யுத்த நிறுத்தமும் பணயக் கைதிகள் விடுவிப்பும்:

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இஸ்ரேல் - ஹாமாஸ் இடையிலான போர் ஒன்றரை மாதத்தை எட்டியுள்ள நிலையில் இப்போரை தற்காலிகமாக நிறுத்துவதற்கு கட்டார் அரசின் இராஜதந்திரத்தாலும், மத்தியஸ்தத்தாலும் இணக்கம் காணப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய மக்களில் ஐம்பது பேர் நான்கு நாட்களுக்குள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் இக்காலக் கட்டத்தில் போர் தற்காலிகமாக நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு நாள் சண்டை நிறுத்த ஒப்பந்தம் போரை முழுமையாக முடிவுக்கு கொண்டுவர வழிவகுக்கும் என்று கத்தார் பிரதமர் முகமது பின் அப்துல் ரஹ்மான் பின் ஜாசிம் அல் தானி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நீண்ட நாட்களாக போர் நடைபெற்று வருவதால் இருதரப்பிலும் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் என்று சுமார் 17,000 பேர் இதில் பலியாகி இருக்கின்றனர்.

குறிப்பாக, காசாவில் உள்ள பொதுமக்கள் மனிதாபிமான உதவி கிடைக்காமல் அவதிப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு உதவி கிடைக்க உலக நாடுகள் முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. அத்துடன் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் காசாவிற்கு மனிதாபிமான உதவிகளை விரைவு படுத்த கோரியுள்ளது.

தற்போதய போர் நிறுத்தம் ஒப்பந்தம் செய்ய கட்டார் நடுநிலையில் செயல்பட்டு வந்தது. இருதரப்பிலும் பிணைக்கைதிகளை விடுவிக்க அது பேச்சுவார்த்தையையும் நடத்தி வந்தது.

இந்நிலையில், ஹமாஸ் தாங்கள் பிடித்து வைத்துள்ள 240 இஸ்ரேலிய பிணைக்கைதிகளில் 50 பேரை விடுதலை செய்ய சம்மதம் தெரிவித்துள்ளது.




### கட்டாரின் இராஜதந்திரம் வெற்றியளிக்குமா?

கட்டார் அரசின் இராஜதந்திரத்தாலும், மத்தியஸ்தத்தாலும் மேலும் பிணைக் கைதிகளை விடுவித்து, முழுமையான போரைத் தடுக்க முடியுமா என்பதனை இனி வரும் நாட்களிலே தான் பார்க்க முடியும்.

சில வாரம் முன்பாக ஹமாஸால் பிணைக் கைதிகளாக இருந்த அமெரிக்கத் தாய் மற்றும் மகளின் திடீர் விடுதலைக்கு கட்டார் அரசு முக்கிய பங்கு வகித்தது. இப்போது ஹமாஸ் வசமுள்ள சிறை பிடிக்கப்பட்டவர்களை விடுவித்து, போரை நிறுத்தும் நோக்கில், கட்டார் அரசு மத்தியஸ்தத்திற்கு வழிவகுத்துள்ளது.

இரண்டு பிணைக் கைதிகளை நிபந்தனையின்றி விடுவித்தது, நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கையாக இருந்தது. ஹமாஸ் உடனான வெற்றிகரமான பிணைக் கைதிகள் பேச்சுவார்த்தை கட்டாரை இந்த நெருக்கடியில் இராஜதந்திர முக்கியத்துவத்தை வெளிக்காட்டியுள்ளது.

எண்ணெய் வளம் கொண்ட பாரசீக வளைகுடாவில் உள்ள கட்டார் அரசின் தொடர் இராஜதந்திர முயற்சிகளில் இது சமீபத்திய வெற்றியாகும். கட்டார் அரசால் சமீபத்தில் அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையில் கைதிகள் பரிமாற்றம் நிகழ்ந்தது.

2021 இல் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறுவதற்கு முன்பு தலிபான்களுடன் சமாதானப் பேச்சுக்களையும் நடத்தியது. ஆனால் ஹமாஸின் அரசியல் தலைவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த கட்டாரின் செயலால், இஸ்ரேலுக்கு தன்னை ஒரு மத்தியஸ்தராக முன்வைக்கும் முயற்சியில் கண்டனங்களை எதிர்





நோக்கி இருந்தது.

### இஸ்ரேலிய அமைச்சரவை ஒப்புதல்:

காசாவில் போர் நிறுத்தத்திற்கு ஈடாக ஹமாஸால் கைப்பற்றப்பட்ட பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த உடன்பாட்டின் மூலம் நான்கு நாட்கள் போர் நிறுத்தம் செய்ய முதல் தடவையாக இஸ்ரேலிய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது.

அதேவேளையில், 50 பிணைக்கைதிகளை விடுவிப்பதற்குப் பதிலாக இஸ்ரேலிய சிறைகளில் உள்ள 150 பாலஸ்தீனர்களை விடுவிக்க இஸ்ரேல் சம்மதித்திருப்பதாக ஹமாஸ் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும், ஹமாஸ் வசம் உள்ள இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் விடுவிக்கப்பட மாட்டார்கள் எனவும் உடன்பாடு ஒப்புக்கொள்ளப்படும் பட்சத்தில், இஸ்ரேல் நாட்டு சிறைகளில் இருந்து 300 பாலஸ்தீன பெண்கள் மற்றும் குழந்தைகள் விடுவிக்கப்படுவர்களும் எனவும் முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

### இறுதிக்கட்டத்தை நெருங்கும் ஒப்பந்தம் :

போர் நிறுத்தத்திற்கு தொடர்ந்து இஸ்ரேல் மறுத்து வந்த நிலையில், பிணைக் கைதிகளின் உறவினர்கள் மற்றும் மக்கள் போராட்டம், இஸ்ரேலின் முடிவை மறுபரிசீலனை செய்யவைத்துள்ளது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தமானது நான்கு நாள் போர் நிறுத்தம் மற்றும் பணயக் கைதிகள் விடுதலையை உள்ளடக்கிய உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

மேலும், காசா மீது தரைவழி மற்றும் வான்வெளி தாக்குதல் நடத்தப்பட மாட்டாது என்றும், நாங்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை எட்ட நெருங்கி விட்டோம் என ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே தெரிவித்துள்ளார்.

பிணைக் கைதிகளை விடுவிப்பதற்காக ஹமாஸ் அமைப்புடன் மத்தியஸ்தம் செய்து வரும் கத்தார், இந்த விவகாரத்தில் இஸ்ரேல் பேச்சு வார்த்தை நடத்தி வந்தது. கத்தார் இருதரப்புகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தி வந்த நிலையில், இரண்டு தரப்பிலும் சுமுக முடிவு எட்டப்பட்டது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில். இஸ்ரேல் நான்கு நாள் போர் நிறுத்தமும், தெற்கு காசா உட்பட காசாவின் பகுதிகளில் தரைவழி மற்றும் வான்வழி தாக்குதலை நிறுத்தவும் அந்த பேச்சுவார்த்தையில் கேட்கப்பட்டுள்ளது.

### இஸ்ரேலின் போர்க்குணம் :

இரு வாரம் முன்பாக பிணைக் கைதிகளை விடுவிக்கும் வரை போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாக தெரிவித்தார். ஹமாஸின் இராணுவத் திறன்களை அழித்து, இஸ்ரேலிய பிணைக் கைதிகள் அனைவரையும் திருப்பி பெறும் வரை போரைத் தொடரப் போவதாக இஸ்ரேல் தெரிவித்தது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் மீண்டும் ஹமாஸுக்கு எதிரான தாக்குதலை இஸ்ரேல் தொடங்கும். போர் நிறுத்தம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது உடனடியாகத் தெரியவில்லை.

நாங்கள் போரில் இருக்கிறோம், நாங்கள் போரைத் தொடர்வோம். எங்கள் எல்லா இலக்குகளையும் அடையும் வரை நாங்கள் தொடருவோம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இஸ்ரேலின் போர்க்குணம்சத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த தற்காலிக போர் நிறுத்தத்தின் போதும் உளவுத்துறை செயல்படும் எனவும், அடுத்த கட்ட போருக்கு இராணுவம் தயாராக உள்ளதாகவும் நெதன்யாகு கூறியுள்ளார். காசா இஸ்ரேலை அச்சுறுத்தும் வரை போர் தொடரும் என பாதுகாப்பு உயர் அதிகாரிகள கலந்துகொண்ட கூட்டத்தில் அவர் கூறினார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போருக்கு இன்னும் நிரந்தர முடிவு எட்டப்படவில்லை. காசாவிலிருந்து இஸ்ரேலுக்கு புதிய அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்பது உறுதி செய்யப்படும் வரை போரைத் தொடர்வோம் என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

### போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்:

இந்தப் போர் நிறுத்தத்தின் கீழ் மேலும் விடுவிக்கப்படும் ஒவ்வொரு 10 பணயக் கைதிகளுக்கும் ஒரு நாள் போர் நிறுத்தம் நீட்டிப்பதாக இஸ்ரேல் கூறியது. முதலில், பெண்கள் மற்றும் குழந்தைகள் விடுவிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. காசா பகுதியில் பிடித்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளுக்கு ஈடாக, இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பாலஸ்தீன பணயக் கைதிகளை விடுவிப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது.



நான்கு நாள் போர் நிறுத்தத்தின் போது இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் டாங்கிகள் காஸாவில் அமைதி பேணும் என தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் இஸ்ரேலிய படைகள் யாரையும் தாக்காது அல்லது கைது செய்யாது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், உதவிப் பொருட்களை ஏற்றிச் செல்லும் 200 வாகனங்கள், நான்கு எரிபொருள் வாகனங்கள் மற்றும் நான்கு எரிவாயு வாகனங்கள் எகிப்தின் ரஃபா கடவுப்பாதை வழியாக தினமும் காசாவுக்குள் நுழைய அனுமதிக்கப்படும்.

தற்போது காசாவின் வான்வெளி முழுவதும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ளது. நான்கு நாள் தற்காலிக போர்நிறுத்தத்தின் போது, தெற்கு காஸாவில் விமானங்கள் பறக்க முற்றிலுமாகத் தடை இருக்கும். வடக்கு காஸாவில் ஒவ்வொரு நாளும் ஆறு மணி நேரம் இந்தக் கட்டுப்பாடு அமலில் இருக்கும்.

பல வார பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்த ஒப்பந்தத்திற்கு மத்தியஸ்தம் செய்த கத்தார், மனிதாபிமான அடிப்படையில் போர்நிறுத்த உடன்பாடு செய்துள்ளது. கட்டார் அரசின் இராஜதந்திரத்தாலும், மத்தியஸ்தத்தாலும் மேலும் பிணைக் கைதிகளை விடுவித்து, முழுமையான போரைத் தடுக்க முடியுமா என்பதனை இனிவரும் நாட்களிலே தான் பார்க்க முடியும்.

●

## பா.ஜ.க....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

75 ஆண்டுக ளுக்கு முன்னர் நமது நாட்டை விட்டு வெளியேறிய வெள்ளையர் விட்டுச் சென்ற சில தேவையற்ற ஆட்சி முறைகளை நாம் இன்னும் அடியொற்றி வருகிறோம் முக்கியமாக, மத்திய அரசால் நியமிக்கப்படும் இந்த ஆளுநர் கள். காரணம் வெள்ளை ஆட்சி யாளர்களுக்குப் பதில் நம் இந்தியச் சக்கரவர்த் திகள் பதவியில் அமர்ந்திருக்கின்றனரேயன்றி ஜனநாயகம் கோலோச்சவில்லை. ஏமாளிக ளான, படிப்பறி வில்லாத வாக்காளர்களின் வாக்குகளுக்கு விலை நிர்ணயம் செய்து, தேர்தல் நாளில் பணம், மது, பிரியாணி என்று விநியோகம் செய்து, நீண்ட காலத்திற்குப் பொருளாதாரத்தை முடக்கக்கூடிய இலவசங் களை வாரிவழங்கி ஆட்சியைப் பிடிப்பவர்கள் இந்தப் பெருந்தலைவர்கள்.

ஒழுக்கமற்று இப்படி அதிகாரத்தைப் பிடித்த பிறகு, அடுத்த தேர்தலுக்குச் செலவு செய்ய வேண்டிய பணத்தை மக்களிடமிருந்து கொள் ளையடிப்பதில் முழு மூச்சுடன் ஈடுபடு கின்றனர். சுதந்திர இந்தியாவில் அரசியல் என் பது இத்தகைய கேலிக்கூத்தாகத்தான் இருந்து வருகிறது. மத்தியில் ஆட்சியில் இருக்கும் கட்சி, தனது ஆளுநர்கள் மூலம் மறைமுகமா கப் பல வழிகளில் பல மாநிலங்களைத் தன் கட்டுப் பாட்டில் வைத்திருப்பது அவசியம் என்றே கருதுகிறது. பல நிலைகளிலும் தார்மீக அரசியல் நடத்தை, விதி விலக்காக ஆங் காங்கே காணப்பட்டாலும், அவை காலப் போக்கில் அரிதாகி வருகின்றன என்பது வருத்தமளிக்கிறது.

எனது 'ஈழநாடு' கட்டுரைகளில் நான் இதைப் பல முறை குறிப்பிட்டிருக்கிறேன் மீண்டும் அதை வலி யுறுத்த விரும்புகிறேன். அறிவார்ந்த, படித்த சமூகத்தினர் என்று கூறிக்கொள்ளும் பிரிவினர், தங்களைச் சுற்றி வீசும் முடை நாற்றத்தைப் பொருட்படுத்தாத உறக்க நிலையிலிருந்து விழித்தெழுந்து, கள மிறங்கிச் சுத்தம் செய்ய முனையாத வரை, இந்த ஊழல் அரசியல்வாதிகளையும் அவர்க ளுக்கு வளைந்து கொடுக்கும் அதிகாரிகளை யும் குற்றம் சொல்வதில் பலனில்லை. குண்டு

சட்டியில் குதிரை ஓட்டும் இவர்கள், தாம் தூய்மை யான ஜனநாயகத்துக்கு உண்மை யான அச்சுறுத்தல்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.



### கார்த்திகைத் திங்களன்று

## நேர்த்தி ஒன்றை வைத்திடுவோம்

இருக்கு வேதம் முதல்
இருக்கிற வேதம் வரை
செருக்குடன் சொல்கிறது
தருக்கள் தான் தெய்வமென்று.

விதம் விதமாக மதமிருந்தாலும்
போதும் போதுமென வரந்தருவது
நிதம் நிதம் தாவரந்தான்
சதவீதம் அது சாத்தியம்தான்.

ஊரார் வீட்டு வளவென்றாலும்
வேராழ நட்டகன்று வாழ்ந்தபின்
பேரைச் சொல்லும் மறவாதீர்
பாரும் பறைசாற்றும் மகிழ்வாக.

மாண்டவர் நினைவாகவும்
மரக்கன்றை நாட்டிவைப்போம்.
ஆண்டுதோறும் அதற்கும்
விளக்கை ஏற்றி வைப்போம்.

ஆதலால் நேர்ந்து கொள்வோம்
காந்தளாள் மாதத்தில் மரம்நாட்ட
சாதலின் பின்னரும் சாட்சியாகும்.

- மகேசன் கஜேந்திரன்.

## ராஜபக்ஷ...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

துருப்புச் சீட்டு. இதனை வைத்து தண்டனை வழங்க வேண்டும், குடியுரி மையைப் பறிக்க வேண்டும் என்ற அரசியல் பரப்புரைகள் மூலம் தமது வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்ளமுடியும். ரணிலுக்கு ராஜபக் ஷக்களையும் பொதுஜன உறுப்பினர்க ளையும் கையாள்வதற்கான வாய்ப்பு மேலும் கூடுவதுடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரது பலத்தைத் தக்கவைக்கும் முயற்சிகளுக்கு இது மேலும் வலுச் சேர்க்கும். இலங்கையின் அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பில் அடிப்படை மாற்றங்கள் நிகழாதவரை அரசியல் தலைவர்கள் இவ்வாறு குண்டுச்சட்டியில் மாறி மாறி குதிரை ஓட்டும் நிலையே காணப்படும்.

# தமிழ்கட்சிகளை மீண்டும் ஐக்கியப்படுத்துவதற்கு...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான கால அரசியல் அனுபவத்தைக் கொண்ட அவரிடம் தமிழர்கள் எதிர்பார்த்த வகி பாகத்தை உரிய முறையில் அவரால் கையாளமுடியாமல் போய்விட்டது.

சம்பந்தன் அவர்கள் நீண்ட அரசியல் வாழ்வைக் கொண்டிருந்தாலும், அவரது அரசியல் மரபு (Political Legacy ) என்று அமையப்போவது தமிழ் தேசிய கூட்ட மைப்பின் தலைவராக அவர் முன்னெ டுத்த செயற்பாடுகளும் கடைப்பிடித்த அணுகு முறைகளுமேயாகும்.

சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பி னர் பதவியைத் துறக்கவேண்டும் என்று அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரி வித்த கருத்தை அடுத்து இந்த பத்தியில் இது குறித்து முன்னரும் குறிப்பிடப்பட் டது. அதனால் அதை இங்கு விரித்துக் கூறவேண்டியதில்லை.

கட்சி அரசியல் மாச்சரியங்களுக்கு அப்பால் தமிழ் மக்களின் நலன்களை மனதிற்கொண்டு தமிழ் தேசிய கூட்ட மைப்பின் அங்கத்துவ கட்சிகளின் தலை வர்கள் கட்டுக்கோப்பாக விவகாரங்க ளைக் கையாளக்கூடிய அணுகுமுறை களை கடைப்பிடித்திருக்க வேண்டும். ஆனால், பாராளுமன்ற தேர்தல்களின் போது அவர்களிடம் காணப்பட்ட ஐக்கிய உணர்வை பிறகு காணமுடிந்த தில்லை.

ஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொண்ட தமிழ் இயக்கங்க ளும் கூட்டமைப்பில் அங்கம் வகித்தன. ஜனநாயக அரசியல் தொடர்பில் அந்த இயக்கங்களுக்கு இருக்கக்கூடிய தடுமாற றங்கள் அல்லது குறைபாடுகளை மனதிற் கொண்டு நீண்ட பாரம்பரியத்தையு டைய இலங்கை தமிழரசு கட்சியின் மூத்த தலைவர்களான சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் கூட்ட மைப்பை குலையவிடாமல் வைத்திருப் பதில் கண்ணும் கருத்துமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர்களும் கட்சி அரசியல் நலன்களின் அடிப்படையில் செயற்பட்டதே கூட்டமைப்பை உறுதி யான ஒரு அரசியல் இயக்கமாக கட்டி யெழுப்ப முடியாமல் போனதற்கு முக்கிய காரணமாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தற்போது காவரையறையின்றி ஒத்திவைக்கப் பட்டிருக்கும் உள்ளூராட்சி தேர்தல் களுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் கூட்டமைப்பில் பிளவு ஏற்பட்டு சில கட்சிகள் தனிவழியில் போனது தேர்தல் அரசியலில் அவர்கள் எந்தளவுக்கு தங்கள் தனித்தனி அரசியல் நலன்களை மாத்தி ரம் பேணுவதில் அக்கறையாக இருக்கின் றன என்பதை பிரகாசமாக அம்பலப் படுத்துகிறது.

தமிழரசு கட்சி உட்பட இந்த கட்சி கள் சகலதுமே தமிழ் மக்கள் மத்தியில் தங்களது தனித்தனியான செல்வாக்கை பரீட்சித்துப் பார்ப்பதற்கான ஒரு கள மாக உள்ளூராட்சி தேர்தல்கள் அமை யும் என்று எதிர்பார்த்தன. ஆனால், அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை.

சகல தமிழ்க் கட்சிகளுமே இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையை அடிப் படையாகக் கொண்ட தீர்வையே நாடி நிற்கின்றன. அவற்றில் ஒரு கட்சியைத் தவிர மற்றையவை எல்லாமே இடைக் கால ஏற்பாடாக பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று கோருகின்றன. அத்துடன் உள்நாட்டில் தமிழ் மக்களை அணி திரட்டி ஜனநாயக அடிப்படையிலான போராட்டங்களை முன்னெடுத்து அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கான வலுவைக் கொண் டிராத இக்கட்சிகள் சர்வதேச சமூகத்தின் ஆதரவை நாடவதை முக்கியமான தந்திரோபாயமாக கடைம்பிடிக்கின்றன.

இத்தகைய ஒரு பின்புலத்தில், வடக்கு,கிழக்கு மாகாணங்களின் குடிப் பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கு டன் இராணுவத்தின் அனுசரணையுடன் சிங்கள பௌத்த பேரினவாதச் சக்திகள் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் நல அபகரிப்பு மற்றும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் உட்பட தமிழ் மக்கள் உடனடியாக எதிரநோக்குகின்ற பெரு வாரியான உடனடிப் பிரச்சினை களைக் கையாளுவதற்கு ஒன்றிணைந்து செயற் படுவதில் என்ன தடை இருக்கிறது?

தேசிய இனப்பிரச்சினை 20 ஆம் நூற் றாண்டின் பெரும்பாலான காலப்பகுதி யில் இருந்த தோற்றப்பாட்டில் தற் போது இல்லை என்று கனடாவில் வசிக்கும் இலங்கை அரசியல் ஆய்வாளர் ராஜன் பிலிப்ஸ் அண்மையில் தெரிவித்த கருத்தை எமது தமிழ் அரசியல் தலை வர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

மலையக தமிழர்களின் குடியுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு விட்டது. பிராந்திய ரீதியில் வரையறுக் கப்பட்ட முஸ்லிம் கட்சிகள் தோற்றம் பெற்றுவிட்டன. இலங்கைத் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டி ருக்கி றார்கள். சிறுபான்மை இனத்த வர்களில் பெரும்பான்மையானவர்களாக வடக்கு, கிழக்கு தமிழர்கள் இனிமேலும் இல்லை. மொழியுரிமை விடயத்திலும் முஸ்லிம்களும் இந்திய வம்சாவளி சமூகமும் மும்மொழிகளையும் கையா ளும் போக்கு அதிகரித்துவருகிறது. ஆங்கிலக் கல்வியில் சகல சமூகங்களும் அதிக அக்கறை காட்டுகின்றன. அதனால் மொழியியல் அமைப்பும் (Linguistic landscape ) மாற்றம் கண்டிருக் கிறது என்று காரணங்களை ராஜன் பிலிப்ஸ் அடுக்கிக்கொண்டு போகிறார்.

அவரது கருத்து விவாதத்துக்கு உரியது என்றபோதிலும் தமிழ் அரசியல் தலைவர்கள் அதில் சிந்திப்பதற்கு பல விடயங்கள் இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகளில் தமிழர்களின் அரசி யல் அபிலாசைகள் மற்றும் மனக்குறை களின் அடிப்படையில் பிரதான அழுத் தத்தை கொடுக்கக்கூடிய வாய்ப்புக்கு நாளடைவில் நேரக்கூடிய கதி குறித்து சிந்திக்கவேண்டியிருக்கிறது.

தமிழர்களின் சனத்தொகை குறைந்து கொண்டு போவது மாத்திரமல்ல, தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங் களில் புவியியல் அமைப்பிலும் பெருமளவு மாறுதல்கள் ஏற்பட்டுவிட் டன. இவை எல்லாம் தமிழ் தலைவர்கள் மிகுந்த அக்கறையுடன் நோக்கவேண்டிய பிரச்சினைகளாகும்.

இறுதியாக, தமிழர்களுக்கு எதைக் கொடுக்கக்கூடாது என்பதில் சிங்கள அரசியல் சமுதாயம் அதன் கட்சி அரசி யல் முரண்பாடுகளுக்கு மத்தியிலும் உறுதியான ஒருமித்த நிலைப்பாட்டில் இருக்கின்ற அதேவேளை தமிழ் அரசியல் சமுதாயம் தமிழர்களுக்கு தேவையா னதை ஒருமித்துக் கோரமுடியாத நிலை யில் இருக்கிறது.

## கொக்குத்....

இந்த நிலையில், நேற்றைய 5 மனித எலும்புக் கூடுகள் முழுமையாக மீட்கப்பட்டன. அத்துடன், இலக்கத் தகடு, மணிக்கூடு, துப்பாக்கி சன்னங்கள் என்பனவும் மீட்கப்பட்டன என்று முல்லைத்தீவு பொது மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா தெரிவித்தார்.

இதேநேரம், இன்று ஞாயிற்றுக்கிழமை அகழ்வுப் பணிகள் நடைபெறாது என்றும் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் அகழ்வுப் பணிகள் தொடரும் எனவும் அவர் கூறினார். (ஐ-10)

## மலையக....

ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும்,

1983ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இராணுவத்துக்கு எதிராக முதலாவதாக நடந்த கண்ணி வெடித் தாக்குதலுக்காக மலையகத்தில் 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்டார்கள். பல ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்க்கப்பட்டார்கள். அவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களுக்கு இரவோடு இரவாக கலைக்கப்பட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில்தான் கண்ணிவெடி வெடித்தது. மலையகத்திலிருந்த மக்கள் என்ன செய்தார்கள்?அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசு நீண்டகாலமாக திட்டமிட்டிருந்த தன்னுடைய இன ரீதியான செயல்பாட்டை செயல்படுத்துவதற்கு அப்போதிருந்த சிறில் மத்தியு, அத்துலத் முதலி, காமினி திஸநாயக்க போன்றவர்களின் தலைமையில் மிகப் பெரிய இனப்படுகொலையை 83 இல் கட்டவிழ்த்து விட்டது.

இவ்வாறான திட்டமிட்ட இனப்படுகொலையில், ஈழ விடுதலைப் போராட்டத்தில் மிகப்பெரியளவில் தங்களைத் உயிர்களை தியாகம் செய்தவர்கள் மலையக மக்கள். மலையகத்தில் வாழும் மக்கள் அநியாயமாக கொல்லப்பட்டார்கள் - அங்கிருந்து கலைக்கப்பட்டார்கள்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்றும் தோட்டங்களில் வேலைசெய்கின்ற எமது சகோதர உறவுகளின் நாள் சம்பளம் 600 ரூபாயை தாண்டிப்போக முடியாமல் உள்ளது. அவர்களின் வாழ்க்கையை யோசித்துப் பாருங்கள். இந்த 600 ரூபாய் ஒரு நாள் சம்பளத்துடன் எப்படி அந்த மக்கள் வாழ முடியும்?தமது பிள்ளைகளுக்கு எப்படி கல்வியை வழங்க முடியும்? சுகாதாரத்தை, போசாக்கான உணவை எப்படி வழங்க முடியும்?

இந்த நாட்டில் மிக மோசமாக ஏமாற்றப்படுகின்ற சமூகமாக மலையக உறவுகள் உள்ளனர். 10 பேர்ச் காணி கொடுத்து ஒரு வீடு கட்டுவதற்குக்கூட ஒரு முழுமையான திட்டம் அரசிடம் இல்லை. அந்த மக்களில் பலருக்கு இன்னும் சொந்தக் காணி இல்லை.

அண்மையில்கூட அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் மலையகம் 200 ஆண்டுகள் நிறைவு விழா கொண்டாடப்பட்டது. அந்த மக்களின் வியர்வையிலும் கண்ணீரிலும் இரத்தத்திலும் தான் அந்த 200 ஆண்டுகள் கடந்துள்ளன. இலங்கையை வருமானமுள்ள நாடாக மாற்றியவர்கள் எமது மலையக சகோதரர்கள்.

இன்று இளம்தலைவராக ஜீவன் தொண்டமான் அந்த மக்களுக்கு தலைமை தாங்குகின்றார். இங்குள்ள ஏனைய மலையகம் சார்ந்த சகோதர உறுப்பினர்களின் ஒற்றுமை அந்த மக்களுக்கு பலமாக அமைய வேண்டும் . அந்த மக்களுக்கு இந்த அரசு 2 ஏக்கர் காணி கொடுக்கத் தயாரா? ஏன் உங்களிடம் காணி இல்லையா? அவர்களுக்கு காணி வழங்க அரசு ஏன் தயங்குகின்றது? - என்றார்.

## இரு....

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் நடந்த அரச வருமானப் பிரிவின் கூட்டத்தில் இந்த விடயங்கள் உரையாடப்பட்டன.

ஜனாதிபதி பணிமனையிலிருந்து 2023 ஆம் ஆண்டு மாநில வருவாய் பிரிவின் எதிர்பார்க்கப்படும் நிதிநிலை அறிக்கையில் முன்வைக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் இந்த விவாதங்கள் நடத்தப்பட்டன, இது ஜனவரி மாத தொடக்கத்தில் சம்பள உயர்வை நடைமுறைப்படுத்த முடியும் என்று சுட்டிக்காட்டியது.

இதன்படி, ஜனவரி முதல் அரச ஊழியர்கள் 5 ஆயிரம் ரூபாய் ஊதிய உயர்வையும் ஓய்வூதியம் பெறுவோர் முழு அதிகரிப்பான 2 ஆயிரத்து 500 ரூபாயைம் பெறுவார்கள்.

வரவு - செலவு திட்ட உரையின் போது, அரச ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவு உதவித் தொகையாக 10 ஆயிரம் ரூபாயும் ஓய்வூதிய தொகையாக 2 ஆயிரத்து 500 ரூபாயும் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரணில்....

திறைசேரியில் வெளிநாட்டு நிதி அதிகமாக இருந்து என தெரிவித்திருந்தார். அது உண்மை. வெளிநாட்டு மூலதனத்தில் ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தில் இலங்கையே இருந்தது. பிரித்தானியாவுக்கும் கடன் கொடுத்ததாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எனது நினைவின் பிரகாரம் ஜேர்மனிக்கே கடன் கொடுதோம் என நினைக்கிறேன். கடன் கொடுக்கும் அளவுக்கு வெளிநாட்டு நிதி எம்மிடம் இருந்தது என்றால் அது எமது உழைப்பாகும். இலங்கையில் ஏற்றுமதி என அப்போது தேயிலை, இறப்பர் மாத்திரமே இருந்தது. இதனால் மலையக தோட்ட தொழிலாளர்களின் உழைப்பே நாட்டின் வெளிநாட்டு நிதி அதிகளவில் இருப்பதற்கு காரணமாகும். இவ்வாறு பெரும் உழைப்பை நாட்டுக்காக செய்த இந்த மக்களுக்கு இலங்கை அரசு என்ன பரிசு வழங்கியது என்றால் ஒன்றும் இல்லை என்றே கூறவேண்டும்.

உலக வங்கி, மத்திய வங்கி, செஞ்சிலுவை சங்கம் மற்றும் இலங்கைக்கு வந்து சென்ற ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் போன்ற அனைவரும் இலங்கையில் மிகவும் பின்தங்கிய மக்களாக பெருந்தோட்ட மக்களை அடையாளம் காட்டிவிட்டு சென்றுள்ளனர். இலங்கையை ஆசியாவில் உயர்ந்த இடத்துக்கு கொண்டு சென்ற மக்களுக்கு இலங்கை அரசு இந்த மக்களுக்கு வழங்கிய பரிசு இதுதான்.

தமிழ்த் தேசிய முற்போக்கு முன்னணி 2015இல் நல்லாட்சி அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டிருந்தது. இந்திய அரசாங்கத்துக்குக்கூட எமது மக்களின் நிலைமை தொடர்பாக சரியான தெளிவு இருக்கவில்லை. நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம்தான் எமது மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றே நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், நாட்டில் எங்கெல்லாம் எமது மக்கள் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் அவர்களுக்கு தெரிவித்திருக்கிறோம்.

வரவு - செலவு திட்டத்தில் பெருந்தோட்ட அபிவிருத்திக்காக 400 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகவும் காணி உரிமை வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருப்பதை வரவேற்கிறோம். ஆனால், அதனை எப்படியாவது அவரிடமிருந்து பிடுங்கி எடுக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் எமக்கு நன்கு தெரியும். சொல்வார் ஆனால் செய்யமாட்டார் - வரும் என்பார் ஆனால் அது வராது.

நாங்கள் இங்கு குறை கூறினால் அது உங்களை அல்ல. ஜனாதிபதியைத்தான். நாங்கள் முரண்பட்டுக் கொள்ளத்தேவையில்லை. நாங்கள் வெளியில் இருந்து அழுத்தம் கொடுக்கிறோம். நீங்கள் உள்ளே இருந்து அழுத்தம் கொடுங்கள் - என்றார்.

# பாலில் துஷ்பிரயோக சம்பவங்களால் செப்ரெம்பரில் 22 சிறுமிகள் கர்ப்பம்!

கொழும்பு, நவ. 26

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 168 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதில், 16 வயதுக்குட்பட்ட 22 சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளனர் என்று சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் அரசாங்க நிதி பற்றிய குழுவில் தெரியவந்தது.

இதனடிப்படையில், சிறுவர்களுக்கான பாலியல் கல்வியை வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டத்தை உருவாக்குவது மிகவும் அவசரமான தேவை எனச் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். (ஐ)

## மாவீரர்களை....

இன்று (நேற்று) மன்னார் நீதிமன்றத்தில் தடை உத்தரவு கோரியிருந்தனர்.

குற்றவியல் நடைமுறைக்கோவை 106ஆவது பிரிவின் கீழ் இத்தடை உத்தரவை அவர்கள் கோரியிருந்தனர்.

இந்த வழக்கு பதில் நீதிவான் இ. கயஸ்பெல்டானோ முன்னிலையில் இடம்பெற்றது.

விசாரணையின்போது, நினைவேந்தலை அமைதியான முறையிலும் - பொது அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையிலும் நினைவுகூர மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. அத்துடன், நினைவேந்தல் நிகழ்வுகளில் விடுதலை புலிகளுக்கு சொந்தமான இலச்சினைகள் மற்றும் கொடிகளை பயன்படுத்தாமல் அமைதியான முறையிலான நினைவுகூரலை முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது - என்று சட்டத்தரணி தெரிவித்தார். (ஐ)

## வெவ்வேறு....

முருகேசு விஜயரத்தினம் (வயது 55) என்ற குடும்பஸ்தர் கடந்த ஆண்டு கட்டடத்தில் இருந்து தவறி வீழ்ந்து கோமா நிலைக்கு சென்றிருந்தார்.

கடந்த ஓராண்டாக கோமா நிலையில் இருந்த அவர் கடந்த 17ஆம் திகதி நாட்டுக்கு கொண்டுவரப்பட்டார். தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று சனிக்கிழமை உயிரிழந்தார்.

இதேபோன்று, முச்சக்கரவண்டி மோதியதில் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த யுவதி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கடந்த 22ஆம் திகதி மாலை இத்தாவில் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் பளை - செல்வபுரத்தை சேர்ந்த குணாளன் மதுஜா (வயது 19 ) என்பவரே உயிரிழந்தார்.

பளை மருத்துமவனையில் சேர்க்கப்பட்ட இவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். (ஐ)

## தடை....

செய்தனர்.

இந்த மனுகள் மீதான விசாரணை நாளை திங்கட்கிழமை காலை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கோப்பாய் துயிலும் இல்லம், நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடம் முன்பாக அமைக்கப்பட்ட நினைவு மண்டபம் என்பவற்றில் நடைபெறவுள்ள மாவீரர் தின நினைவேந்தல்களை தடை செய்யுமாறு கோரியே யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் நிலையங்கள் இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளன. (ஐ)

## பொலிஸ்....

எம். ஏ. சுமந்திரன் மற்றும் சட்டத் தரணி கேசவன் சயந்தன் ஆகியோர் வாதங்களை முன்வைத்தனர்.

“நினைவுகூரல் என்பது அடிப்படை உரிமை. அதனை மறுக்க முடியாது. அதேநேரம் குற்றவியல் சட்டத்தின் 106 என்பது பொதுத் தொல்லை விதித்தல் என்பதாகும். அதன் கீழ் நினைவு நிகழ்வுக்குத் தடை விதிக்க முடியாது“ - என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அவரின் வாதத்தை ஏற்று நீதிமன்றம் மாவீரர் தின நினைவேந்தலுக்கு தடை விதிக்க மறுத்ததுடன் 7 வழக்குகளையும் தள்ளுபடி செய்தது. (ஐ)

## காவலில்....

வைக்க உத்தரவிட்ட நீதிவான், அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கு தயார்படுத்துமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கட்டளையிட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் ஓர் அதிகாரியை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

25 வயது இளைஞன் பொலிஸ் காவலில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களை கைது செய்யுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்ததை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகராசா அலெக்ஸ் (வயது 25) என்பவர் நவம்பர் 8 ஆம் திகதி திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரால் அவரின் நண்பருடன் இணைந்து கைது செய்யப்பட்டார். இவர், கடந்த நவம்பர் 12 ஆம் திகதி மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவதற்கு முன்னர் பொலிஸ் காவலில் இருந்தபோது கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ. ஏ. ஆனந்தராஜா, வாக்குமூலங்கள் மற்றும் நீதிமன்றில் சமர்ப்பித்த சட்ட மருத்துவ வல்லுநரின் அறிக்கையின் அடிப்படையில் ஆட்கொலை என விளம்பல் வழங்கினார். சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முக்கிய சாட்சியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அதைத் தொடர்ந்து, மருத்துவ பரிசோதனை செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சித்திரவதை குற்றச்சாட்டு எழுந்ததையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய குற்ற விசாரணைப் பிரிவை சேர்ந்த உப பொலிஸ் பரிசோகதர் உள்பட நால்வரும் கடந்த திங்கட்கிழமை முதல் பொலிஸ் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ரி. மேனன் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொண்ட குழு விசாரணைகளை முன்னெடுத்தது.

அந்தக் குழுவினரினால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று சனிக்கிழமை நண்பகல் யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். நால்வரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். இந்த வழக்கு நாளை திங்கட்கிழமை மேலதிக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதனிடையே, கைதான பொலிஸார் பாதுகாப்பு நிலைமைகளை கருத்தில் கொண்டு அநுராதபுரம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அரபு நாடுகளை கண்டுகொள்ளாது இலங்கை அரசு செயல்படக்கூடாது!

## ரவூப் ஹக்கீம் எம். பி.

கொழும்பு, நவம்பர் 26

**இஸ்ரேலுக்கு தொழில் வாய்ப்புகளுக்கு இலங்கையர்களை அனுப்புவதன் மூலம் அங்கு உயிரிழப்புகள் ஏற்பட்டால் அது எமது நாட்டில் தேவையற்ற பிரச்னைகளை தூண்ட காரணமாக அமையலாம். அத்துடன், இந்த விடயத்தில் அரசாங்கம் அரபு நாடுகளை கண்டுகொள்ளாது சந்தர்ப்பவாதமாக செயல்படக்கூடாது. அதனால் இலங்கையர்களை தொழிலுக்கு அனுப்பும் விடயத்தை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காஸாவில் பெரும் மனித உரிமைகள் மீறல் மற்றும யுத்தக் குற்றங்கள் இடம்பெற்று வரும் நிலையில் அதேநேரம் இலட்சக் கணக்கான இலங்கை தொழிலாளர்கள் அரபு நாடுகளில் தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்ப நடவடிக்கை எடுத்திருப்பது கவலைக்குரிய விடயம். அதேநேரம் இவ்வாறு அனுப்பப்படும் இலங்கையர்களுக்கு அங்கு இராணுவப் பயிற்சி வழங்குவதற்கான திட்டமும் இருக்கிறது.

அத்துடன், யுத்தம் காரணமாக காஸாவில் இருக்கும் தொழிலாளர்கள் அங்கிருந்து வெளியேறி வரும் நிலையில் அங்கு ஏற்பட்டு வரும் தொழில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கவிருப்பதுடன், பலஸ்தீனர்களிடமிருந்து பலவந்தமாக பறித்துக்கொண்ட காணிகளிலேயே இலங்கையர்களுக்கு இந்த தொழில் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதுதான் உண்மை நிலை. அதனால் இதுதொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன், எமது அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பிழையான நேரத்தில் மேற்கொள்ளப்படும் பிழையான தீர்மானம் என அரபு நாடுகளின் பல தூதுவர்கள் என்னிடம் தெரிவித்திருந்தார்கள். தென்னாபிரிக்க ஜனாதிபதி, பிரேசில் ஜனாதிபதி ஆகியோர் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை துண்டித்துக்கொள்ள நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், நாங்கள் உணர்வுபூர்வமான இந்த விடயம் தொடர்பாக கவலையுடன் பார்க்க வேண்டும்.

அரபு நாடுகள் இஸ்ரேல் தொடர்பாக கலந்துரையாடி வரும் நிலையில் நாங்கள் சந்தர்ப்பவாதிகளாக செயல்படக்கூடாது. ஜேர்மனியில் ஹிட்லர் யூதர்களை கொலை செய்தபோது அங்கு இடம்பெற்ற வெற்றிடங்களுக்கு இலங்கையர்களை அனுப்பும் நடவடிக்கையாகவே இதனை நான் காண்கிறேன். அதனால் இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கு தொழிலுக்கு அனுப்பும் விடயத்தை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். அத்துடன், தொழிலுக்கு செல்பவர்களுக்கு அங்கு இராணுவ பயிற்சிகள் வழங்கப்படுவதன் மூலம் இந்த நாட்டில் வேறு விடயங்களும் இடம் பெறக்கூடும் - என்றார். (ஐ)

## வவுனியா விபத்தில் ஐந்து பேர் படுகாயம்!

வவுனியா, நவ. 26

தேங்காய் ஏற்றிச் சென்ற கெப் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் ஐவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று சனிக்கிழமை பொருளாதார மத்திய நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது. காயமடைந்தவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கஞ்சாவுடன் முல்லையில் இளைஞர் கைது!

முல்லைத்தீவு, நவ. 26

சுமார் ஒன்றரை கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை பிரதேசத்தில் வைத்து அவரை பொலிஸார் கைது செய்தனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று நடத்திய சோதனை நடவடிக்கையின்போது 27 வயதான சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர். (ஐ-10)

# கூட்டு ஒப்பந்தத்தை மீண்டும் அமுல் செய்க

## இராதகிருஷ்ணன் எம். பி.

கொழும்பு, நவ. 26

கூட்டு ஒப்பந்தம் மீண்டும் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். கூட்டு ஒப்பந்தம் இல்லாத காரணத்தால் தோட்ட கம்பனிகள் தான் தோன்றித்தனமாக செயல்படுகின்றன. ஆகவே, கூட்டு ஒப்பந்தம் தொடர்பான தீர்மானங்களுக்கு மலையக மக்கள் முன்னணி இணக்கம் தெரிவிக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று நீர் வழங்கல்,தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கான உத்தேச செலவினம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 1994 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மலையகத்துக்கு என்று தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்ற அமைச்சை உருவாக்கி, காலஞ்சென்ற சௌமிய மூர்த்தி தொண்டமானுக்கு அந்த அமைச்சை வழங்கினார்.

மலையகத்துக்கு என்று ஓர் அமைச்சு உருவாக்கப்பட்டதன் பின்னரே மலையகத்துக்கான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் பெருந்தோட்ட காணி விவகாரத்துக்காக 400 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பெருந்தோட்ட பகுதிகளுக்கு சகல துறைகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்த வேண்டும். பெருந்தோட்ட பகுதிகளில் லயன் குடியிருப்புகளில் தீ விபத்து வழமையானதொன்றாக காணப்படுகிறது. கடந்த ஆண்டு 795 குடும்பங்களை சேர்ந்த 3,306 பேரும் 2023 ஆம் ஆண்டு நிறைவடைந்து 10 மாத காலப்பகுதியில் 73 குடும்பங்களை சேர்ந்த 307 பேரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பெருந்தோட்ட பகுதிகளில் இடம்பெறும் அனர்த்தங்களின் போது அனர்த்த முகாமைத்துவ நிலையம் கவனத்தில் கொள்ளாமல் செயல்படுகிறது. பெருந்தோட்ட கம்பனிகள் ஊடாக அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிடுவது நியாயமற்றது. காணப்படும் சட்ட சிக்கல்களை அனர்த்தங்களின் போதும் அதன் பின்னரான போதும் குறிப்பிட்டுக் கொண்டிருக்க முடியாது.

சம்பள நிர்ணய சபையா அல்லது கூட்டு ஒப்பந்தமா என்று தற்போது பேசப்படுகிறது. என்னை பொறுத்த வரை கூட்டு ஒப்பந்தம் மீண்டும் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளேன். கூட்டு ஒப்பந்தம் இல்லாத காரணத்தால் தோட்ட கம்பனிகள் தான்தோன்றித்தனமாக செயல்படுகின்றன. ஆகவே கூட்டு ஒப்பந்தம் தொடர்பான தீர்மானங்களுக்கு மலையக மக்கள் முன்னணி இணக்கம் தெரிவிக்கும்.

மலையகம் தொடர்பில் குறைகளை மாத்திரம் குறிப்பிட முடியாது. பல நிறைகளும் முன்னேற்றங்களும் காணப்படுகின்றன. எமது மலையக இளைஞர், யுவதிகள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சாதிக்கிறார்கள். எதிர்வரும் மாதம் 24 ஆம் திகதி மலையகம் 200 நிகழ்வை நாங்கள் நடத்தவுள்ளோம்.எமது சமூகத்தின் முன்னேற்றம் மற்றும் நவீன அடையாளத்தை நான் உறுதிப்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## அரச சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி கோரல்

கொழும்பு, நவ. 26

நாட்டின் முழு அரச சேவையிலும் நிலவும் வெற்றிடங்களில் அரைவாசியை நிரப்புவதற்கு அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அமைச்சரவையின் அனுமதியை கோரியுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான 6 பேர் கொண்ட அதிகாரிகள் குழு, ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, மொத்த பொது சேவை வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 324 என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அத்தியாவசியமான வெற்றிடங்கள் என்ற அடிப்படையில் 67 ஆயிரத்து 708 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை உடன் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## அனர்த்தங்களை எதிர்கொள்ள தயார் நிலையில் இராணுவம்!

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, நவ. 26

இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு இரண்டு இராணுவ குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடத்தில் இதுவரை 2 இலட்சத்து 17 ஆயிரத்து 900 பேர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டனர் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## மாமியாரை கொன்றுவிட்டு மருமகன் தப்பியோட்டம்!

கொழும்பு, நவ. 26

மாமியாரை கொட்டனால் தாக்கிக் கொன்றுவிட்டு மருமகன் தப்பியோடியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கம்பஹா - மீரிகம - மாகுர பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயதுடைய பெண்ணாவார்.

இவர் தனது மகளின் கணவருடன் தர்க்கத்தில் ஈடுபட்டார் என்றும் அது முற்றியதில் மருமகன் மாமியாரை கொட்டனால் தாக்கி கொன்றார் என்றும் கூறப்படுகின்றது.

கொலை சந்தேகநபர் தப்பியோடி தலைமறைவாகவுள்ளார் என்றும் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (ஐ)

## கஞ்சாவுடன் ஊர்காவற்றுறையில் இளைஞர்கள் இருவர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், நவ. 26

கேரள கஞ்சாவுடன் ஊர்காவற்துறையில் இருவர் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளில் கேரள கஞ்சா பொதிகளை கொண்டு சென்றபோது கடற்படையினர் வழங்கிய தகவலுக்கமைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சுமார் 3.5 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர்களையும் கைப்பற்ற கேரள கஞ்சா மற்றும் மோட்டார் சைக்கிளை ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-03)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கனடாவில் ஒரே மேடையில் அரங்கேறிய பொன்னையா விவேகானந்தனின் நான்கு நூல்கள்

இராஜவரன்

கனடாவில் வாழ்ந்துவரும் திரு பொன்னையா விவேகானந்தன் எழுதிய நான்கு நூல்கள் ஒக்டோபர் 8-ம் திகதி ரொறன்ரோ கனடாவிலும் நவம்பர் 4-ஆம் திகதி இலண்டன் பிரித்தானியாவிலும் வெளியீடு செய்யப்பட்டிருந்தன. இவ்விரு வெளியீடுகளுமே அரங்கம் நிறைந்த நிகழ்வுகளாக நடைபெற்று, மக்களிடையே பேசுபொருளாகியிருக்கின்றன.

கனடா ரொறன்ரோவில் நடைபெற்ற நிகழ்வைப் பேராசிரியர் திரு. இளையதம்பி பாலசுந்தரம் அவர்கள் தலைமையேற்று நடத்தினார். ஏறக்குறைய 500-க்கு மேற்பட்ட மக்கள் கூடி அரங்கை நிறைத்திருந்தனர். கனடாவில் ஒரு நூல் வெளியீட்டுக்கு இவ்வளவு மக்கள் இதற்கு முன் கூடியதில்லை எனச் சிலர் குறிப்பிட்டனர்.

ஐக்கிய இராச்சியம், இலண்டன் நகரில் நடைபெற்ற நிகழ்வை கிளி பியூப்பிள் அமைப்பும் வணக்கம் இலண்டன் ஊடகமும் இணைந்து நடத்தின. இந்நிகழ்வை மறைந்த கவிஞரும் ஆசிரியருமான காரை சுந்தரம்பிள்ளை அவர்களின் மகள் மாதவி சிவசீலன் தலைமையேற்று நடத்தினார். இந்நிகழ்விலும் வழமைக்கு மாறாக மண்டபம் நிறைந்த மக்கள் கூடியிருந்தனர். மறுநாள் நொட்டிங்காம் தமிழ்ப் பாடசாலை நடத்திய நிகழ்விலும் 100-க்கு மேற்பட்ட மக்கள் கூடி நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

புலம்பெயர் சமூகத்தோரால் பெரிதும் வரவேற்கப் பட்டிருக்கும் இந்நூல்கள் பற்றிய ஆய்வுப்பார்வையாக இக்கட்டுரை அமைகின்றது.

நூல்கள் பற்றிய ஆய்வுக்கு முன்பாக திரு பொன்னையா விவேகானந்தன் பற்றிச் சற்றே தெரிந்துகொள்வது நூல்களைச் செவ்வனவே புரிந்துகொள்ள உதவும். சுருக்கம் கருதி இவர் பெயரை பொ.வி என்றே நான் குறிப்பிடுகின்றேன்.

பொ.வி. கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தொடக்கக்கல்வியைச் சென். திரேசா வித்தியாலத்திலும் தொடர்ந்து யாழ். இந்துக்கல்லூரியிலும் ஓராண்டு கிளி. மத்திய கல்லூரியிலும் கற்றவர். தமிழ் இலக்கியத்தை முதன்மைப் பாடமாகக் கொண்டு, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை, முதுகலை பட்டப்படிப்புகளை நிறைவு செய்தவர். தற்போது தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றார்.

1993-இல் கனடாவுக்குப் பெயர்ந்த இவர், தாய்மொழிக்கல்விச்சூழலிலும் ஊடகத்துறையிலும் இணைந்து பணியாற்றினார்.


கனடாத் தொழில்நுட்பக் கல்லூரியிலும் ரொறன்ரோ மாவட்டக் கல்விச்சபையிலும் தமிழ் கற்பிக்கத் தொடங்கிய இவர், பின்னாளில் ரொறன்ரோ மாவட்டக் கல்விச்சபையில் அனைத்துலகப் பன்மொழிக்கல்வித் திட்ட அலுவலராக உயர்ந்தார். தன்னுடைய தாய்மொழிக் கல்வி தொடர்பாகப் பெற்ற அறிவையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு அனைத்துலகத் தமிழ் மொழிக்கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பாட நூலாக்கத்தில் பெரும் பங்காற்றினார்.


தற்போது ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழி விரிவுரையாளராகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கனடா வளாக விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார். இவருடைய 25 ஆண்டுகால தாய்மொழிக்கல்வி தொடர்பான தேடலும் விளைவுகளுமே இந்நூல்களை ஆக்க உதவியிருக்கின்றன.

பொ.வி. எழுதிய நான்கு நூல்களுள் முதன்மையானதாகக் கருதப்படக்கூடியது 'பெயர்வுத் தமிழ்ச்சமூகம் - இருப்பும் இடர்களும்' என்ற நூலே. 'புலம்பெயர் தமிழர்கள்' என பொதுவாக அழைக்கப்படுகின்ற தொடருக்குப் பெயர்வுத்தமிழ்ச்சமூகம் என்ற சொல்லை இவர் கையாளுகின்றார். இது பொருத்தமென்றே தோன்றுகின்றது. இவர் எழுதியிருக்கும் முன்னுரை புலம்பெயர்ந்தோரின் வரலாற்றுச் சுருக்கமாக அமைந்து, இந்நூலுக்குள் ஈர்ப்போடு நுழைய வழிசெய்கின்றது. பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம் சிறப்பானதோர் அணிந்துரையை வழங்கியிருக்கின்றார்.

இந்த நூல், தாய்மொழிக்கல்வியும் பண்பாட்டுமொழியும், தமிழர் மரபுரிமை - புரிதலும் பேணலும் பெயர்வுத்தமிழரின் இருப்பில் கலைகள், தைப்பொங்கல் - ஒரு வரலாற்று நோக்கு, பண்பாட்டு நோக்கில் தைப்பொங்கல், காமன்விழா - காதற்பெருவிழா என்ற தலைப்புகளிலான ஆறு கட்டுரைகளைக் கொண்டிருக்கின்றது.

தாய்மொழிக்கல்வியும் பண்பாட்டுமொழிக்கல்வியும் என்ற முதற் கட்டுரை, தொடக்கத்தில் பெயர்வுத்தமிழரின் வாழ்வியல் தளத்தை அதன் இயல்புகளின் அடிப்படையில் வரையறுக்க முயல்கின்றது. பலவினத்தோர் கூடி வாழ்கின்ற பன்முகப் பண்பாட்டுச் சூழலில், தனித்தவோர் இனமாகக் கட்டமைத்துச் செல்வதில் தாய்மொழி கொண்டிருக்கும் முதன்மையைத் தெளிவாக விளக்குகின்றார் நூலாசிரியர். "தமிழர்களின் வரலாற்று வாழ்வியற் சட்டகமானது, 'மொழி' என்ற பேராளுமைத்தளத்திலேயே கட்டமைக்கப்பட்டிருக்கின்றது" எனக் கூறும் இவர் புலம்பெயர்ந்தோரின் தாய்மொழிக்கல்விச் சூழலைத் தெளிவாகவே பகுத்து விளக்கி, தாய்மொழிக்கல்வியின் தேவையை உணர்த்துகின்றார். தாய்மொழிக்கல்வியின் நோக்கம் தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துவது மட்டுமன்றி, பண்பாட்டுமொழிக்கல்வியாகவும் உருப்பெறவேண்டும் என இவர் வலியுறுத்துவது சிந்திக்கத்தக்கது.










'தமிழர் மரபுரிமை - புரிதலும் பேணலும்' என்ற கட்டுரை பல்வேறு புதிய செய்திகளை எமக்குத் தருகின்றது. கனடா அரசு ஒவ்வொரு இனத்தவருக்கும் அவர்கள் தமது மரபுகளைப் பேணிச்செல்வதற்கான வாய்ப்புகளைப் பெரிதும் வழங்குகின்றது. கனடாவில் சனவரி மாதம் 'தமிழர் மரபுத் திங்கள்' எனக் கொண்டாடப்படுவதற்குரிய மாதமாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மரபுரிமை என்றால் என்ன? என்பதைத் தேவைகளையொட்டி ஆழமாகப் புரிந்துகொள்வதுடன், மரபுப் பேணல் தொடர்பான செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுக்கவேண்டும் என்பதையும் கூறுகின்றார். மரப்பேணல் தொடர்பான விழிப்புணர்பு தாயகத்திலும் ஏற்படவேண்டும் என அவர் குறிப்பிடுவதையும் கருத்திற்கொள்ளவேண்டும்.

'பெயர்வுத்தமிழரின் இருப்பில் கலைகள்' என்ற கட்டுரை, கலைகளுக்கு இருக்கவேண்டிய தமிழியற் தூய்மை பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆடல், இசை என்ற இருகலைகளும் எவ்வாறு செல்வந்தக் கலைகளாகி, உருமாற்றம் பெற்றுள்ளன என்பதை வரலாற்றுச் சான்றுகள் கொண்டு விபரிக்கும் இவர், பேசும் மொழி, பெசும் பொருள் என்ற இருநிலைகளிலும் தமிழியல் சார்ந்து மீளுருவாக்கத்துக்கு உட்படவேண்டும் என்றும் நாட்டுப்புறக் கலைவடிவங்கள் முதன்மை பெறவேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். தமிழியல் சாராத கலைகள், எதிர்காலத் தலைமுறையினரை வடஇந்தியப் பண்பாடு நோக்கி மடைமாற்றம் செய்துவிடும் எனவும் எச்சரிக்கின்றார்.

அடுத்துவரும் இரு கட்டுரைகளும் தைப்பொங்கலை மையப்படுத்தி எழுதப்பட்டிருக்கின்றன. ஒரு கட்டுரை தைப்பொங்கலின் வரலாற்றை பல்வேறு சான்றுகளின் துணையோடு விரிவாகவே விளக்குகின்றது. இந்து அறுவடை விழாவின் தோற்றம், வளர்ச்சி, எழுச்சி என்பன சிறப்பாகவே ஆய்வுச் சிந்தனையுடன் தொகுக்கப்பட்டிருக்கின்றது. கடந்த நூற்றாண்டுவரை நாட்டுப்புற மக்களின் அறுவடை விழாவாகப் போற்றுப்பட்டு வந்த பொங்கல், எவ்வாறு, யாரால் தமிழ்த் தேசியப் பெருவிழாவாக உருப்பெற்றது என்பதைச் சான்றுகளுடன் கூறுகின்றார். அடுத்த கட்டுரை, பொங்கல் விழா வெளிப்படுத்தும் பத்து வகையான பண்பாட்டுக் கூறுகளை அழகுற விளக்குகின்றது. மத எல்லைகள் கடந்த இவ்விழா, எவ்வாறான மானுடம் தழுவிய உயர் பண்பாட்டு விழுமியங்களை உள்ளடக்கியுள்ளது என்பதுவும் இக்கட்டுரையில் விபரிக்கப்படுகின்றது. தமிழர்கள் அனைவரும் வாசிக்கவேண்டிய கட்டுரைகள் இவை.

இறுதியாக, 'காமன்விழா காதற்பெருவிழா' என்ற கட்டுரை, இந்நாளில் 'காதலர் நாள்' எனக் கொண்டாடப்படும் மேற்குலக நாடுகளின் கொண்டாட்டமான வலன்ரைன் நாளோடு தொடர்புபடுத்தி எழுதப்பட்டுள்ளது. தமிழர் வரலாற்றில் மாசி மாதத்தில் கொண்டப்பட்ட காமன்விழாவின் சிறப்பையும் காதல் உணர்வைப் போற்றும் பண்பையும் சான்றுகளோடு விளக்கும் இக் கட்டுரை, பின்னாளில் மேற்குலகில் வலன்ரைன் நாள் என்ற காதலர் கொண்டாட்டம் தோன்றுவதற்கு அடிக் கோடிட்டிருக்கலாம் எனவும் குறிப்பிடுகின்றார்.

இந்நூல் ஓரளவுக்குப் புலம்பெயர்ந்தோரின் வாழ்வியலை உணரவும் புதிய வாழ்வியற் சூழலில் இனமாக வலுநிலைக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு மொழி, கல்வி, கலைகள், விழாக்கள் என்பன எவ்வாறு உதவவல்லன என்பதையும் விளக்குகின்றது.

இவருடைய மற்றுமொரு நூல் 'தாய்மொழிக்கல்வி - வழிகாட்டல்களும் எடுத்துக்காட்டுகளும்'. இந்நூல் பெயர்வுத் தமிழச்சமூக சூழலில் தாய்மொழி தமிழைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான நூலாகவே எழுதப்பட்டிருப்பினும் ஆசிரியப் பணி செய்கின்ற அனைவருக்குமுரிய நூலாகவே எழுதப்பட்டுள்ளது.

இந்நூலில், தமிழ்மொழிக்கல்வி - அடிப்படைப் புரிதல்கள், கற்பித்தல் கோட்பாடுகள், கற்பித்தலில் திட்டமிடுதலும் அதன் முதன்மையும், தமிழ்மொழி கற்பித்தலில் மொழியியல், கற்பித்தலில் தொடக்கநிலை, இலக்குகளைத் திட்டமிடுதல் போன்ற தலைப்புகளிலான கட்டுரைகள், சிறந்த கற்பித்தலை நோக்கிய வழிகாட்டல்களையும் பரிந்துரைகளையும் கொண்டுள்ளன. கற்பித்தலின் முதல்நிலை, மாணவர்களையும் அவர்கள் தேவைகளையும் ஐயமற உணர்ந்து கொள்வதே. இது தொடர்பான விளக்கங்களை முதற்கட்டுரை தெளிவாக உணர்த்துகின்றது. மேற்குலக நாளாந்தப்பள்ளிகளில் பயன்படுத்தப்படும் கற்பித்தல் கோட்பாடுகள் சிலவற்றை இரண்டாம் கட்டுரை விபரிக்கின்றது. இக்கோட்பாடுகள் மாணவரின் ஆற்றல்வகை அறிந்து வகைப்படுத்திக் கற்பிக்கும் முறைகளை அறிமுகம் செய்கின்றது.

கற்பித்தலுக்குத் திட்டமிடுதலே மிக முதன்மையானது எனக்கூறும் நூலாசிரியர், திட்டமிடும் நுட்பங்களைத் தெளிவாகக் கூறுகின்றார். திட்டமிடுதல் மாதிரி அட்டவணை ஒன்றை இப்பாடத்தோடு இணைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

வாழ்புல நாடுகளில் மொழி கற்பித்தலில் மொழியியல் எனப்படும் ஒலி ஆய்வு தொடர்பான அடிப்படைத் தெளிவு ஆசிரியர்களுக்கு அவசியம் என்ற நோக்கில் 'தாய்மொழி கற்பித்தலில் மொழியியல்' என்ற கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

தாய்மொழிக்கல்வியில் தொடக்கநிலைக்கல்வியே சிறப்பாக அமையவேண்டும் எனக்கூறும் நூலாசிரியர், அவை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பதைப் பற்றி இக்கட்டுரையில் அழுத்தமாகக் கூறுகின்றார். தொடக்க வகுப்புகளில் சொல்வளப் பெருக்கமே முதன்மையானது எனக் கருதும் இவர் அவற்றை எவ்வாறு படிமுறையாக முன்னெடுத்துச் செல்லலாம் என்பதையும் தெரிவிக்கின்றார்.

இந்நூலில் எடுத்துக்காட்டுகளாக ஏழு பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மொழித்திறன்களுக்கேற்ப ஒரு பாடத்தை எவ்வாறு வகைப்படுத்திக் கற்பிக்கவேண்டும் என்ற நோக்கில் பாடப்பகுதிகள் முறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. பாடங்கள் பெரிதும் கதைகளைக் கொண்டுள்ளன. கதைகள் பாடலாகவும் நாடகமாகவும் கொடுக்கப்பட்டிருப்பது சிறப்பு.

இந்தப் நூலை ஆசிரியர்கள் முழுமையாகப் புரிந்து கொள்வார்களெனில் நிச்சயம் பயன்பெறுவார்கள்.

பொ.வி.யின் மூன்றாவது நூல் 'அறிவோம் தமிழ்ப் பண்பாடு' இது இளையோரை மையப்படுத்தியே எழுதப்பட்டுள்ளது என்பது நூலைப் பார்த்தவுடனேளே தெரிந்துவிடுகின்றது.

இந்நூல், பெயர்வுத் தமிழ்ச்சமூக இளையோரை மையப்படுத்தித் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது. தமிழரது அன்றாட வாழ்விலும் நிகழ்வுகளிலும் பின்பற்றப்படும் பண்பாட்டு நடத்தைகள் பலவும் வாழ்புல இளையோரால் தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன. இதைக் கருத்திற்கொண்ட நூலாசிரியர், ஒரு குடும்ப உரையாடல் வடிவில் பல்வேறு பண்பாட்டு நடத்தைகளுக்கான விளக்கங்களை எழுதியுள்ளார். குறிப்பாக, 'ஏன் நிறைகுடம் வைக்கவேண்டும்?' என்பதற்கான விளக்கத்தைப் பண்பாட்டு வழி நின்று விளக்கியுள்ளார். கைகூப்பி வணக்கம் கூறுதல், பண்பாட்டு ஆடைகள் அணிதல், பொட்டு வைத்தல், தோடு, வளையல் போன்றன அணிதல், கோலமிடுதல், விளக்கேற்றல், வாழ்த்துப் பெறுதல் போன்ற பல்வேறு பண்பாட்டு நடத்தைகளுக்கான விளக்கங்களையும் இந்நூலில் காணலாம். இவற்றுட் பல பெரியவர்களுக்கும் புதியனவாகவே இருக்கும். நூலின் நிறைவில் தமிழ்மொழியின் சிறப்புகள் பல பட்டியலிடப்பட்டிருப்பதுடன், தமிழர் மரபுச் சிறப்பை வெளிப்படுத்தும் சிறுகட்டுரையொன்றும் இடம்பெற்றிருக்கின்றது. இதற்கெனவே வரையப்பட்ட அழகான ஓவியங்களைக் கொண்ட இந்நூல் வண்ணத்தில் வெளிவந்திருப்பதும் சிறப்பு. பெயர்வுத் தமிழ்ச்சமூக வரலாற்றில், இளையோருக் காக இலகுநடையில் எழுதப்பட்ட முதல் பண்பாட்டு நூல் இதுவாகும்.

'பொன்னையா விவேகானந்தனின் நாடகங்கள்' என்பது இவர் எழுதியிருக்கும் நான்காவது நூல்.

இந்நாடகங்கள், தனிமனித உணர்வுகளையும் பெயர்வுத் தமிழ்ச்சமூக வாழ்வியல் இடர்களையும் அதிகாரங்களின் அடக்குமுறைகளையும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. இவர் கல்வியாளர் மட்டுமன்றிப் புனைவிலக்கியப் பரப்பிலும் வல்லவர் என்பதை இந்நூல் வெளிப்படுத்துகின்றது.

புலம்பெயர்ந்தோர், தமது வாழ்வை இனவடையாளங்களுடன் கட்டமைத்துச் செல்லும் நோக்கில் இந்நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளமை காலத்தின் தேவை எனக்கருதலாம். தாயகத்தில் உள்ளோர் பெயர்வுற்றோர் வாழ்வியலை ஓரளவுக்குப் புரிந்துகொள்வதற்கும் இந்நூல்கள் பயன்படுகின்றன. இவ்வாறான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவேண்டும் என்பது அவசியம்.



## விஜய் சேதுபதி மகன் நாயகனானார்

விஜய் சேதுபதி மகன் சூர்யா 'பீனிக்ஸ் வீழான்' படம் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.

விஜய் சேதுபதி நடித்த 'நானும் ரவுடி தான்', 'சிந்துபாத்' படங்களில் அவரின் மகன் சூர்யா சிறுகதாபாத்திரங்களில் நடித்திருந்தார். தற்போது அவர் 'பீனிக்ஸ் வீழான்' என்ற படத்தின் மூலம் நாயகனாக அறிமுகமாகிறார். இந்தப் படத்தை பிரபல சண்டை இயக்குநர் அனல் அரசு இயக்குகிறார்.

படம் குறித்து சூர்யா கூறுகையில், "இந்தப் படம் குறித்து,

அப்பா வேற, நான் வேற. அவருடைய பெயரை நான் எந்த இடத்திலும் உபயோகப்படுத்தக்கூடாது என நினைக்கிறேன். அதனால்தான், படத்தில்கூட சூர்யா என என் பெயரை மட்டும்தான் பயன்படுத்த சொன்னேன்" - என்றார்.

## மீண்டும் பின்சென்ற வெளியீடு

கௌதம் மேனன் இயக்கத்தில் விக்ரம், ரிது வர்மா, சிம்ரன் உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகி உள்ள படம் 'துருவ நட்சத்திரம்'. 5 ஆண்டுகளாக தயாரிப்பில் இருந்தது. நேற்று முன்தினம் வெளியாகவிருந்த நிலையில் இந்தப் படத்தின்ட வெளியீடு மீண்டும் தள்ளிப்போயுள்ளது.



இந்நிலையில் ஆல் இன் பிக்சர்ஸ் நிறுவனத்திற்கு சிம்புவை வைத்து ஒரு படம் இயக்குவதாக கூறி ஒப்பந் தம் போட்டு முன் பணமாக ரூ.2.40 கோடி பெற்றுள் ளார் கௌதம் மேனன். ஆனால் படத்தை எடுக்க வில்லை, பணத்தையும் திருப்பி தரவில்லை. இதனால் இந்நிறுவனம் கௌதம் மேனன் மீது சென்னை உயர்நீதி மன்றில் வழக்கு தொடர்ந்தது. தங்களுக்கு தர வேண்டிய பணத்தை திருப்பி அளிக்காமல் துருவ நட்சத்திரம் படத்தை வெளியிட தடை விதிக்க கோரிக்கை வைத்தது.

வழக்கில் பணத்தை வழங்கிவிட்டு படத்தை வெளியிடுமாறு நீதிமன்று உத்தரவிட்டது. இதனால், படத்தின் வெளியீடு மீண்டும் தள்ளிப்போயுள்ளது.




## உதவும் ஜெயிலர் கூட்டணி

தெலுங்கு திரையுலகின் பிரபல நடிகரும் நடிகர் ரஜினிகாந்தின் நண்பருமான மோகன்பாபுவின் மகன் மஞ்சு விஷ்ணு தற்போது கண்ணப்பா என்ற படத்தை தயாரித்து, நாயகனாக நடித்து வருகிறார். இந்த படத்தில் நடிகர் பிரபாஸ் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். அதுமட்டுமல்ல இன்னும் மற்ற திரையுலகங்களை சேர்ந்த முன்னணி நடிகர்களும் நட்புக்காக முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். அந்த வகையில் மலையாளத்திலிருந்து மோகன்லாலும், கன்னடத்தில் இருந்து சிவராஜ்குமாரும் இந்த படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடிக்க இருக்கிறார்கள் என்கிற தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான ஜெயிலர் திரைப்படத்திலும் இவர்கள் இருவரும் நட்பு ரீதியாக சில நிமிடமே வந்து போகும் காட்சிகளில் நடித்து ரசிகர்களிடம் வரவேற்பையும் பெற்றனர். படத்தின் வெற்றிக்கும் அது பக்கபலமாக அமைந்தது. இதே பாணியில் கண்ணப்பா திரைப்படத்தின் வெற்றிக்கும் இந்த கூட்டணி உதவும் என எதிர்பார்க்கலாம்.

## சென்னை திரும்பிய அஜித்

மகிழ்திருமேனி இயக்கும் விடா முயற்சி படத்தில் நடித்து வருகிறார் அஜித்குமார். அவருடன் த்ரிஷா, சஞ்சய் தத் உள்ளிட்ட பலர் நடிக்கும் இந்த படத்தின் படப்பிடிப்பு அசர்பைஜானில் நடைபெற்று வந்தது. அங்கு காதல் மற்றும் சண்டைக் காட்சிகள் படமானது.

கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக அங்கு நடைபெற்று வந்த முதல்கட்ட படப்பிடிப்பு முடிவடைந்ததை அடுத்து அஜித் சென்னை திரும்பினார். அவர் விமான நிலையத்தில் வந்திறங்கிய காணொலி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. இதற்கடுத்து விடாமுயற்சி படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு விரைவில் டுபாயில் தொடங்கவுள்ளது. (ஐ)



| | | |
|---|---|---|
| திரைப்படம் | - | 80ஸ் பில்டப் |
| இயக்கம் | - | கல்யாண் |
| நடிகர்கள் | - | சந்தானம், கே.எஸ். ரவிக்குமார், சுந்தர் ராஜன், ஆனந்த்ராஜ், மொட்டை ராஜேந்திரன், முனீஸ்காந்த், ஆடுகளம் நரேன் |
| இசை | - | ஜிப்ரான் |




'குலேபகாவலி', 'ஜாக்பாட்' போன்ற நகைச்சுவையை மையப்படுத்திய படங்களை கொடுத்த இயக்குநர் கல்யாண், சந்தானத்துடன் இணைந்துள்ள படம் '80ஸ் பில்டப்'. 80களின் நாஸ்டால்ஜியா அம்சங்களைக் கொண்டு குடும்ப படமாக விளம்பரப்படுத்தப்பட்ட இப் படம் கலகலப்பை தந்ததா அல்லது கரகரவென கழுத்தை அறுத்ததா என்று பார்க்கலாம்.

80களில் தீவிர கமல் ரசிகராக இருப்பவர் சந்தானம். ஊரில் பெரிய ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர் அவரது தாத்தா சுந்தர்ராஜன். ஜமீன் குடும்பத்தில் பரம்பரை பரம்பரையாக இருந்து வரும் ஒரு பழங்கால கத்தியை திருட திட்டம் போடுகிறது மன்சூர் அலிகான், மனோ பாலா, மொட்டை ராஜேந்திரன் கும்பல். அந்த கத்தியை திருட வரும்போது அவர்களிடமிருந்த வைரங்களை கற்கண்டு என நினைத்து விழுங்கி, எதிர்பாராதவிதமாக இறந்து போகிறார் சுந்தர்ராஜன். இறந்துபோன சுந்தர்ராஜனின் உடலிலிருந்து வைரத்தை எப்படியாவது எடுக்க வேண்டும் என்று சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கிறது அந்த திருட்டு கும்பல். சந்தானத்தின் தூரத்து உறவாக சாவு வீட்டுக்கு வரும் ராதிகா ப்ரீத்தி மீது கண்டதும் காதலில் விழுகிறார் சந்தானம். தாத்தாவின் உடலை அடக்கம் செய்வதற்கும் தனது காதல் வலையில் நாயகியை விழ வைப்பதாக தனது தங்கையிடம் சபதம் போடுகிறார். சந்தானம் தனது சபதத் தில் ஜெயித்தாரா? மன்சூர் அலிகான் கும்பலுக்கு வைரம் மீண்டும் கிடைத்தா என்பதே '80ஸ் பில்டப்' படத்தின் திரைக்கதை.

இப்போது வரும் படங்களில் கதைக்கு தொடர்பு இருக்கிறதோ இல்லையோ பார்வையாளர்களின் நாஸ்டால்ஜியாவை தூண்டும் விதமாக ஏதேனும் ஒரு பழைய பாடலை இடம்பெற செய்வது எழுதப்படாத விதியாகிவிட்டது. அதே நினைப்பில் இந்தப் படத்துக்கு 80களில் நடப்பது போன்ற கதைக்களத்தை இயக்குநர் தேர்வு செய்தாரா என்று தெரியவில்லை. படத்துக்கும் 80களின் பின்னணிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. சமகாலத்தில் ஏதேனும் ஒரு கிராமத்தில் நடப்பது போன்று படத்தை எடுத்திருந்தாலும் எந்த மாற்றமும் இருந்திருக்காது.

சரி, சந்தானம் படமென்றதும், ரசிகர்கள் எதிர்பார்த்து வரும் நகைச்சுவை காட்சிகளாவது சிரிப்பது




போல இருக்கிறதா என்று கேட்டால், அங்கொன்றும் இங்கொன்றுமாக சில காட்சிகள் கைகொடுத்திருக்கின்றனவே தவிர, பெரும்பாலானவை நகைச்சுவை என்ற பெயரில் கழுத்தறுக்கின்றன. நேரடியாக கதைக்குள் செல்லாமல் தேவைற்ற காட்சிகளால் நிரப்பப்பட்டு, 20 நிமிடங்களுக்குப் பிறகே பிரதான கதைக்குள் படம் நுழைகிறது. அது வரை வரும் அண்ணன் - தங்கச்சி சண்டை, சந்தானத்துக்கும் திரையரங்க அதிபராக வருபவருக்கும் இடையே நடக்கும் சண்டை என தொடர்பில்லாமல் செல்கிறது. சுந்தர்ராஜனின் மரணத்துக்குப் பிறகு படத்தை ஓரளவு உட்கார்ந்து பார்க்க வைப்பதற்கு காரணம் ஆடுகளம் நரேனும், 'மஞ்சக் கிளி'யாக வரும் ஆனந்தராஜூம் வரும் காட்சிகள்தான்.

சந்தானம் வழக்கமாக இதுவரை என்ன செய்தாரா அதையேதான் இதிலும் செய்திருக்கிறார். சொல்லப் போனால் தனது பலமான ஒருவரி நகைச்சுவைக்குகக்கூட அவர் இதில் பெரிதாக மெனக்கெடவில்லை என்று தோன்றுகிறது. நாயகியாக வரும் ராதிகா ப்ரீத்தி, சுந்தர்ராஜன், மன்சூர் அலிகான், மொட்டை ராஜேந்திரன், மனோபாலா, மயில்சாமி ஆகியோர் ஒரு நகைச்சுவை படத்துக்கு தேவையானதை கொடுத்துள்ளனர். கே.எஸ். ரவிக்குமார், முனிஷ்காந்த், ரெடின் கிங்ஸ்லி படம் முழுக்க வந்தாலும் அவர்களுக்கு சொல்லிக் கொள்ளும்படி ஒரு காட்சியும் இல்லை. சந்தானத்தின் தங்கையாக வருபவர் மிகை நடிப்பில் எரிச்சலூட்டுகிறார்.

'ஆடுகளம்' நரேன் - ஆனந்தராஜ் கூட்டணிதான் பல இடங்களில் படத்தை காப்பாற்றுகிறது. நரேனுக்கு இதுவரை இல்லாத புதிய கதாபாத்திரம். படம் முழுக்க குடிகாரராக வரும் அவர் பேசும் வசனங்களும் பெண் வேடத்தில் வரும் ஆனந்தராஜூடன் சேர்ந்து அவர் லூட்டிகளும் அதகளம். இந்த இருவர் கூட்டணி வரும் காட்சிகள் மட்டும் படத்தில் நினைவில் கொள்ளத்தக்கவையாக இருக்கின்றன.

ஜிப்ரான் இசையில் 'ஒய்யாரி' பாடல் மட்டுமே மனதில் நிற்கிறது. ஏற்கெனவே அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் திரைக்கதையை இன்னும் ஐந்தடி கீழே இறக்கிவிடுகின்றன பாடல்கள். பின்னணி இசையில் சொல்லிக் கொள்ளும்படி ஒன்றும் இல்லை. ஜாகோப் ரத்தினராஜின் ஒளிப்பதிவு படத்தை வண்ணமயமாக வைத்திருக்க உதவியுள்ளது.

நகைச்சுவை படத்தில் லொஜிக் பார்க்கக்கூடாது என்ற லொஜிக்கே இல்லாத வாதத்தின்படி, மூளையை கழட்டி வைத்துவிட்டு படத்தை பார்த்தாலும், படத்தில் உள்ள அபத்தங்கள் அப்பட்டமாக பல்லிளிக்கின்றன. உதாரணமாக சாவு வீட்டில் சடலத்தை வைத்துக் கொண்டு செய்யும் காட்சிகள், பிணத்தை அலேக்காக தூக்கிக் கொண்டு மைதானத்துக்கு சென்று சண்டை போடுவது, கடைசியில் பிணம் காணாமல் போவதாக வரும் காட்சி என இஷ்டத்துக்கு வைக்கப்பட்டுள்ளன. அதுவரை நகைச்சுவையாக சென்றுகொண்டிருந்த படத்தில் சம்பந்தமே இன்றி எதற்காக கடைசியில் ஒரு சோகப் பாடல்?

நகைச்சுவையை மையப்படுத்தி வரும் படங்கள் இவ்வாறான அபத்தக் களஞ்சியங்களாக இருப்பது தமிழில் தொன்றுதொட்டு நடந்து வருவதுதான் என்றாலும், ஓடிடி தளங்களின் வருகைக்குப் பிறகு பார்வையாளர்களின் ரசனைகள் விரிவடைந்தபிறகும் திரைக்கதையை நம்பாமல் ஆங்காங்கே சிரிக்க வைக்கும் ஓரிரு காட்சிகளை நம்பி ஒரு முழு படத்தையே ஒப்பேற்றுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.